நிமிர்வோம்
தடைகளைத் தகர்த்து...

திராவிடர் விடுதலைக் கழக மாத இதழ்
பிப்ரவரி 2018 / ரூ.20
www.dvkperiyar.com
nimirvomdvk@gmail.com

ஆசிரியர் குழு
கொளத்தூர் மணி
விடுதலை இராசேந்திரன்

அலுவலக நிர்வாகம்
சூலூர் பன்னீர்செல்வம்
இரா.செந்தில்
ந. அய்யனார்

இதழ் வடிவமைப்பு
வெல்கின் கணினி

அட்டை வடிவமைப்பு
க. பகலவன்

அலுவலக முகவரி
95, டாக்டர் நடேசன் சாலை
அம்பேத்கர் பாலம்
மயிலாப்பூர், சென்னை 600 004
தொலைபேசி எண்:
044-24980745

அனைத்துத் தொடர்புகளுக்கும்
இரா. உமாபதி
72992 30363

# ஆண்டாளும் ‘தேவதாசி’ மரபும்

‘ஆண்டாள்’ தேவதாசி மரபைச் சார்ந்தவராக இருக்கலாம் என்று கவிஞர் வைரமுத்து, ஆய்வாளர் ஒருவர் கருத்தை மேற்கோள் காட்டியதற்காக வைணவப் பார்ப்பனர்கள் வீதிக்கு வந்து போராடிய காட்சிகளை தமிழகம் பார்த்தது.

கவிஞர் வைரமுத்து கூறிய கருத்தில் மாறுபாடு இருந்தால் அதை ஆதாரங்களோடு மறுக்கலாம்; விவாதங்களும் உரையாடல்களும் நடத்தலாம். ஆனால், ‘ஆண்டாள்’ குறித்தோ அல்லது ‘வேதமதம்’ குறித்தோ எவரும் விமர்சிக்கக்கூடாது என்பதும், அது இந்துக்களுக்கு விரோதம் என்றும் ஜீயர்கள் வன்முறை மிரட்டல்களில் இறங்குவதும்தான், இவர்கள் பேசும் ‘சகிப்புத் தன்மை’ என்பதன் இலக்கணமா என்று கேட்கிறோம்.

‘ஆண்டாள்’ என்பதே ஒரு கற்பனை என்று வைணவப் பார்ப்பனர்களின் அரசியல் குரு இராஜகோபாலாச்சாரியார் எழுதிய கட்டுரையை இந்த இதழில் வெளியிட்டிருக்கிறோம். ‘திரிவேணி’ என்ற வைணவர்களுக்கான இதழே இந்தக் கட்டுரையையும் 1946ஆம் ஆண்டில் வெளியிட்டிருக்கிறது. ஜீயர்கள் இதற்கு என்ன பதிலைக் கூறப் போகிறார்கள்?

பக்தி இலக்கியங்கள்தான் தமிழை வளர்த்தன என்று அவ்வப்போது தமிழ்நாட்டின் பக்தி மேடைகளிலிருந்து குரல்கள் ஒலித்து வருகின்றன. இலக்கியம் என்றாகிவிட்ட பிறகு, இலக்கிய ஆய்வுகளுக்கும், அவை உட்பட்டாக வேண்டும். ஆனால் ஆய்வுகளுக்கு உட்படுத்துவதே ‘மத எதிர்ப்பு’ என்றால், பக்தியைப் பரப்பும் பாடல்களை இலக்கியத்திலிருந்து துண்டித்துவிட வேண்டும். இலக்கியங்களும் ‘பக்தி புனிதங்களும்’ எப்படி ஒன்றாக முடியும்?

சங்க இலக்கியங்கள் பழங்கால தமிழர்களின் வாழ்நிலையைப் படம் பிடிப்பதாக தமிழறிஞர்கள் பலரும் ஏற்றுக் கொண்டுள்ளார். சங்கப் பாடல்கள் எவற்றிலும் கடவுளை வாழ்த்தும் பாடல்கள் இருந்ததில்லை. கடவுள் வாழ்த்து என்பது தமிழர் மரபில் இருந்ததில்லை என்பதே சங்கப் பாடல்களிலிருந்து கிடைத்திடும் உண்மை. சங்கப் பாடல்கள் அதன் உள்ளடக்கம் மற்றும் பாடல் வரிகளின் எண்ணிக்கை அளவு கொண்டு தொகுக்கப்பட்ட காலத்தில் தான். ‘கடவுள் வாழ்த்துப் பாடல்கள்’ அதில் சேர்க்கப் பெற்றுள்ளன.

‘‘சங்கப் பாடல் பொருள் வகையாலும் பாடலடிகளின் அளவைக் கொண்டும் தொகுக்கப் பெற்ற காலத்தில் பாடிச் சேர்க்கப் பெற்றனவே கடவுள் வாழ்த்துப் பாடல்கள். ஆகவே இவற்றை சங்கப்பாடல்களுடன் ஒருங்கு வைத்து எண்ண இடமில்லை’’ – என்கிறார், சங்ககாலத் தமிழரின் வழிபாடுகள் குறித்து ஆய்வு செய்த பேராசிரியர் மு.சண்முகம்பிள்ளை. (நூல்: உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்ட ‘சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும்’)

பார்ப்பனர்களின் ‘வேதப் பண்பாடு’ சூழ்ச்சியாக ஊடுருவி தமிழர் மரபுகளை பார்ப்பனியமாக்கிய நிலையில் பக்தி இலக்கியங்களை வேதப் புனிதமாக்கியது பார்ப்பனியம்.

‘தேவதாசி மரபை’ புனிதமாகப் போற்றியதும் பார்ப்பனர்கள்தான்; அந்த மரபு இழிநிலையுற்று புரோகிதர்கள் ‘பெரிய மனிதர்களின்’ பாலியல் வெறிக்கு ‘தேவதாசி’கள் பலியாக்கப்பட்டபோது, தேவதாசி ஒழிப்புச் சட்டம் வந்தது. அந்த சட்டத்துக்கு இராஜாஜியும், சத்தியமூர்த்தியும், சங்கராச்சாரியும் எதிர்ப்பு தெரிவித்த வரலாறுகளை மறந்துவிட்டு இப்போது ‘தேவதாசி’ என்பது இழிவானது என்று பார்ப்பனர்கள் பேசுவது இவர்களின் இரட்டை வேடத்தையே அம்பலப்படுத்துகிறது.

**(இந்த இதழில் ‘ஆண்டாள்’ ‘தேவதாசி’கள் குறித்த சிறப்புக் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.)**



# ‘தேவதாசி’ முறையை உருவாக்கியது யார்?

**வாலாசா வல்லவன்**

***சைவத்தைப் பரப்புவதற்கு பாடுபட்டவர்கள் நாயன் மார்கள். இவர்கள் 63 பேர். வைணவத்தைப் பரப்பு வதற்காகப் பாடுபட்டவர்கள் ஆழ்வார்கள். இவர்கள் 12 பேர். இதில் ஆண்டாள் என்பவரும் ஒருவராவார்.***

*ஆண்டாள் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்ததாக வரலாற்றில் எழுதியுள்ளனர். கி.பி. ஏழாம் நூற்றாண்டு என்பது தமிழகத்தில் களப்பிரர்களை அழித்துவிட்டு பல்லவர்கள் கோலோச்சிய காலம். அதாவது சமணத்தையும், பௌத்தத்தையும் அழித்து சைவ, வைணவ சமயங்களைப் புதுப்பிக்கத் தொடங்கிய காலம்.*

*களப்பிரர் ஆட்சிக் காலத்தில் பார்ப்பனர் களுக்கு இருந்த உரிமைகள் நீக்கப்பட்டன. அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த நிலங்கள் பறிக்கப்பட்டு உழு குடிகளுக்கு கொடுக்கப் பட்டது. எனவே வரலாற்றில் அதை ‘இருண்ட காலம்’ என்று எழுதிவிட்டனர். குப்தர்கள் ஆட்சி ‘பொற்காலம்’ என்று படிக்கிறோம். என்ன காரணம்? பார்ப்பனர்களுக்கு பணமும், பொருளும் வாரிவாரி வழங்கப்பட்டன. இதிகாசங்களில் இடம் பெற்றிருந்த பெயர் களெல்லாம் ஊர்ப் பெயர்களாக மாற்றப்பட்டன. ஆகவே அது பொற்காலம் என அழைக்கப்படுகிறது. சுருக்கமாகச் சொன்னால், பார்ப்பனர்கள் சுகமாக இருந்தால் அது ‘பொற்காலம்’. பார்ப்பனர்களுக்கு தொல்லைகள் இருந்தால் அது ‘இருண்ட காலம்’ என்று எழுதி விடுகிறார்கள். ‘களப்பிரர் ஆட்சியில் தமிழகம்’ என்ற நூலை மயிலை சீனி. வேங்கடசாமி சான்றுகளுடன் எழுதியுள்ளார். நல்ல நீதி நூல்களெல்லாம் அந்தக் காலத்தில் தான் எழுதப்பட்டுள்ளன.*

*ஆண்டாளுக்கு முந்தைய நூற்றாண்டில் வாழ்ந்த திருமங்கை ஆழ்வார் என்பவர், நாகப்பட்டினத்தில் இருந்த பொன்னால் செய்யப்பட்டிருந்த மிகப் பெரிய புத்தர் சிலையைத் திருடி வந்து அதை விற்று, அதனால் கிடைத்தப் பணத்தால் திருவரங்கம் கோயிலுக் குக் கோபுரம் கட்டினார் என்று அவருடைய வரலாறு கூறுகிறது. (டாக்டர் மா. இராச மாணிக்கனார் - பல்லவர் வரலாறு - பக்கம். 294)*

*ஆண்டாள் ஒரு துளசி செடியின் அடியில் அனாதைக் குழந்தையாகக் கிடந்தவள் என்றும், திருவில்லிப்புத்தூரில் வாழ்ந்து வந்த பெரியாழ்வார் என்னும் வைணவப் பார்ப்பனர், அந்தக் குழந்தையை எடுத்து வளர்த்து வந்தார் என்றும் அவருடைய வரலாற்றில் கூறப்பட் டுள்ளது.*

ஆண்டாள் சிறு வயது முதலே கண்ணனையே காதலனாக ஏற்றுக் கொண்டு கோயிலில் எந்த நேரமும் வழிபாடு செய்து வந்ததாகக் கூறப்படுகிறது.

ஆண்டாள் எழுதியது திருப்பாவை : முப்பது பாடல்கள். இப்பாடல்கள் இன்றும் மார்கழி மாதத்தில் பசனைப் பாடல்களாகப் பாடப்படுகின்றன. இவர் எழுதிய மற்றுமொரு தொகுப்பு நாச்சியார் திருவாய்மொழி ஆகும். இது 143 பாடல்கள் கண்ணன் மீது காதல் இரசம் சொட்டச் சொட்ட பாடப்பட்ட பாடல்கள் ஆகும். இப்பாடல்கள் நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தில் முதல் ஆயிரம் பாடல்களில் சேர்க்கப்பட்டுள்ளன. இவருடைய கொள்கையை "திருப்பாவை" இரண்டாவது பாடலிலேயே விளக்கியுள்ளார். அதாவது, "தீக்குறளை சென்றோதோம்" என்பதாகும். திருக்குறளை முதன்முதலாகத் தீக்குறளாகக் கூறியவர் ஆண்டாள்தான். (அப்படித்தான் செத்துப் போன சங்கராச்சாரி பொருள் கூறினார்)

இவர் 15 வயது அடைந்தவுடன் பெரியாழ்வாரின் கனவில் கண்ணன் தோன்றி ஆண்டாளை திருவில்லிப்புத்தூரிலிருந்து அழைத்து வந்து திருவரங்கக் கோயிலில் விடும்படி கூறினாராம். மணமகள் கோலத்துடன் திருவரங்கம் கோயிலுக்குள் அனுப்பப்பட்டவள் வெளியில் வரவே இல்லை; இறைவனோடு அய்க்கியமாகிவிட்டாள் என்று அவர்கள் கூறுகின்றனர்.

'தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்' என்ற நூலில் கே.கே. பிள்ளையும் இதை உறுதி செய்திருக்கிறார்.

"ஆண்டாள் நாச்சியார் இளம் வயதிலேயே திருவரங்கத்துக் கண்ணன் மேல் ஆறாதக் காதல் கொண்டு பல அகத்துறைப் பாடல்கள் பாடியுள்ளார். அக்காதல் முதிர்ந்து திருவரங்கம் கோயில் கருவறைக்குள் மணப் பெண் கோலத்துடன் நுழைந்து கண்ண பெருமானுடன் கலந்து விட்டாள் எனக் கூறுவர்." (பக்.234)

நந்தனாருக்கு ஏற்பட்ட கதிதான், வள்ளலாருக்கு ஏற்பட்ட கதிதான் ஆண்டாளுக்கும் ஏற்பட்டுள்ளது என்பது தெரிகிறது. நந்தனார் ஆதிதிராவிட விவசாயக் கூலி ஒரு பார்ப்பானிடம் கூலி வேலை செய்து வந்தார். அவர் சிதம்பரம் சென்று நடராசனைப் பார்க்க ஆசைப்பட்டார். அவர் சிதம்பரம் நகர எல்லைக்குச் சென்று சுற்றிச் சுற்றி வருகிறார். இராசவீதிகளில் ஆதி திராவிடர்கள் செல்ல முடியாத காலம் அது. நடராசன் நந்தன் முன் தோன்றி, "தீ வேள்வியில் புகுந்து இவ்வுடலை துறந்து பொன்மேனி பெற்று என்னை அடைவாய்" என்று கூறினாராம்.

தீமூட்டி அதில் புகுந்த நந்தன் என்ன ஆகியிருப்பார் என்பது அனைவருக்கும் தெரியும். அந்தணக் கோலம் பூண்டு இறைவனடி சேர்ந்தார் என எழுதப்பட்டுள்ளது.

சிவன் கோயிலில் நுழைய தீண்டப்படாத சாதியினர் ஆதி திராவிடர்கள் ஆசைப்படக் கூடாது. அப்படி மீறி ஆசைப்பட்டால் எரித்து விடுவோம் என்ற எச்சரிக்கைதான் நந்தனார் கதை. அதை உடைத்தவர்கள் சுயமரியாதை இயக்கத்தினரும், நீதி கட்சியினரும்தான். 1930இல் நந்தன் விழா என்ற பெயரில் சிதம்பரம் இராச வீதிகளில் ஆதிதிராவிடர்களை அழைத்துச் சென்றனர்.

5.4.1929இல் குத்தூசி குருசாமி, ஈரோடு ஈஸ்வரன் கோயிலுக்குள் ஆதி திராவிடத் தோழர்கள் நால்வரை அழைத்துச்சென்றார். அதற்காக வழக்கு தொடுக்கப்பட்டு ஈரோட்டில் ஓர் ஆண்டு நடைபெற்றது. அப்போது ஆகமம் தெரிந்தவரை அழைத்து வரச் சொன்னார் நீதிபதி. அவ்வாறே அழைத்து வரப்பட்டார். அவர் ஆகமத்தைப் படித்து நீதிபதிக்கு கூறினார். ஆகமப்படி ஆதி திராவிடர்கள் சிவன் கோவிலின் உச்சி கோபுர கலசத்தைப் பார்த்து கும்பிட்டாலே மூலவரைப் பார்த்து கும்பிட்டதற்கு சமம். அவர்கள் கோயிலுக்குள் வரக்கூடாது என்று கூறினார். கீழமை நீதிமன்றம 6 மாத தண்டனை விதித்தது. உயர்நீதிமன்றத்தில் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

வைரமுத்து முழுக்க முழுக்க ஆண்டாளைப் புகழ்ந்துதான் பேசினார். அவர் ஆண்டாள், தேவதாசி சமூகப் பெண்ணாக இருக்கலாம் என்று அமெரிக்காவில் உள்ள

## சோழர் காலத்தில் அடிமைகள் விற்பனை நடந்தது.

இண்டியானா பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவரின் ஆய்வை மேற்கோள் காட்டிப் பேசியுள்ளார். பா.ஜ.க.வின் எச்.ராசா இதைப் பிரச்சினை ஆக்கினார். ஏதாவது ஒரு வாய்ப்புக் கிடைத்தால் அதை வைத்துக் கொண்டு மதக் கலவரத்தைத் தூண்டி இந்துத்துவா உணர்வை யூட்டி ஆட்சியைப் பிடித்து விடலாம் என்பதே பா.ஜ.க.வின் கனவு. இதற்கு வைரமுத்து பலியாக்கப்பட்டார்.

தேவதாசி முறையை உருவாக்கியவர்கள் யார்? அவர்களுக்கு காலங்காலமாக ஆதரவாக இருந்தவர்கள் யார்? என்ற வரலாற்றை மறந்துவிட்டு அவர்கள் பேசுகிறார்கள்.

தமிழ்ச் சமூகத்தில் பரத்தையர் ஆதிகாலந்தொட்டே இருந்துள்ளனர். 'பரத்தை' என்கிற சொல் தொல்காப்பியத்தில் எட்டு நூற்பாக்களில் இடம் பெற்று இருப்பதையும் கற்பு ஆணுக்கு வலியுறுத்தப்படாமல் பெண்ணுக்கு மட்டுமே வலியுறுத்தப்பட்டுள்ளதையும் முனைவர் நர்மதா, தம்முடைய 'தமிழகத்தில் தேவரடியார் மரபு பன்முக நோக்கு' என்ற ஆய்வு நூலில் பக்கம் 3இல் கூறியுள்ளார்.

பரத்தையர் என்பது வேறு தேவதாசி என்பது வேறு. முன்னவர் பணத்திற்காக ஆண்களுடன் கூடுபவர்கள் பின்னவர்கள். கோயில் பணியைச் செய்பவர்கள். சங்க காலத்தில் தேவதாசி முறை நடைமுறையில் இல்லை. ஏன் என்றால் அப்போது பெருங் கோயில்கள் தோன்றவில்லை.

பல்லவர்கள் ஆட்சிக் காலத்தில்தான் தமிழகத்தில் கற்கோயில்கள், பெருங்கோயில்கள் தோன்றின. அப்போதே தேவரடியார் முறையும் தோன்றியுள்ளதை பல்லவர் வரலாற்றை எழுதிய டாக்டர் மா. இராசமாணிக்கனார் சான்றுகளுடன் எழுதியுள்ளார்.

"பல்லவர் காலத்துக் கோயில்களில் இசையும் நடனமும் வளர்க்கப்பட்டன. இவை இரண்டும் சமயத்தின் உறுப்புகளாகக் கருதப் பட்டன. பல கோயில்களில் இவ்விரண்டையும் வளர்க்கப் பெண்கள் இருந்தனர். அவர்கள் **அடிகள்மார், மாணிக்கத்தார், கணிகையர்** முதலிய பெயர்களால் குறிக்கப் பெற்றனர். முத்தீச்சரா கோயிலில் மட்டும் 42 அடிகள்மார் இருந்தனர். திருவொற்றியூர்க் கோயிலிலும் குடந்தை முதலிய பல இடங்களிலும் அடிகள்மார் பலர் இருந்தனர். கி.பி. ஏழாம் நூற்றாண்டில் தமிழகக் கோயில்களில் அடிகள் மார் இருந்து, இசையையும், கலையையும் வளர்த்துள்ளனர் என்பதை பல்லவர் வரலாறு நூலில் பக்கம் 305இல் சான்றுகளுடன் குறித் துள்ளார். (தமிழ் குடிஅரசுப் பதிப்பக வெளியீடு)

பல்லவர்கள் காலம் முதலே தமிழகத்தில் ஆரியப் பார்ப்பனர்கள் வேகமாகப் பரவி உள்ளனர். அரசர்களை ஆட்டி வைத்துள்ளனர். 'அசுவமேதயாகம் அப்பொழுதே தமிழகத்தில் நடைபெற்றுள்ளது. முற்காலப் பல்லவ மன்னன் சிவஸ்கந்த வர்மன் தன்னை, 'அக்நிஷ்டோம-வாஜபேய-அஸ்வமேதராஜ்' என்று பட்டயத்தில் குறித்துக் கொண்டுள்ளான். (டாக்டர் மா.இராச மாணிக்கனார் பல்லவர் வரலாறு, பக்.238)

பார்ப்பனர்களுக்கு தேவதானம் என்ற பெயரில் பெருமளவு நிலங்கள் அப்போது வழங்கப்பட்டுள்ளன. பாரதக் கதை ஊர் ஊராக நடத்தப்பட்டுள்ளது. ஆரியக் கூத்து என்ற பெயரில் நடத்த நிலங்கள் மானியமாக விடப்பட்டுள்ளன.

புத்தர் திருமாலின் அவதாரம் என்று பல்லவர் காலத்தில்தான் புனையப்பட்டுள்ளது.

"இறுதியாக பௌத்த சமயம் தேய்ந்து மறைந்தே போயிற்று. புத்தரும் திருமாலின் அவதாரங்கள் பத்தினுள் ஒன்றாகச் சேர்க்கப் பட்டார்." (டாக்டர் கே.கே.பிள்ளை, பக்.221)

பல்லவர் காலத்திற்குப் பிறகு ஏற்பட்ட சோழர் ஆட்சிக் காலத்தில் பார்ப்பனர் ஆதிக்கம் மிகவும் அதிகரித்தது.

"தஞ்சைப் பெருவுடையார் கோயில் திருத்தொண்டுக்காக இராசராசன் நானூறு

தேவரடியார்களை அமர்த்தினான் என்றும், அவர்கள் அனைவருக்கும் தனித் தனி வீதிகள் வகுத்து, அவற்றில் வரிசை வரிசையாக வீடுகள் அமைத்துக் கொடுத்தான் என்றும் தஞ்சாவூர் கோயில் கல்வெட்டு ஒன்று கூறுகிறது." ('தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்' என்ற நூலில் கல்வெட்டு ஆதாரங்களுடன் கே.கே.பிள்ளை சுட்டிக்காட்டி உள்ளார். பக்.336)

"கோயில்களில் மார்கழி தோறும் திருவெம்பாவை ஓதப்பட்டு வந்தது. அதற்கெனவே தேவரடியார்கள் அமர்த்தப்பட்டிருந்தனர். வைணவத் திருப்பாடல்களாக திருப்பள்ளியெழுச்சியும் திருவாய்மொழியும் பாராயணம் செய்யப்பட்டன. தேவாரத் திருப்பதிகங்கள் ஓதுவதற்குப் பல நிவந்தங்கள் அளிக்கப்பட்டிருந்தன." (மேற்கண்ட நூல் பக்.338)

உண்மை இவ்வாறு இருக்க வைரமுத்து மீது பாய்வது ஏன்?

சோழர்கள் காலத்தில் தேவரடியார்களுக்கு அவர்கள் உடலில் சூலம் பொறிக்கும் வழக்கம் இருந்ததை ஆய்வாளர் நர்மதா கல்வெட்டு சான்றுகளுடன் எழுதியுள்ளார்.

"தேவரடியார்களுக்கு அவர்கள் திருக்கோயிலைச் சார்ந்தவர்கள் என்பதற்கு அடையாளமாகச் 'சூலம்' இலாஞ்சனையை (இலச்சினை) அவர்கள் உடலில் பொறிக்கும் வழக்கம் இருந்தது. திருவல்லம் உடையார் திருப்பாதத்திலே உதகம் பண்ணித் திரிசூலம் சாட்டித் தேவரடியாக ஆகிவிட்டேன் என்றச் செய்தி திருவல்லம் கல்வெட்டில் இடம் பெற்றுள்ளது." (முனைவர் நர்மதா தமிழகத்தில் தேவரடியார் மரபு நூல், பக்.72-73)

பெண்களைக் கோயிலுக்கு பொட்டுக் கட்டும் வழக்கம் மதுரை நாயக்கர் ஆட்சிக் காலத்திலும் நடைமுறையில் இருந்ததை முனைவர் நர்மதா தன் ஆய்வில் கூறியுள்ளார். (மேற்கண்ட நூல் பக்.75)

"சோழ மன்னர்கள் கோயில்களுக்குத் தேவதானம் அளிக்குங்கால், சில சமயங்களில் அவ்வூரிலுள்ள குடிகளையும் அவர்களுக்குரிய பழைய உரிமையோடு அக்கோயிலுக்குக் கொடுத்து விடுவதும் உண்டு. அத்தகைய தேவதானம் அக்காலத்தில் 'குடி நீங்கா தேவதானம்' என்று வழங்கி வந்தது. அதாவது குடிமக்களோடு சேர்த்து கோயிலில் இருக்கும் பார்ப்பனர்களுக்கும் தானமாக வழங்கிவிடுவது." (தி.வை. சதாசிவ பண்டாரத்தார் - பிற்காலச் சோழர் வரலாறு, பக்.528-529, தமிழ்க் குடிஅரசுப் பதிப்பக வெளியீடு)

சோழர் ஆட்சிக் காலங்களில் மக்கள் தங்களை அடிமைகளாக விற்றுக் கொள்ளும் வழக்கம் இருந்துள்ளது.

"அக்காலத்தில் ஆண் மக்களும் பெண் மக்களும் செல்வர்களிடத்தும், கோயில்களிலும், மடங்களிலும் தம்மை விற்றுக் கொண்டு அடிமைகளாயிருந்து தொண்டாற்றி வந்தனர் என்பது பல கல்வெட்டுகளால் நன்கறியக் கிடக்கின்றது. கொடிய பஞ்சம் தோன்றி நாட்டு

**"தஞ்சைப் பெருவுடையார் கோயில் திருத்தொண்டுக்காக இராசராசன் நானூறு தேவரடியார்களை அமர்த்தினான்**

மக்களை வருத்திய காலத்தில் அவர்கள் தம்மையும் தம் குடும்பத்தினரையும் பாதுகாக்க இயலாமல் தங்களை விற்றுக் கொண்டு அடிமைகளாக உயிர் வாழும்படி நேர்ந்தது என்பதைச் சில கல்வெட்டுகள் குறிப்பிடுதல் காணலாம். அன்றியும், வழிவழியாக அடிமைகளாக வாழ்ந்து வந்த குடும்பத்தினரும் உண்டு என்பது சில கல்வெட்டுகளால் புலப்படுகிறது." (பிற்காலச் சோழர் வரலாறு தி.வை. சதாசிவப் பண்டாரத்தார், பக்.547)

சோழர்கள் ஆட்சிக் காலத்தில் உடன்கட்டை ஏறும் பழக்கமும் இருந்துள்ளது.

"பெரும் புகழ் படைத்த முதல் இராசராச சோழனுடைய அருமைத் தாயார் வானவன் மாதேவியார், தம் ஆருயிரனைய கணவனார் சுந்தர சோழனார், காஞ்சி மாநகரில் பொன் மாளிகையில் இறந்த ஞான்று அவ்வரசர் பெருமானைப் பிரிந்து உயிர் வாழ விரும்பாமல் உடன்கட்டையேறி ஒருங்கே மாய்ந்த வரலாறு,

திருக்கோவிலூரில் முதல் இராசராசன் ஆட்சிக் காலத்தில் ஆசிரியப்பாவில் வரையப் பெற்ற கீழ்க்கண்ட கல்வெட்டொன்றில் படிப்போர் உள்ளம் உருகக் கூறப்பட்டுள்ளது.'' (மேற்கண்ட நூல், பக்.544)

மேலும் சில சோழ அரசிகள் உடன் கட்டை ஏறி உள்ளனர். ஆரியப் பார்ப்பனர் களின் பழக்கவழக்கங்களை தமிழகத்தில் திணித் தவர்கள் சோழ அரசர்களே. இவர்களைத் தான் புதிய தமிழ்த் தேசியர்கள் புகழ்ந்து வருகின்றனர்.

சங்கராச்சாரியார்களைப் பற்றித் தெரிந்து கொள்வோம்.

சங்கரமடங்கள் என்றாலே வர்ண தருமத்தைக் காப்பவர்கள்தான். பௌத்த, சமண மதங்களை அழித்து, இந்துத் தர்மத்தை நிலை நாட்டவே ஆதிசங்கரன் தோற்றுவித்த சங்கர மடங்களில் காஞ்சி மடம் இல்லை என்பது வரலாறு.

பாரதியார் பகவத்கீதைக்கு உரையெழு தினார். அதன் முன்னுரையில் "யாகங்களை அழிக்க வந்த பௌத்த, சமண சமயங்களை சங்காரம் செய்ய சிவபெருமானே ஆதி சங்கரனாக அவதாரமெடுத்தார்'' என்று எழுதியுள்ளார்.

சங்கராச்சாரிக்கு தமிழில் பேசினால் தீட்டு ஒட்டிக் கொள்ளுமாம். உடனே குளிக்க வேண்டுமாம். இந்து மதம் எங்கே போகிறது? என்கிற நூலில் அக்னிஹோத்ரம் இராமானுஜ தாத்தாச்சாரியார் சங்கராச்சாரியாருடன் நெருக்கமான தொடர்பில் இருந்தவர் அவர். சங்கராச்சாரியாரைப் பற்றி செய்திகளை கூறியுள்ளார்.

"... இதோ பாரும் தாத்தாச்சாரி அவரை பார்க்கறதுக்கு நேக்கு ஒண்ணுமில்லை. பார்த்தால் ஏதாவது கேப்பார். பதிலுக்கு நான் தமிழ் பேச வேண்டிவரும். நோக்குதான் தெரியுமே... தமிழ் பேசினால் எனக்கு தீட்டு, மறுபடியும் ஸ்நானம் பண்ணனும். பூஜைக்கு நேரமாயிடுத்துல்யோ... அதனால் நான் மௌனம் அனுஷ்டிக்கிறேன்ன சொல்லி அனுப்பிச் சிடுங்கோ'' என்று கூறியுள்ளார். (பக்.102)

தமிழ்ப் பேசினால் தீட்டு எனக் கூறும் சங்கராச்சாரி, தமிழ்நாட்டில் மடத்தை வைத்துக் கொண்டிருக்கலாமா?

**'தீண்டப்படாத மக்களுக்கு**
**கோபுர தரிசனம்**
**மட்டுமே போதும்'**
**என்று தீர்ப்பளித்தது நீதிமன்றம்.**

தமிழில் பூசை செய்வயையும், தமிழன் பூசை செய்வதையும் சங்கராச்சாரி ஏற்க மறுத்தார் என இராமானுஜ தாத்தாச்சாரியார் கூறியுள்ளார்.

மதுரை ஆதினம் தமிழில் பூசை செய்யவும், தமிழன் பூசை செய்யவும் வேண்டும் என ஒரு கோரிக்கையை சங்கராச்சாரியிடம் முன் வைத்தார்.

"சூத்ராள் பூசை பண்றது, அதுவும் தமிழ்ல பண்றது ஏத்துக்க முடியாது என்றார் மகா பெரியவர்.'' ('இந்துமதம் எங்கே போகிறது' நூல் பக்.119)

பெண்களுக்கு சொத்தில் பங்கு கொடுக்கக் கூடாது என்ற கொள்கை உடையவர்கள் சங்கராச்சாரியார்கள்.

"இதப் பார்த்தீரா... ஸ்தீரிகளுக்கு சொத்துல பாத்யம் கொடுக்கப் போறாளாம். அவாளுக்கு சொத்துல பங்கு கொடுத்தா என்ன ஆகும் தெரியுமா? இஷ்டபட்டவாகூட ஸ்திரீகள் ஓடிப் போய்டுவா. அபாண்டமா, அபச்சாரமா போயிடும்'' என அந்தப் பேப்பரைக் காட்டியபடி வியாக்யானம் செய்து கொண்டிருந்தார் மகா பெரியவர். ('இந்துமதம் எங்கே போகிறது' பக்.110)

சங்கராச்சாரி தமிழை தமிழனை பெண்களை எப்போதும் மதிப்பதே இல்லை.


தமிழ்த்தாய் வாழ்த்துக்கு குட்டி சங்கராச்சாரி எழுந்து நிற்காத காரணம் இப்போது புரிகிறதா?

ஆண்டாள் முதல் சங்கராச்சாரி வரை தமிழ் இனத்தின் பகைவர்களே!

(சென்னையில் 30.1.2018 திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய கருத்தரங்கில் நிகழ்த்திய உரை)

‘ஆண்டாள் என்பதே ஒரு கற்பனை; அது பெரியாழ்வாரால் உருவாக்கப்பட்டது’ என்று தீவிர வைணவரும் பார்ப்பனர்களின் தலைவராகக் கொண்டாடப்பட்டவருமான இராஜாஜி எனும் இராஜகோபாலாச்சாரியாரே கூறியிருக்கிறார். வைணவத்தைப் பரப்புவதற்காக பல்லாண்டுகாலமாக நடத்தப் பெறும் ‘திருவேணி’ எனும் ஆங்கிலப் பத்திரிகையில் 1946 செப்டம்பர் இதழில் இராஜகோபாலாச் சாரியின் இந்தக் கட்டுரை ‘ஆண்டாள் என்பவர் யார்?’ என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளது.

ஆண்டாளின் பக்தியை சிலாகித்து, ஜெ.பார்த்தசாரதி என்பவர் ‘திரிவேணி’ ஜூன் இதழில், ‘ஆண்டாளின் காதல் கதை’ (The Romance of Andal) என்ற தலைப்பில் எழுதிய ஒரு கட்டுரைக்கு மறுப்பாக, இராஜ கோபாலாச்சாரியார் அதே பத்திரிகைக்கு இந்த மறுப்பை எழுதியிருக் கிறார். இராஜகோபாலாச்சாரியார் அனுமதியோடு இது வெளியிடப்படு கிறது என்கின்ற முன்னுரையுடன் ‘திருவேணி’ இதழ் அந்தக் கட்டுரையை வெளியிட்டிருக்கிறது. இராஜ கோபாலாச்சாரியின் ஆங்கிலக் கட்டுரையையும் அதன் தமிழாக்கத்தையும் ‘நிமிர்வோம்’ பதிவு செய்கிறது.



# ‘இராஜாஜி’யே கூறுகிறார் ‘ஆண்டாள்’ ஒரு கற்பனை

**“Who is Andal? - BY C. R.**

(After reading the “Romance of Andal” by Sri J. Parthasarathy in the June issue of the ‘Triveni’, C. R. wrote the following to us in the course of a letter. As the interpretation offered by C. R. is not widely known, we are publishing it with his kind permission.

C. R., however claims no originality–and wishes it to be known that an “esteemed friend” brought this possible interpretation to his notice–Associate Editor, Triveni.)

Andal was not any real girl or foster-daughter of Perialwar. It was a creation of his poetic mind and he wrote verses as if they were spoken by this child of his imagination. Perialwar modified the usual mode of Bhakta poetry in which religious experiences are cast in the figure of a love-sick girl’s anguish. We are all familiar with this rather common trick in which the saint speaks the language of a love-lorn maid. Perialwar varied this by creating a ‘daughter’ who was drawn to the great Sweet-heart and was absorbed by Him. The enlightened self of the man on whom falls Divine Grace is the ‘daughter’ whom he finds and brings up with care and affection. She is at first shy and secretive (as people generally are with their first religious experiences). That is the legend of the wearing of the garland in private. The world never approves of desertion from social work. Marrying the Eternal Bridegroom is desertion of the world. All Bhaktas enjoy the ecstacy of the love-passion so thoroughly that they would fain continue in that state rather than reach realisation and be absorbed. This is the ‘bereavement’ when Andal joins her Lord. The person loses his individual dynamic joy when samadhi is reached. The critical faculty struggles against the intuition

grace that takes one to God. Perialwar made Andal for the latter and reserved himself as 'father' to symbolise the doubts and the griefs of the former.

The literature attributed to Andal is thus probably just Perialwar's–a chapter corresponding to the Lover's episodes in the other saints' compositions. But so effective and popular was this Andal chapter that she became in tradition a real person and an additional saint. A figure of poetry was vitalised into a separate legend–so effectively that perhaps now this sort of interpretation would be put down as heresy. As if it were more pious to keep an additional saint going than to make Perialwar both himself and his daughter!"

"ஆண்டாள் உண்மையான பெண் அல்ல; அவள், பெரியாழ்வாரின் வளர்ப்பு மகளும் அல்ல. அது பெரியாழ்வாரின் கவித்துவ சிந்தனையில் உருவாக்கப்பட்ட கற்பனைப் பாத்திரம். தனது கற்பனையில் உருவான கவிதைகளை ஆண்டாளே பேசுகிறாள் என்று கற்பனையில் எழுதியிருக்கிறார். வழக்கமான பக்தி இலக்கியங்களிலிருந்து மாறுபட்ட ஒன்றை எழுத வேண்டும் என்று கருதிய பெரியாழ்வார் காதல் ஏக்கம் நிறைந்த ஒரு பெண்ணின் உணர்வுகளோடு பக்தியின் அனுபவங்களை இணைத்து எழுத முற்பட்டார். காதலுக்காக ஏங்கும் ஒரு பெண்ணின் உணர்வுகளை ஒரு துறவியால் எப்படி எழுத முடியும் என்ற கேள்வி எழக் கூடும் என்பதால், அவர் தந்திரமாக ஒரு ஏற்பாட்டைச் செய்தார். ஒரு பெண்ணின் காதல் உணர்வைத் தாம் எழுதவில்லை என்பதைக் காட்டுவதற்காக ஆண்டாளை தனது மகளாகவே வரித்துக் கொண்டார். தனது மகள் தனது காதலையும் இதயத்தையும் ஆண்டவனுக் காகவே அர்ப்பணித்து கடைசியில் ஆண்ட வனால் அவள் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டதாக எழுதினார்.

அன்பையும் பாசத்தையும் கொட்டி வளர்த்த மகள் காதலில் மூழ்கியிருப்பது, வேறு யாரிடமோ அல்ல; ஆண்டவனிடத்தில்தான் என்பதை அறிந்தபோது, தந்தையான பெரி யாழ்வார், மகளின் அந்த உணர்வுகளை மதித்தார். ஆண்டாள் தனது காதலை வெளிப் படுத்தாமல், இரகசியமாகவே தொடக்கத்தில் வைத்திருந்தார். ஆண்டவனுக்கு சூடப்பட்ட மாலையை எவருக்கும் தெரியாமல், தனது கழுத்தில் சூட்டி மகிழ்ந்தாள். ஒரு பெண் ஆண்டவனையே தனது கணவனாக்கிக் கொள்ள வேண்டும்; திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று விரும்புவதை பொதுவாக எவருமே ஏற்க மாட்டார்கள். சமூகம் விதித்த கடமைகளை உதாசீனப்படுத்துவதாகவே கருதுவார்கள். பக்தர்கள் அனைவருமே ஆண்டவனைத் தரிசிப்பதால் தங்களுக்குக் கிடைக்கும் பரவசமான நிலையையே விரும்பி, அந்த 'பரவச நிலை' நீடிக்க வேண்டும் என்றே விரும்புவார்களே தவிர, முக்தி நிலை பெற்று ஆண்டவனால் அழைத்துக் கொள்ளும் எல்லைக்குப் போக மாட்டார்கள். ஆண்டாள் ஆண்டவனிடம் போய்ச் சேர்ந்து விட்டாள் என்பது, துயரத்தின் வெளிப்பாடு. வாழ்க்கையின் முடிவைத் தேடிக் கொண்டு சமாதி நிலைக்குப் போகிற ஒருவன், தனது மகிழ்ச்சியையும் ஆனந்தத்தையும் வாழ்க்கையில் இழக்கிறான். உள்ளார்ந்த உணர்வுகளின் ஆசை, அன்பு, மகிழ்ச்சிகளுக்கு எதிராகப் போராடி அதில் வென்ற பிறகே, ஒருவன் கடவுளை அடைகிறான். அப்படிப்பட்ட பாத்திரமாக பெரியாழ்வார் 'ஆண்டாளை'ப் படைக்கிறார். மகள் அவளது உலக வாழ்வின் மகிழ்ச்சி, ஆனந்தத்தை இழந்து, கடவுளை அடைகிறாளே என்ற இயல்பான ஒரு தந்தையின் துயரத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்கிறார்.

எனவே ஆண்டாள் (எழுதியதாகக் கூறப்படும்) பக்தி இலக்கியம், ஒரு துறவியின் பார்வையில் காதலைப் பேசுகிறது. ஒரு வழமையான காதல் உணர்வு கொண்ட பெண் ணாகவும் கூடுதலாக அவள் ஆண்டவனை மணம் முடிக்கும் துறவு மனப்பான்மைக் கொண்டவளாகவும் ஆண்டாள் படைக்கப்பட் டாள் என்பதால் தான் இந்த பக்தி இலக்கியம் மக்களிடையே புகழ் பெற்றுத் திகழ்ந்தது.

எனவே ஆண்டாளைப் பெருமைப் படுத்தும் இந்த அத்தியாயம், பெரியாழ்வார் எழுதியதாகவே இருக்கலாம். ஒரு துறவி, காதல் உணர்வுகளை விவரித்திருக்கிறார். ஆண்டா ளோடு, பிரித்துப் பார்க்க முடியாத அளவுக்கு பாடல்களின் சிறப்பும் முக்கியத்துவமும் பெற்று நிற்பதால், இது ஆண்டாள் பாடியதுதான் என்று நம்புகிறார்கள். அது உண்மையல்ல; வேறு யாரோ ஆண்டாள் பெயரில் எழுதியது என்ற மாறுபட்ட கருத்தை ஏற்க ஒப்புவதில்லை. ஒரு துறவி தனக்கான எல்லைகளை மீறி தனது காதல் கதையை பக்தியோடு இணைத்தார்; அதனால் ஆண்டாளின் பாடல் மேலும் புனிதம் பெற்று விட்டது. ●



# ஆண்டாள் பாடியது பக்தி இலக்கியமா?

கவிப்பேரரசு வைரமுத்து எழுதிய ஒரு கட்டுரை ‘தினமணி’யில் (8.1.2018) வெளிவந்தது. ஆண்டாள் யார் - அவர் எத்தகையவர் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டைக் கொடுத்து எழுதியிருந்தார்.

Andal was herself a Devadasi who lived and died in srirangam temple - ஆண்டாள் என்பவர் தேவதாசியாக சிறீரங்கம் கோவிலில் வாழ்ந்து மரணமடைந்தாள் என்பது இதன் பொருள்.

இதனைச் சொல்லுவது கவிஞர் வைரமுத்தல்ல - அமெரிக்காவின் இண்டியானா பல்கலைக் கழகம் சுபாஷ் சந்திரமாலிக் என்பவர் தொகுத்து வெளியிட்ட Indian Movement some aspects of dissent, protest and reform நூலில் இது காணப்படுகிறது என்று கவிப்பேரரசு ஆதாரபூர்வமாக எடுத்துக்காட்டிய பிறகு, அவர்மீது விழுந்து பிராண்டுவது ஏன்?

1978 இல் இந்த நூல் வெளியாகி உலகம் பூராவும் பரவிவிட்டதே! 40 ஆண்டுகளாக என்ன செய்தார்கள்?

ஆண்டாள் தேவதாசி என்றால், இவர்களுக்கு ஏன் கோபம் குபீர் என்று கொப்பளிக்க வேண்டும்?

இந்து மதத்தில் தேவதாசி என்பது கெட்ட பொருள் கொண்டது அல்லவே! அந்த சொல்லிலேயே பொருள் இருக்கிறதே - தேவர்களுக்குத் தாசி என்று.

தேவதாசியாக இருப்பது இந்து மத சம்பிரதாயப்படி ஏற்றுக்கொள்ளப்பட்ட புனிதமான அம்சம்தானே!

சென்னை மாநில சட்டப்பேரவையில் நீதிக்கட்சி ஆட்சியின்போது டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்களால் கொண்டு வரப்பட்ட தேவதாசி ஒழிப்பு மசோதாவுக்கு எதிராக வாயாடி சத்தியமூர்த்தி அய்யர்வாள் ஆகாயத்துக்கும், பூமிக்கும் பூணூலை முறுக்கிக் கொண்டு தாவிடவில்லையா? இந்து மத சம்பிரதாயத்தில் தலையிடுவதா? தேவர்களுக்குத் தாசியாக இருப்பது புனித செயலே என்று ஆர்ப்பரித்தாரா இல்லையா?

அன்று சட்டசபையில் நடந்தது என்ன?

திரு.சத்தியமூர்த்தி அவர்கள் விபச்சார ஒழிப்பு மசோதாவைப்பற்றிப் பேசுகையில், ‘‘பெண்கள் எவ்வளவுதான் விபச்சாரம் செய்தாலும், அதனால் யாருக்கு எவ்வளவு துன்பம் நேரிட்டு வந்தாலும் விபச்சார ஸ்திரீகளும் நம்மவர்களே யானதால் அவர்கள் விஷயத்தில் அனுகூலமாயிருக்க வேண்டுமென்று சிபாரிசு பேசினதும், ‘தேவதாசித் தொழில் போனால் மதம் போய்விடும்’ என்றதும், ‘இன்று தேவதாசித் தொழிலை நிறுத்தினால், திரு.ராமசாமி நாயக்கர் நாளை அர்ச்சகத் தொழிலை நிறுத்த சட்டம் செய்ய வந்து

விடுவாரே என்று ஆத்திரப் பட்டதும் 'மித்திரன்' தேவ தாசி மசோதாவால் தேவ தாசித் தொழிலுக்குக் குந்தகம் ஏற்பட்டுவிட வில்லை என்று தேவதாசிகளுக்கு வியாக்கி யானம் செய்து மறுபடியும் அதே தொழிலில் இருக்க உற்சாகத்தையும், தைரியத்தை யும், ஆசையையும் ஊட்டு வதையும் பார்ப்பவர்களுக்கு நாட்டின் ஒழுக்கத்திற்கோ, சுயமரியாதைக்கோ, விடுதலைக்கோ இத் தேசியப் பத்திரிகைகளும், 'தேசிய வீரர்'களும் அனுகூலமாயிருப் பார்களா என்பது இவர் களுடன் யோக்கியர்கள் வந்து வேலை செய்ய முடியுமா என் பதும் தானாகவே விளங்கும்.

*('குடிஅரசு', 10.2.1929)*

தேவதாசிக்கு வக் காலத்து வாங்கிய சத்திய மூர்த்தி அய்யர் இந்து இல்லையா? இதற்கு மன்னார் குடி ஜீயர்தான் பதில் சொல்லவேண்டும்.

"தேவதாசியாக இருப் பது ஆண்டவனுக்குச் செய்யும் சேவையென்றும், அப்படி தாசியாக இருந்து சேவை செய்தால் அடுத்த ஜென்மத்தில் புண்ணியம் கிடைக்கும் என்றும் திரு வாளர் சத்தியமூர்த்தி அய்யர் வாள் இங்கு பேசினார். அப்படியானால், எங்கள் சமூகத்தவர்களே இதுவரை தாசியாக இருந்து புண்ணி யத்தை அனுபவித்தது போதும் - போதும்! இனிமேல் சத்தியமூர்த்தி அய்யர் வாளைச் சேர்ந்தவர்கள் தேவ தாசியாக இருந்து அந்தப் புண்ணியத்தை அனுபவிக் கட்டும் - எங்களுக்கொன்றும் ஆட்சேபணை இல்லை" என்று சத்தியமூர்த்தியிடம் முகத்துக்கு முகம் மொத் தினாரே டாக்டர் முத்து லட்சுமி! வாயாடி சத்திய மூர்த்தி அய்யர் ஆயாடி என்று அடங்கிப் போய்விட வில்லையா?

சத்தியமூர்த்தி அய்யர் வாளின் இந்தக் கதையெல் லாம் காரைக்குடி அம்பி களுக்குத் தெரியாதோ!

ஆண்டாள் தேவதாசி என்று சொல்லுவது இழிவு படுத்தக் கூடியது என்றால், இந்து மத சம்பிரதாயம் இழிவு என்பதை அவாளை அறியாமலேயே ஒத்துக் கொண்டதாக அர்த்தம்.

**அந்தணர்களைப் போலவே தேவதாசிகளும் ஆலய கருவறைக்குள் சென்று வந்தனர்.**

பார்ப்பன சமூகத்தைச் சேர்ந்த நாட்டிய நடிகை ஸ்வர்ணமால்யா என்ற பார்ப்பனப் பெண் மகளிர் கல்லூரி விழா ஒன்றில் (30.7.2017) கடவுளின் மனைவி மார்கள், தேவதாசிகள் புனிதர்கள் என்று பேசினாரே!

இப்பொழுது கேள்வி எல்லாம் ஆண்டாளைக் காப்பாற்றப் போகிறாளா? அல்லது இந்து மதத்தைக் காப்பாற்றப் போகிறாளா? என்பதுதான்.

ஆண்டாளைக் காப்பாற்ற நினைத்தால், இந்து மதத்தில் தேவதாசி முறையை ஏற்படுத்திய இந்து மதத்தின் முகத்தில் கரும்புள்ளி செம்புள்ளி குத்த தயாராகி விட்டார்கள் என்று பொருள்.

மன்னார்குடி செண்ட லங்கார ஜீயர் சுவாமி மறுப்பு என்று 'தினமலரில்' இன்று ஒரு செய்தி வெளி வந்துள்ளது. தேவதாசி என்று ஆய்வு ஒன்றை மேற்கோள் காட்டி கவிப்பேரரசு எழுதி யது கண்டு இவர் எரிச்சல் அடைந்து நிதானமின்றி எழுதியுள்ளார். ஜீயர் கருத்துப் படி தேவதாசி என்பது இழிவானதாகும். ஆனால், மன்னார்குடி ஜீயருக்கு அவர் சார்ந்த மதத்தைப்பற்றிய அடிப்படை அறிவுகூட இல்லை என்பது நிதர்சன மாகத் தெரிகிறது.

மன்னார்குடி செண்ட லங்கார ஜீயர் சுவாமிகளுக்கு அதே வைணவ மடத்தைச் சேர்ந்த மற்றொரு மடாதிபதி யோகி சிறீராமானந்த குரு (மஹா சிறீநாராயண மிஷன் கடனூர் அஞ்சல், விழுப்புரம் மாவட்டம், தொலைப்பேசி எண்: 9442464341) தேவ தாசிகள்பற்றி சிலாகித்து எழுதி யதை எடுத்துக் காட்டி னால், அவாளுக்குக் 'குளிர்ச்சி யாக' இருக்கும் அல்லவா!

இதோ மடாதிபதி யோகி சிறீராமானந்த குரு பேசுகிறார்:

"ஆகமங்கள் அனைத் துமே தேவதாசி பெண்களை ருத்திர கன்னிகை என்றே பெயரிட்டு அழைக்கிறது.

தேவதாசி பரம்பரையில் இரண்டு வகை உண்டு.

முதலாவது வகை பதியிலார் என்பதாகும். இந்த வகையைச் சார்ந்த பெண்கள் மனிதர்கள் யாரையும் கணவனமாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இறைவனான மகா தேவனையே தனது பதியாக அதாவது கணவனாக ஏற்று வாழ்க்கையை நடத்துவார்கள். இதனால் இவர்களுக்கு நித்திய சுமங்கலிகள் என்ற பட்டமும் உண்டு.

ஏறத்தாழ தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பு வரை அந்தணர்களைப் போலவே தேவதாசிகளும் ஆலய கருவறைக்குள் சென்று வந்தனர். இதற்கான ஆதாரங்கள் திருச்செந்தூர் சுப்ரமணியர் ஆலயத்திலும், திருவாரூர் தியாகராஜர் ஆலயத்திலும் உள்ளன.

ஓர் ஆலயத்தில் பணிபுரியும் தேவதாசி இறந்துவிட்டால், அவள் உடலை சாதாரண துணியால் மூட மாட்டார்கள். ஆலய மூல மூர்த்திக்குப் போற்றப்பட்ட புனித ஆடை மரியாதையுடன் கொண்டு வந்து அவள் உடல்மீது போர்த்தப்படும். அன்று முழுவதும் ஆலய வழிபாடு நிறுத்தி வைக்கப்படும். இறுதி ஊர்வலத்திற்கு எடுத்துச் செல்லப்படும். அவளது உடல், கோவிலின் ராஜகோபுரத்தின் முன்னால் சிறிதுநேரம் நின்றே மயானத்திற்குக் கொண்டு செல்லப்படும். சாதாரண மனிதர்களுக்குக் கிடைக்காத பெரும் பேறாகிய ஆலய நெருப்பு எடுத்துச் செல்லப்பட்டே அவள் சிதை எரியூட்டப்படும்!”

இவ்வளவுப் பிரமாதமாக இந்து மதக் கண்ணோட்டத்தில் ஒரு வைணவ மடாதிபதி சிலாகித்து தேவதாசிகள்பற்றிக் கூறும்போது, மன்னார்குடி ஜீயராகட்டும், இந்துத்துவா பேர்வழிகளாகட்டும் ஏன் குதியாட்டம் போடுகிறார்கள்?

கிறித்துவ மதத்தை எடுத்துக்கொள்ளலாம். உலகம் உருண்டை என்று சொன்ன கலிலியோ தண்டிக்கப்பட்டதுண்டு. கடவுள் உயிர்களைப் படைக்கவில்லை என்று கூறி பரிணாமத் தத்துவத்தைச் சொன்ன (Evolution) டார்வினுக்கு எவ்வளவு எதிர்ப்புகள்!

ஆனால், போப் ஜான்பால் ஃபோன்டிகால், அகாடமி ஆஃப் சயின்ஸ் என்ற அமைப்புக்கு அனுப்பிய செய்தி ஒன்றில், ‘டார்வினின் பரிணாம வளர்ச்சித் தத்துவத்தினை அங்கீகரிக்கச் செய்கிறோம். டார்வின் கொள்கையைப் பள்ளிகளில் போதிக்கவேண்டும் என்று சொன்னாரே (‘The Hindu', 20.10.1996).

கலிலியோ சொன்ன உலகம் உருண்டை என்பதையும் ஒப்புக்கொண்டவரும் (1992) இதேபோல் ஜான்பால்தான்.

ஒரு காலகட்டத்தில் செய்த தவறுக்காக வருத்தம் தெரிவித்து உண்மையை ஒப்புக்கொள்ளும் பக்குவமும், பெருந்தன்மையும் கிறித்துவ மதத்திற்கு இருப்பதுபோல, எண்ணாயிரம் சமணர்களை சைவம் கழுவேற்றிக்

**‘தேவதாசி’ முறையை ஆதரித்தவர்கள் இப்போது அப்படி கூறுவது இழிவு என்கிறார்கள்**

கொடூரமாகக் கொன்றதே - அதற்காக சங்கராச்சாரியாரை வருத்தம் தெரிவிக்கச் சொல்லுங்கள் பார்க்கலாம்.

புராணங்கள் என்றாலே புழுதி மேடுகள்தான். பூமியைப் பாயாகச் சுருட்டிக் கடலில் விழுந்தான் இரண்யாட்சதன் என்றும், மகா விஷ்ணு வராக (பன்றி) அவதாரமெடுத்துக் கடலுக்குள் குதித்துப் பூமியை மீட்டான் என்றும், அந்தப் பூமிக்கும், பன்றிக்கும் காதல் ஏற்பட்டு, கலவியும் நடந்து நரகாசுரன் பிறந்தான் என்றெல்லாம் அறிவுக்குக் காயடிக்கும் கேவலமான மட்டமான மூடத்தனத்தை மய்யமாகக் கொண்ட தீபாவளியைக் கொண்டாடச் சொல்பவர்களும் அந்த நாளில் கங்காஸ்நானம் ஆயிற்றா? என்று கூறும் சங்கராச்சாரியார்களும் உழலும் ஒரு நாட்டில், ஒழுக்கத்தையும் அறிவையும்பற்றி உசாவலாமா? அப்படி உசாவினால், ‘அக்கிரமம், அக்கிரமம், நாத்திகம் பேசறாள்’ என்று அம்பிகள் அலறுவார்கள் - அய்யோ பரிதாபம்!

ஆண்டாளை தேவதாசி என்று ஆதாரப்படி சொன்னதற்காக ஆவேசப்படுவோரே! காலம் காலமாக இந்து வேதங்கள், மனுதர்மம்,

கீதைப்படி பெரும்பாலான பார்ப்பனர் அல்லாதாரை சூத்திரர்கள் என்றும், வேசி மக்கள் என்றும் (மனுதர்மம் அத்தியாயம் 8; சுலோகம் 415) என்று எழுதி வைத் துள்ளீர்களே!

அதன் அடிப்படையில் சூத்திரர்கள் அர்ச்சகராகக் கூடாது என்று உச்சநீதி மன்றம்வரை சென்று முட்டுக்கட்டைப் போடு கிறீர்களே - நியாயமாக 97 சதவிகித மக்கள் விழித்துக் கொண்டால், உங்கள் நிலை என்னாகும் என்று சிந்தித்ததுண்டா?

கொக்கோகம் தோற்றோடும் பாடலுக்குச் சொந்தக்காரர் ஆண்டாள்! ஆண்டாள் அருளிச் செய்த நாச்சியார் திருமொழியில் உள்ளபடி.....

*அவரைப் பிராயம் தொடங்கி என்றும்*
*ஆதரித் தெழுந்த என்தட முலைகள்*
*உன்னித் தெழுந்த என்தட முலைகள்*
*சாயுடை வயிறும் என் தட முலைகள்*
*துவரைப் பிரானுக்கே! ஊனிடை யாழி சங்கு*
*உத்தமர்க்கே! என்று உருகித் தவிப்பாராம்!*

**ஏக்கத்தின் உருக்கத்தால் பாடும்போது:**

*முத்தன்ன வெண்முறுவல்*
*செவ்வாயும் முலையும்*
*அழகழிந்தேன் நான்!*
*புணர்வதோராசையினால் என்*
*கொங்கை கிளர்ந்து*
*குமைத்துக்*
*குதூகலித்து ஆவியை ஆகுலம்*
*செய்யும் அங்குயிலே!*
*கண்ணீர்கள்*
*முலைக்கு வட்டில் துளி*
*சோரச்சோர் வேனை காமத்தீயுள் புகுந்து*
*கதுவப்பட்டு இடைக்கங்குல்*
*ஏமத்தோர் தென்றலுக்கு*
*இங்கிலக்காய்*
*நானிருப்பேனே!*
*என்னாகாத்திளங் கொங்கை*
*விரும்பித்தாம் நாள்தோறும்*
*பொன்னாகம் புல்குதற்கு*
*எனப் புரிவுடைமை*
*செப்புமினே!*
*கொங்கைமேல் குங்குமத்தின்*
*குழம்பழியப் புகுந்து*
*ஓர் நந்நாள்*
*தங்குமேல் என்னாவி*
*தங்குமென்று உரையீரே!*
*கொங்கைத் தலமிவை*
*நோக்கிக் காணீர்*
*கோவிந்தனுக்கல்லால்*
*வாயில் போகா!*

*(கொங்கைக்கும் செவ்வாயிற்கும் உறவு*
*பற்றியது இது!)*
*காமப் பாதையில் கண்ணன் நாமம்*
*குற்றமற்ற முலைதன்னைக் குமரன்*
*கோலப்பணைத் தாளோடு*
*அற்றகுற்றமவைதீர அணைய*
*அமுக்கிக் கட்டீரே!*

விரகதாபம் எடுத்த ஒரு பெண்ணின் காமப் பீறிடல்கள்தானே இவை?

கடவுளை தந்தை இடத்தில் வைத்துப் பூசிப்பவரை அறிவோம். கடவுளைத் தன் கணவனாக வரித்து அவனைப் புணர ஆசைப்படும் பக்தையைத் தூக்கிப் பிடிக்க ஜீயர்களே வருகிறார்களே!

நன்றி : 'விடுதலை' நாளேடு

## 'நிமிர்வோம்'

**கவிஞர் தாரை வடிவேலன், தாரமங்கலம்**

1. *சாதிமுறைக் கல்யாணம் சாய்த்திடுக ஆணோடு*
   *பாதி எனநின்ற பெண்ணோடு - நீதி*
   *நயந்தே சுதந்திரத்தை நல்கிடுக போற்றிச்*
   *சுயமரியா தையாய் நிமிர்.*

2. *அந்தணர்க்கு நீயடிமை அல்லவென நின்றிடுக*
   *வந்தமொழி ஓட்டிடுக வண்டமிழை - வந்தனைசெய்*
   *அயல் மொழிக்(கு) ஆட்பட்(டு) அடிமையாய் நில்லாச்*
   *சுயமரியா தையாய் நிமிர்.*

3. *கடவுளில்லை என்றுபெரி யார்சொன்ன காரணத்தை*
   *நடைமுறையில் வைத்துப்பார் நன்றே - மடமை*
   *பயக்கும் இடமாகக் கோவிலை நீக்கி*
   *சுயமரியா தையாய் நிமிர்.*

4. *சூத்திரராய் நம்மைவைத்துச் சோதரரில் சாதிவைத்த*
   *ஆத்தியத்தில் நம்பெரியார் அந்திமகா லத்தும்*
   *அயர்ச்சி சிறிதுமின்றி ஆற்றினார் தொண்டு*
   *சுயமரியா தையாய் நிமிர்.*


# கோயில் கொள்ளைகளை சட்டமன்றத்தில் பட்டியலிட்ட முதலமைச்சர்

ப. திருமாவேலன்

இந்திய சுதந்திரத்துக்கு இன்னும் சில மாதங்களே இருக்கின்றன. அன்றைய சென்னை மாகாணத்து முதலமைச்சரான பிரகாசம், பல தவறுகளுக்கு அடித்தளம் இடுபவராக இருந்தார். அவரை மாற்றுவதற்கு ராஜாஜியும் காமராஜரும் திட்டமிட்டார்கள். அடுத்ததாக யாரைக் கொண்டு வரலாம் என்று யோசித்தார்கள். அவர்கள் மனதில் உதித்தார் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார்.

அதற்கு 10 ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தேர்தலில் சத்தியமூர்த்தியை வென்றவர் அவர். இவருக்கே அனைத்துத் தகுதிகளும் இருப்பதாக ராஜாஜியும் காமராஜரும் நினைத்தார்கள். ஓமந்தூராரிடம் இவர்கள் கேட்டார்கள். இருவருமே விக்கித்துப் போகும் அளவுக்கு, முதலமைச்சர் பதவியை மறுத்தார் ஓமந்தூரார். அதற்கு அவர் சொன்ன காரணம், “இதெல்லாம் நமக்குச் சரிப்பட்டு வராது” என்பதுதான்.

ஒருநாள் அல்ல, இரண்டு நாட்கள் அல்ல... மூன்று நாட்கள் அல்ல... மூன்று மாதங்கள் கடந்தும் ஓமந்தூரார் இந்தக் கோரிக்கையை



## ‘தாடி இல்லாத இராமசாமி’

தகுதி அடிப்படையில் 20 சதவீத இடஒதுக்கீடு செய்த முன்னாள் முதல்வர் பிரகாசம் உத்தரவை இரத்து செய்து வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை உறுதியாக அமுல்படுத்தினார் ஓமாந்தூரரார். தமிழகம் வந்த காந்தியிடம் பார்ப்பனர்கள், இவர் இராமசாமி ரெட்டியார் அல்ல; தாடியில்லாத இராமசாமி நாயக்கர் என்று புகார் மனு தந்தனர். தங்களின் பிள்ளைகளுக்கு பொறியியல் படிப்பு மறுக்கப்படுகிறது என்றார்கள். காந்தியார் பதிலடி தந்தார். பிராமண தர்மம் - வேதம் படிப்பது; வேதம் ஓதுவது தானே; என்ஜினியரிங் படிப்பது எப்படி பிராமண தர்மம் என்று திருப்பி விட்டார். பார்ப்பனர்கள் வாயடைத்துப் போனார்கள்.

ஏற்கவில்லை. ஆனால், அவர்கள் இருவரும் கட்டாயப்படுத்தினார்கள். விடவில்லை. இறுதியாக, "ரமண மகரிஷியிடம் கேட்கிறேன், அவர் ஒப்புதல் அளித்தால் ஏற்றுக் கொள் கிறேன்" என்றார் ஓமந்தூரார். தீர்ப்பு ரமணரிடம் இருந்தது. அனைவரும் பல நாட்கள் அமைதி யாக இருந்தார். திடீரென அனுமதி தந்தார் ரமணர். அதன் பிறகும் ஓமந்தூரார் யோசித்தார்.

அன்றைய சென்னை மாகாணம் என்பது ஆந்திராவையும் உள்ளடக்கியது. சென்னை சட்டசபையில் தெலுங்கை தாய்மொழியாகக் கொண்ட உறுப்பினர்களும் அதிகமாக இருப்பார்கள். அவர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் தன்னை முதலமைச்சராக ஏற்பார்களா என்ற சந்தேகம் இருந்தது இவருக்கு.

"நீங்கள் ஒப்புக் கொண்டால் போதுமா? ஆந்திர உறுப்பினர்கள் என்னை ஆதரிப் பார்களா என்று தெரியவில்லையே! நான் யாரிடமும் ஆதரவு கேட்டுப் போக மாட்டேன்" என்று ராஜாஜியிடமும் காமராஜரிடமும் சொல்லிவிட்டார் ஓமந்தூரார். "தமிழர் ஒருவரை முதலமைச்சசராகத் தேர்ந்தெடுப்பதில் எங்களுக்கு மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால், தமிழர்கள் அனைவரும் சேர்ந்து ஒரே நபரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்" என்று அவர்கள் நிபந்தனைப் போட்டார்கள்.

1947 பிப்ரவரி மாதம் 28ஆம் நாள் சென்னை மாகாண சட்டசபை காங்கிரஸ் கட்சி கூடியது. ஓமந்தூராரும் பிரகாசமும் போட்டி யிட்டார்கள். பிரகாசத்துக்கு ஓரிரு வாக்குகள் மட்டுமே கிடைத்தது. ஓமந்தூரார் வெற்றி பெற்றார். முதலமைச்சர் பதவியை ஏற்பதற்கு முன்தான் தயக்கம் காட்டினாரே தவிர, அதன் பிறகு அச்சம் தவிர்த்த அண்ணலாக எழுந்தார்.

தன்னைத்தான் முதலமைச்சரின் செய லாளராக இவர் நியமிப்பார் என்று ஒவ்வொரு ஐ.சி.எஸ். அதிகாரியும் நினைத்தார்கள். அவர் நிர்வாக அனுபவம் இல்லாத கிராமவாசியாக இருப்பதால், நாமே ஆட்சி செய்யலாம் என்று அதிகாரிகள் ஆசைப் பட்டார்கள். எல்லா ஐ.சி.எஸ். அதிகாரிகளும் அதிர்ச்சி அடையும்படி, பெரியகுளம் மாவட்ட முன்சீஃப்பாக இருந்த ஏ.அழகிரிசாமியை தனது செயலாளராக நியமித்துக் கொண்டார் ஓமந்தூரார். பிற்காலத்தில் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாகவும், உச்சநீதிமன்ற நீதிபதியாகவும் உயர்ந்த ஏ.அழகிரிசாமிதான் அவர். நேர்மையும், தான் நினைத்ததைத் தன்னிடம் தயங்காமல் சொல்பவராகவும் தனது செயலாளர் இருக்க வேண்டும் என்று நினைத்தார் ஓமந்தூரார்.

இந்தக் காலத்தில் இருப்பதுபோல பேசா மடந்தைகளை செயலாளர்களாக நியமிக்க வில்லை.

அந்தக் காலத்தில் பெரும்பாலும் ஆங்கில அதிகாரிகள் பணியில் இருந்தார்கள். அவர்களுக்கு பிரிட்டிஷ் ஆட்சி முடியப் போகிறதே என்ற வருத்தத்தைவிட... கதர் வேட்டி கட்டி... நெற்றியில் திருநீறு பூசிய... 'டிரஸ் கோட்' இல்லாத ஒரு மனிதனுக்குக் கீழே வேலை பார்ப்பது தான் அவமானமாக இருந்தது.

அன்றைய தொழில் துறை செயலாளர் அப்பாஸ் கலீலி என்ற ஐ.சி.எஸ். அதிகாரி, ஓமந்தூரார் முதலமைச்சராக பதவியேற்ற இரண்டாவது நாள் அவரைச் சந்தித்தார். அவர்தான் மீன்வளத் துறை இயக்குநராகவும் இருந்தார். உணவுப் பற்றாக்குறை காலம் என்பதால், அதைப் பற்றி முதலமைச்சர் பேசினார். "கடலில் மீன் உற்பத்தியைப் பெருக்க வேண்டும். அதற்காக ஒரு புளூ ரிவெல்யூசன் தொடங்கி மீன் வளத்தை அதிகரிக்க வேண்டும்" என்று முதலமைச்சர் சொன்னதும் அந்த அதிகாரி, "அது அவ்வளவு எளியது அல்ல... கடல் என்றால், அதில் எல்லா இடங்களிலும் மீன்கள் கிடைத்து விடாது" என்று அலட்சியமாகப் பதில் அளித்தார்.

"உண்மைதான்! 'கான்டினண்டல் ஷெல்ப்' என்று குறிக்கப்படும் பகுதிகள் மட்டும் தான் மீன்பிடிக்க ஏற்றது. அதற்கும் பல புதிய முறைகளை நார்வே போன்ற நாடுகளில் இப்போது கடைப்பிடிக்கிறார்கள்" என்ற சொல்லி அதனை விளக்க ஆரம்பித்தார் ஓமந்தூரார். அப்பாஸ் கலீலி அதிர்ச்சி அடைந்தார். இவர் இதனை அனைத்து அதிகாரிகளிடம் சொல்லிச் சொல்லி மலைத்துப் போனார். கிராமத்தான் போல கதராடை உடுத்தி இருக்கும் ஆள், சாமான்யன் அல்ல, படிக்காத மேதை என்பதை இரண்டாவது நாளே தலைமைச் செயலகம் உணர்ந்தது.

கோப்புகளைப் படித்துப் புரிந்து

கொள்ளும் அளவுக்கு ஆங்கில அறிவு இருந்தது. தானே படித்தார். தன்னால் முடிந்த அளவு ஆங்கிலத்தில் அவரே எழுதினார். இலக்கணம் சரியாக இருக்கிறதா என்று கவலைப்பட வில்லை. முடிவு சரியானதா என்பதை மட்டும் பார்த்தார். டெல்லிக்குப் போக வேண்டிய ஒரு கோப்பில் தனது கருத்தை எழுதி, 'இன் மை ஒப்பீனியன்' என்று எழுதினார். 'ஒப்பீனியன்' என்ற சொல்லில் ஓர் எழுத்து தவறுதலாக இருக்கிறது என்று அதிகாரி ஒருவர் எடுத்துக் காட்ட, "என்னுடைய ஒப்பீனியனைத் தானே கேட்கிறார்கள். எனக்கு 'ஒப்பீனியன்' என்ற வார்த்தைக்கு ஸ்பெல்லிங் தெரியுமா என்று கேட்கவில்லையே" என்று பதிலளித்திருக்கிறார்.

"மிகவும் படித்த ஐ.சி.எஸ். அதிகாரிகள் கூட, முதலமைச்சர் ஓமந்தூராருக்கு ஒரு ஃபைலை அனுப்பிவிட்டால், அது எப்படி எந்த வடிவத்தில் திரும்பி வருமோ என்று அஞ்சினர். தப்பித்தோம், பிழைத்தோம் என்ற நிலை ஏற்பட வேண்டுமே என்று தங்கள் குலதெய்வங்களை வழிபட்டு வந்தனர்" என்று சொல்லி இருக் கிறார், ஓமந்தூரார் ஆட்சியில் கல்வித் துறை இயக்குநராக இருந்த கல்வியாளர் நெ.து.சுந்தர வடிவேலு.

பிரிட்டிஷ் அரசு நம்மிடம் அதிகாரத்தை ஒப்படைத்துவிட்டு வெளியேறிய பிறகும் மவுன்ட் பேட்டனை கவர்னர் ஜெனரலாக இருக்கச் சொல்லியும், "நீங்கள் விரும்பும்வரை இந்தியாவிலேயே இருக்கலாம்" என்று தாசானு தாசர்களாக நேருவும், படேலும் வேண்டுகோள் வைத்தார்கள். "பிரிட்டிஷ் அதிகாரிகள், இங்கேயே இருக்கலாம். அவர்களுக்கான சலுகைகள் தொடரும்" என்றார் படேல். அன்றைய சென்னை மாகாணத்தில் இருந்த ஆங்கிலேய ஐ.சி.எஸ். அதிகாரிகள் அனைவரையும் அழைத்து, "இதுவரை உங்களது பணிக்கு நன்றி. நீங்கள் சென்னையை விட்டுப் புறப்படலாம்" என்று கம்பீரமாகச் சொன்ன முதலமைச்சர் ஓமந்தூரார், எந்தெந்த அதிகாரிகள் மீது புகார் வந்ததோ, அவர்களுக்குக் கட்டாய ஓய்வுக் கொடுத்து அனுப்பினார். அதிகாரிகளைப் பகைத்துக் கொள்ளக் கூடாது என்று இன்று அமைச்சர் களும், அரசியல்வாதிகளும் நடிக்கிறார்கள் அல்லவா? ஓமந்தூரார் நடிக்கவில்லை.

கோப்புகளில் விரைவாக ஆணை பிறப்பிக்க வசதியாக தலைமைச் செயலாளர் பதவியையை ஒழித்தார். "துறைக்கு ஒரு செய லாளர் இருக்கும்போது தலைமைச் செயலாளா எதற்கு?" என்று கேட்டார். "கோப்புகளை துறைச் செயலாளர் அமைச்சருக்கு அனுப்பினால் போதும், எல்லா கோப்புகளும் தலைமைச் செயலாளருக்குப் போவதுதான் காலதாமதத்துக்கு காரணம்" என்றார். இது பெரிய விவாதம் ஆனது. (சென்னையை வெள்ளத்தில் மூழ்கடித்த) செம்பரப்பாக்கம் ஏரி விவகாரத்தை வைத்து யோசியுங்கள். நேரடியாக முடிவெடுக்கும் அதிகாரம் பொதுப்பணித் துறை அதிகாரிக்கு இருந்திருந்தால், மூன்று நாட்களுக்கு முன்பே தண்ணீரை ஒழுங்காகத் திறந்துவிட ஏற்பாடு செய்திருப்பார்கள். தலைமைச் செயலாளர் ஊறுகாய் பானையில் ஊறவைத்ததால், ஊரே மிதந்தது. இதனை வைத்து ஒப்பிட்டால் ஓமந்தூரார் எடுத்த முடிவு எவ்வளவு சரியானது என்று புரியும்.

பதவிக்கு வந்ததும் பாராட்டு விழாக்களில் கலந்து கொள்ளவில்லை. வெற்றி விழாக்களை ஏற்பாடு செய்யவில்லை. தன்னைச் சந்திக்க வருபவர்களிடம் மாலை வாங்க மாட்டார். பழங்கள் கொண்டு வந்தால், 'வெளியில் வைத்து விட்டு வந்துவிடுங்கள்' என்பார். எவ்வளவு பெரிய ஆளாக இருந்தாலும் தன்னிடம் யாருமே தனியாகப் பேசுவதை அனுமதிக்க மாட்டார். அவருடைய உதவியாளரும் அந்த அறையில் இருப்பார். இருவரும் பேசுவதை உதவியாளர் எழுத வேண்டும். போலீஸ் அணிவகுப்பு மரியாதையையே தவித்தார். 'அவர்களுக்கு வேறு வேலையே இல்லையா' என்று கேட்டார்.

தன்னுடைய மருத்துவராக டாக்டர் ரத்னவேலு சுப்ரமணியத்தை நியமித்தார் முதலமைச்சர் ஓமந்தூரார். அவருக்கு எழுத்துப்பூர்வமாக மூன்று கட்டுப்பாடுகளைப் போட்டார். 1. நீங்கள் யாருக்காகவும் என்னிடம் எந்தப் பரிந்துரையும் செய்யக் கூடாது. 2. என்னிடம் உங்களுக்காகப் பதவி உயர்வோ, சலுகையோ எதிர்பார்க்கக்கூடாது. 3. என்னிடம் அரசியல் விவகாரங்கள் பற்றி பேசக் கூடாது என்று நிபந்தனை போட்டு, அவர் ஏற்றுக் கொண்ட பிறகுதான் மருத்துவம் பார்க்கவே அனுமதித்தார்.

ஒருமுறை முதலமைச்சர் திருப்பதி போனார். திரும்பும்போது திருப்பதி

தேவஸ்தானத்தில் இருந்து பலாப்பழத்தைக் கொடுத்தார்கள். டிரைவரும் வாங்கி வைத்துவிட்டார். கடுமையாக கோபம் கொண்டார் ஓமந்தூரார். "இப்ப பலாப்பழத்தை எடுப்பாய். நாளைக்கு கோயில் நகையை வாங்குவாயா" என்று கேட்டார். 'ரமண மகரிஷி சொன்னால், முதலமைச்சர் பதவியை ஏற்றுக் கொள்கிறேன்' என்று சொன்னவர் இவர். பதவிக்கு வந்த பிறகு, அதே ஆசிரமத்தைச் சேர்ந்த ஒருவர் ஏதோ சலுகைக் கேட்டபோது, 'இதில் எல்லாம் அரசு தலையிட முடியாது' என்று மறுத்தார். தமிழகத்தில் அந்தக் காலகட்டத்தில் இருந்த ஆன்மிகப் பெரியவர்கள் அனைவரோடும் அவருக்கு நட்பு இருந்தது. அதற்காக அவர்களுக்கு எந்தச் சலுகையையும் காட்டியது இல்லை. ஓர் ஆன்மிகப் பெரியவரின் சமாதி வைக்கப்பட்ட இடத்தை அங்கீரித்து, அதற்குச் சுற்றி உள்ள மற்ற பகுதிகளை அகற்ற ஆணையிட வேண்டும் என்று அந்த மடத்தின் சார்பில் வந்து கேட்டார்கள். அப்படி எல்லாம் செய்ய முடியாது என்று மறுத்துவிட்டார். வந்தவர்களுக்கும் முதலமைச்சருக்கும் வாக்கு வாதமே வந்துவிட்டது. 'அவர் உங்கள் கனவில் வந்து இதைச் செய்யச் சொல்வார்' என்றார்கள். 'கனவில் வந்தாலும் நேரில் வந்தாலும் நான் இதனைச் செய்ய மாட்டேன்' என்று சொல்லி அவர்களை வெளியில் அனுப்பினார்.

அதனால்தான் ஓமந்தூராரை, 'புனிதமான ஆத்மா' என்றார் ராஜாஜி. 'பட்டைத் தீட்டாத வைரக்கல்' என்று பாராட்டினார் நேரு. 'அவர் ஓமந்தூரர் ராமசாமி அல்ல... காந்தி ராமசாமி' என்றார் அண்ணா. சுதந்திர இந்தியாவில், தமிழகத்தில் முதல் முதலமைச்சராக இருந்த ஓமந்தூரார் எல்லாவற்றுக்கும் முதல் என்று உதாரணம் காட்டத்தக்க மனிதராகத்தான் இருந்தார். ஆனால், அவரை நிம்மதியாக விட்டார்களா? ஒரு நல்லவனை இந்தச் சமூகம் வாழவும் விடாது, ஆளவும் விடாது என்பதற்கு உதாரணமாகவும் ஓமந்தூரார் வாழ்க்கை ஆகிவிட்டது.

முதலமைச்சர் ஓமந்தூரார் நல்லவர்தான். அவரைவிட நல்லவர் இல்லை. நேர்மையாளர் இல்லை. ஆனால், அவரை இரண்டே ஆண்டு களில் சென்னையை விட்டே விரட்டி விட்டார்கள். இந்த இரண்டு ஆண்டுகளில் சொந்தக் கட்சிக்காரர்களிடமும், கட்சித் தலைமையிடமும், தனது கட்சி எம்.எல்.ஏ.க் களிடமும் தனக்குக் கீழ் இருந்த அதிகாரி களிடமும் அவர் பட்ட துன்ப, துயரங்கள் தான், ஒரு நேர்மையாளன் அதிகாரத்துக்கு வந்தால் என்ன நடக்கும் என்பதற்கான சாட்சிப் பத்திரங்கள்.

சட்டமன்ற உறுப்பினர்கள் தன்னை அடிக்கடி வந்து சந்திக்கக் கூடாது, நிர்வாகத்துக்கு இடைஞ்சலாக இருக்கக் கூடாது, மக்களோடு மக்களாக அவர்கள் வாழ வேண்டும், தேவையில்லாமல் தலைமைச் செயலகத்துக்கு வரக்கூடாது என்று கண்டித்தார். "சட்டசபை உறுப்பினர்கள் சொல்கிற சிபாரிசுகளை புறக்கணித்து விடுங்கள். மக்கள் குறைகளைக் கேட்டு அந்தக் குறைகளை நிவர்த்திக்க வேண்டும். எது சரியோ, அதைச் செய்யுங்கள். தூய்மையான நிர்வாகத்துக்கு நீங்கள்தான் பொறுப்பாவீர்கள். எம்.எல்.ஏ. தலையிட்டார், அதற்காக இப்படி உத்தரவு பிறப்பித்தேன் என்று சொல்லக் கூடாது" என்று மாவட்ட ஆட்சியர் களுக்கும், காவல்துறை அதிகாரிகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பினார். இது காங்கிரஸ் உறுப்பினர்கள் பெரும்பாலானவர்க்கு கடுப்பைக் கிளப்பியது. பலரும், அவருக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் எதிர்ப்பைத் தெரிவித்தார்கள். அதை மீறி நிர்வாகத்தில் தலையிட்டு அதைச் செய்யுங்கள், இதைச் செய்யுங்கள் என்று உத்தரவு போட்ட நான்கு காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் மீது விசாரணை கமிஷன் வைத்தார். இப்படிப்பட்ட முதலமைச் சரை எந்த எம்.எல்.ஏ.க்கள் ஆதரிப் பார்கள்?

அமைச்சர்கள் அனைவரையும் அழைத்து, "மக்களுக்கு நன்மை செய்வதற்காகத்தான் நாம் பதவியில் இருக்கிறோம். பெரிய ஆட்களுக்கு சலுகைக் காட்டுவதற்காக அல்ல..." என்று கண்டித்தார். அமைச்சர்கள் தேவையில்லாமல் சுற்றுப்பயணம் போகக் கூடாது, சுற்றுப் பயணங்களைக் குறைத்துவிட்டு தலைமைச் செயலகத்தில் உட்கார்ந்து கோப்புகளைப் படித்து தனக்கு முன்னால் இருக்கும் விவகாரங்களை விரைந்து முடிப்பதில் கவனம் செலுத்த ேண்டும் என்று கட்டளையிட்டார். அதிகாரப்பூர்வ சுற்றுப்பயணம் என்று போய் விட்டுச் சொந்தப் பணிகள் பார்ப்பவர்கள் தலையில் குட்டினார்.

தஞ்சை மாவட்டத்தில் கடற்கரைப் பகுதியில் போதை மருந்து கடத்திய ஒருவருக்கு,

அமைச்சர் ஒருவர் உடந்தையாக இருந்ததைக் கேள்விப்பட்டு காவல் துறையை விசாரிக்கச் சொன்னார். பெரம்பலூரில் போலீஸ் ஆதரவுடன் கள்ளச்சாராயம் காய்ச்சுவதாகத் தகவல் கிடைத்ததுமே, அத்தனை போலீசையும் பதவி நீக்கம் செய்தார். அன்றைய ஹைதராபாத் - தெலுங்கானா பகுதியில் போராடி வந்த கம்யூனிஸ்ட்டுகளுக்கும், அன்று அமைச்சராக இருந்தவரின் குடும்ப உறுப்பினருக்குமே தொடர்பு இருந்ததாகச் சந்தேகப்பட்டார் முதலமைச்சர். உடனே அவரிடம் இருந்த போலீஸ் துறையைப் பறித்தார்.இந்த நடவடிக்கையை பிரதமர் நேருவும், ராஜாஜியும், காமராஜரும் விரும்பவில்லை. திரும்ப அவருக்கே போலீஸ் துறையைத் தரவேண்டும் என்றார்கள். அவர் ஏற்கவில்லை. ஹைதராபாத் மீட்கப்பட்டதும்தான் அந்த அமைச்சருக்கு மீண்டும் போலீஸ் துறையைக் கொடுத்தார்.

அமைச்சர்கள் அனைவரும் கோப்புகளை உடனுக்குடன் முடித்து அனுப்ப வேண்டும். ஒவ்வொரு கோப்புக்கும் தேதி குறித்தார். அவர்களது அனைத்து நடவடிக்கைகளையும் பதிவு செய்யச் சொன்னார். இந்தக் கட்டுப் பாடுகளை அமைச்சர்கள் விரும்பவில்லை.

சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக யாரை நியமிப்பது என்பதில் இருந்து ஓமந்தூராருக்கு எதிர்ப்புகள் பலமானது. நீதிபதி பதவி காலியாக இருந்தால் யாரை நியமிக்கலாம் என்று தலைமை நீதிபதி பரிந்துரைப்பார். அந்தப் பரிந்துரை ஆளுநருக்குப் போகும். ஆளுநர், முதல்வரிடம் கேட்பார். அவர் ஒப்புதல் கொடுத்தவுடன், அது மத்திய அரசுக்குப் போகும். அவர்கள் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியைக் கேட்பார்கள். அவர் ஒப்புதலுடன் நியமனம் நடக்கும். இதுதான் நடைமுறை. சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக பிரபல கிரிமினல் வழக்கறிஞர் என்.சோமசுந்தரம் பெயரை சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி பி.வி. ராஜமன்னார் பரிந்துரைத்தார். அன்றைய மத்திய அமைச்சர் ஒருவர், தனது மருமகனுக்கு இந்தப் பதவியை எதிர்பார்த்தார். நடக்கவில்லை. பிரதமர் நேருவிடம் புகார் கூறினார் மத்திய அமைச்சர். முதலமைச்சர் ஓமந்தூராரை வரவழைத்த பிரதமர் நேரு, இவரது செயல்பாடுகளுக்கு உள்நோக்கம் கற்பித்தார். "நீங்கள் சொன்னதை வாபஸ் வாங்குங்கள். இல்லை என்றால், நான் இந்த நிமிடத்திலேயே பதவி விலகிவிடுகிறேன்" என்றார் ஓமந்தூரார். அருகில் இருந்த அமைச்சர் படேல் சமாதானம் செய்த பிறகு நேரு, தான் சொன்னதை வாபஸ் வாங்கினார். (சென்னை உயர்நீதிமன்றத்தில் நியமிக்கப்பட்ட முதல் பார்ப்பனரல்லாத நீதிபதி இவர்தான். பார்ப்பனர்கள் - பார்ப்பன ஏடுகள் அலறின. விடுதலையும், பெரியாரும், ஓமாந்தூராரை ஆதரித்து எழுதின-ஆர்)

ஒரு நாளிதழ், 'முதலமைச்சர் சாதி பார்க்கிறார்' என்று எழுதியது. அந்த நாளிதழின் ஆசிரியரை தலைமைச் செயலகத்துக்கு அழைத்த ஓமந்தூரார், 'உங்கள் பத்திரிகையில் எத்தனை பேர் வேலை பார்க்கிறார்கள், அதில் குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்' என்று கேட்டார். அந்த ஆசிரியர் பதில் அளிக்கத் தயங்கினார். 'உங்களுக்கே உண்மையைச் சொல்லத் தயக்கமாக இருக்கிறது. அப்படியிருக்க நான் சாதி உணர்ச்சி உடையவன் என்று எப்படி எழுதுவீர்கள்?' என்று கேட்டார். (அந்த ஏடு 'இந்து' - ஆர்) உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர் ஏதோ ஒரு பரிந்துரைக்காக அவரைப் பார்க்க விரும்பினார். முதலமைச்சர் சந்திக்க மறுத்தார். இவை அனைத்தும் மேல் மட்டத்தில் இவருக்கு எதிர்ப்பை உருவாக்கியது.

இலஞ்சப் புகாருக்கு உள்ளான அதிகாரிகள் மீது தயவுதாட்சண்யம் பார்க்காமல் நடவடிக்கை எடுத்தார். இலஞ்சம் வாங்கிய அதிகாரி ஒருவர், காந்தியிடமே ஆளைப் பிடித்து பரிந்துரைக்குப் போய் விட்டார். ஓமந்தூராரின் விளக்கம் கேட்ட காந்தி, 'நீங்கள் செய்ததே சரி' என்று கடிதம் எழுதினார். பொதுப் பணித் துறை அதிகாரிகள் சிலரைக் கூட்டி வைத்து, 'நீங்கள் எல்லோரும் ஊழல் பேர்வழிகள்' என்று பகிரங்கமாகக் குற்றம் சாட்டினார் முதலமைச்சர். பொதுப் பணித் துறைக்கு சில இயந்திரங்களை வரவழைப்பதில் முந்தைய பிரகாசம் ஆட்சியில் முறைகேடு நடந்ததாகத் தெரிய வந்தது. உடனே நடவடிக்கை எடுத்தார். 'பெரிய அதிகாரிகள் விஷயத்தில் சற்று நிதானமாக நடக்க வேண்டும்' என்று பிரதமர் நேரு இவரிடம் சொன்னார். 'இதைப் பற்றி உங்களிடம் நான் பேசத் தயாராக இல்லை' என்ற போனை வைத்து விட்டார். அதன் பிறகு டெல்லி தலைமையின் கோபம் அதிகமானது.

அரசு ஊழியர்கள் மீது புகார் வந்தால் நடவடிக்கை எடுக்க ஒழுங்கு நடவடிக்கைப் பிரிவை ஏற்படுத்தியவரும் இவர்தான். இலஞ்ச ஊழல் ஒழிப்புக் குழுவை உருவாக்கியவரும் இவர்தான். தற்காலிக நீதிபதி ஒருவர் இலஞ்ச குற்றச்சாட்டுக்கு ஆளானார். அவரை நிரந்தர நீதிபதி ஆக்கக் கூடாது என்று மத்திய அரசுக்கு எழுதினார். தனக்கு மிக நெருக்கமான நண்பர் ஒருவர், இரயில்வே டி.ஐ.ஜி.யாக இருந்தபோது முறையாகச் செயல்படவில்லை என்று நடவடிக்கை எடுத்தார். சட்டசபை உறுப்பினர் ஒருவர் மீது வழக்குத் தொடரும்படி கட்டளை யிட்டார். அன்றைய காங்கிரஸ் தலைவர்கள் அனைவருமே இதனை எதிர்த்தார்கள். "உங்கள் பேச்சைக் கேட்டால் நான் எடுத்துக் கொண்ட சத்தியப் பிரமாணத்துக்கு என்ன மரியாதை?" என்று திருப்பிக் கேட்டார்.


இவரது ஆட்சியில் இந்து சமய அற நிலையச் சட்டம் முறைபடுத்தப்பட்டது. மடங்களும், கோயில்களும் ஒழுங்காக நடைபெறாத தால்தான் நாட்டில் நாத்திகம் பரவுகிறது என்று நினைத்தவர், கோயில்களை ஒழுங்குபடுத்தினார். மதத்தில் அரசு தலையிடக்கூடாது என்றார்கள். கோயில்கள் நடக்கும் முறைகேடுகளைப் பட்டிய லிட்டு சட்டசபையில் பேசிய ஓமந்தூரார், "எந்த நாகரிக சர்க்காரும், எந்த ஜனநாயக சர்க்காரும், எந்த நேர்மையான சர்க்காரும் இதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியாது" என்றார். காங்கிரஸ் கட்சியில் இருந்த என்.எஸ்.வரதாச் சாரி, வைத்தியநாத ஐயர் போன்றவர்கள் இதனைக் கடுமையாக எதிர்த்தார்கள். இந்தச் சட்டத்தை ஆதரித்து ம.பொ.சி., ஔவை துரைசாமிப் பிள்ளை, 'தினசரி' டி.எஸ்.சொக்க லிங்கம் போன்றவர்கள் நாடு முழுக்கப் பேசினார்கள். ஜமீன்தார் ஒழிப்புச் சட்டத்தையும், இனாம் ஒழிப்புச் சட்டத்தையும் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தையும் இவர் கொண்டு வந்தார். இதுவும் கடுமையான எதிர்ப்பை இவருக்கு சம்பாதித்துக் கொடுத்தது. காங்கிரஸ் உறுப்பினர்களே எதிர்த்தர்கள். 'வகுப்பு துவேஷி' என்று தூற்றப்பட்டார். அன்றைய அமைச்சர் ஒருவர் இதற்கு விளக்கம் அளித்து சட்டசபையில் பேசும்போது, "வகுப்பு துவேஷம் ஏன் வருகிறது? வகுப்பு துவேஷம் இருப்பதால் வருகிறது" என்று அளித்த பதிலுக்கு இன்று வரை உயிர் இருக்கிறது.

இவரை வீழ்த்த ஜமீன்தார்கள் துடித்தார்கள். சில மடாதிபதிகள் கூடிப் பேசினார்கள். காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் இரகசியக் கூட்டம் போட்டார்கள். அமைச்சர்கள் அவர்களைத் தூண்டினார்கள். இவர்களுக்கு காங்கிரஸ் தலைவர்களின் மறைமுக ஆசீர்வாதமும் இருந்தது. இவ்வளவு நெருக்கடிகளுக்கு மத்தியில் பதவியில் இருக்க ஓமந்தூராரே விரும்பவில்லை. "நீங்கள் அழைத்ததால் வந்தேன். நீங்கள் போகச் சொன்னால் போகிறேன்" என்று சொல்லி பதவி விலகினார். "ஆட்சியைக் கலைத்துவிட்டு தேர்தல் நடத்தினால், நீங்கள் வென்று விடுவீர்கள்" என்று சிலர் ஆசை காட்டினார்கள். "தேர்தல் காலத்துக்கு முன்பு ஆட்சியைக் கலைப்பதைவிட அரசியல் அநாகரிகம் எதுவும் இல்லை" என்று சொல்லிவிட்டு முதலமைச்சரின் இல்லத்தைக் காலி செய்தார்.

**ஓமந்தூரார் பதவி விலகிய அன்று, 'வழியனுப்புகிறோம்' என்ற தலைப்பில் 'விடுதலை' நாளிதழ் எழுதிய தலையங்கத்தின் வரிகளைக் கவனியுங்கள், இன்றும் சத்தியமான சொற்கள் அவை.**

> "ஓமந்தூரர் ரெட்டியார் அவர்களே போய் வாருங்கள்; கிராமத்துக்குப் போங்கள்; நன்றாக ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறி வழியனுப்பு கிறோம். நேர்மையற்ற உலகம் இது. நாண யத்துக்கு இந்த உலகத்தில் இடமில்லை. யோக்கியனுக்கு அரசியலில், அதிகாரத்தில் இடமில்லை என்ற உண்மையை, பொய்யாப் பழமொழியை நிலைநாட்டி விட்டுச் செல்கிறீர்கள். அது ஒன்றுதான் தாங்கள் செய்த சேவைகளில் எல்லாம் சிகரம் போன்றது, போய் வாருங்கள். போர்க்களத்தில் முதுகுப்புறமாகக் குத்தப்பட்ட வீரர் தாங்கள். காயம் மார்பில் அல்ல... முதுகில். பகைவனால் அல்ல... பச்சோந்தித் தோழனால். பரவாயில்லை. இது தான் உலகம். நன்றி கெட்ட உலகம். போய் வாருங்கள்!" என்று எழுதியது 'விடுதலை'. கூண்டை விட்டு விடுதலை ஆகிய பறவையாய் வெளியேறினார் ஓமந்தூரார். அவரை வெளியேற்றியது நேர்மையின்மை யும் துவேஷமும்.

(கட்டுரையாளர் - பத்திரிகையாளர்)




# தமிழ்நாட்டைப் புறக்கணிக்கும் நடுவண் ஆட்சி

பிரகாஷ்

*மாநிலங்களுக்கு நிதியைப் பகிர்ந்தளிக்க 15ஆவது நிதிக் குழு பின்பற்றும் அளவீடுகள், காரணிகள் தமிழகத்துக்கு துரோகம் இழைப்பதை புள்ளி விவரங்களுடன் அலசுகிறது கட்டுரை.*

நடுவண் அரசு வசூலிக்கும் வரி வருவாயில் ஒரு பகுதியை மாநில அரசுகளுக்குப் பகிர்ந்தளிக்க இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 280 (1)ன் படி 'நிதிக் குழு' ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை அமைக்கப்படுகிறது. தற்போது 14ஆவது நிதிக் குழுவின் பரிந்துரைகள் (2015-20) செயல்பட்டுக் கொண்டிருக்கிறன. கடந்த ஆண்டு நவம்பரில் பதினைந்தாவது நிதிக் குழு அமைக்கப்பட்டு, அதற்கான உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர். இந்தக் குழுவின் பரிந்துரைகள் வருகின்ற 2020ஆம் ஆண்டு ஏப்ரல் 1 முதல் 2025ஆம் ஆண்டு மார்ச் 31 வரையில் அமலில் இருக்கும். இந்த 15ஆவது நிதிக் குழுவின் தலைவராக ஒன்றிய வருவாய்த் துறை செயலாளராக இருந்த என்.கே.சிங் என்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி 2017ஆம் ஆண்டு நவம்பர் 27ஆம் தேதி நியமிக்கப்பட்டார். இவர் பாஜகவின் அடிப்படை உறுப்பினராகவும் உள்ளார். மேலும் இந்தக் குழுவில் பொருளாதார விவகாரங்கள் துறையின் முன்னாள் செயலாளர் சக்திக்காந்த தாசு, நடுவண் அரசின் முன்னாள் தலைமைப் பொருளாதார ஆலோசகர் அசோக் லகிரி, நடுவண் அரசின் ஆலோசனை அமைப்பான நிதி ஆயோக்கின் உறுப்பினர் ரமேசு சந்த் மற்றும் ஜார்ஜ்டவுன் பல்கலைக் கழகத்தின் இணைப் பேராசிரியர் அனூப் சிங் ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர்.

நடுவண் அரசு பகுப்புத் தொகுப்பு (divisable pool) வரி வருவாயை மாநிலங்களுக்குப் பிரித்தளிக்க ஒரு சூத்திரத்தை அளிக்கும். அந்த சூத்திரம் பல காரணிகளைக் கொண்டு உருவாக்கப்படும். உதாரணமாக 13ஆவது நிதிக் குழுவை எடுத்துக் கொண்டால் அவை பின் வரும் காரணிகளை, வெவ்வேறு அளவைகளில் (weightage) கணக்கில் கொண்டன. எல்லாக் காரணிகளும் ஒரே அளவிற்கு முக்கியத்துவம்

பெற்றவை அல்ல என்பதால் தான் ஒவ்வொன்றிற்கும் ஒரு அளவீடு அளிக்கப்படு கின்றது. அதன்படி ஒரு மாநிலத்தின் பரப்பள விற்கு 10 புள்ளிகளும், நிதிக் கட்டுப்பாட்டிற்கு (fiscal discipline) 17.5 புள்ளிகளும், இந்திய சராசரி வருமானத்திலிருந்து ஒரு மாநிலம் எவ்வளவு பின்தங்கியுள்ளது என்பதற்கு 47.5 புள்ளிகளும், மாநிலத்தின் மக்கள் தொகைக்கு 25 புள்ளிகளும் வழங்கப்பட்டன. ஆக 100 புள்ளிகளும் இவ்வாறாக 13ஆவது நிதிக் குழுவில் பகிர்ந்தளிக்கப்பட்டது. ஆனால் 14ஆவது நிதிக்குழுவில் பரப்பளவை மட்டுமே நிதி ஒதுக்கலுக்கு அளவீடாகக் கடைபிடிக்கத் தொடங்கினர். அதை 15 புள்ளிகளாக்கினர். நிதிக் கட்டுப்பாட்டை கணக்கில் கொள்ளவேயில்லை. ஒரு புதிய மாநிலத்தின் காட்டின் பரப்பளவுக்கு 7.5 புள்ளிகள் அளவீடாக வழங்கப்பட்டது. வருமானம் பின்தங்கி விட்டதற்கான அளவீடு 50 புள்ளிகளாக உயர்த்தப்பட்டது. மக்கள் தொகை அடிப்படையில் பின்பற்றப்பட்ட நிதி ஒதுக்கீடு 2011இல் 10 புள்ளிகளாக மாற்றப் பட்டது. 1971 மக்கள் தொகைக்கு முந்தைய நிதிக் குழுவில் வழங்கப்பட்ட 25 புள்ளி அளவீடு 17.5 புள்ளியாகக் குறைக்கப்பட்டது. இந்த மாற்றங்களால் தமிழகத்திற்கு அதன் பங்கில் ஆண்டுதோறும் ரூ.6,000 கோடி என்ற அளவிற்கு நிதி குறைந்துபோனது. 2015 முதல் 2020 வரையில் இதன் மூலம் தமிழகம் இழப்பது ரூ.30,000 கோடி.

கூட்டாட்சி தத்துவத்தின் அடிப்படையில் அனைத்து மாநிலங்களுக்கும் வரி வருவாயைப் பகிர்ந்தளிக்க உருவாக்கப்பட்ட இந்த நிதிக் குழுவின் 15ஆவது குழு அதன் பணிகளைத் துவக்கியுள்ளது. இதன் செயல்பாடுகள் அதிர்ச்சி அளிப்பவையாக உள்ளன. வட மாநிலங்களை வாழவைத்து தென் மாநிலங்களை, குறிப்பாக தமிழ்நாட்டை வஞ்சிக்கும் வகையிலான செயல் பாட்டை கையிலெடுத்துள்ளது அம்பலமாகி யுள்ளது. 15ஆவது நிதிக் குழுவின் ஒரு அறிவிப்பு மிகவும் அச்சமூட்டும் ஒன்றாகும். 2011ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் இக்குழு மாநில அரசுகளுக்கான நிதியைப் பகிர்ந்தளிக்கும் என்பது அந்த அறிவிப்பு. இந்த அறிவிப்பு சமூக முன்னேற்றக் கட்டமைப்பில் கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாகச் சிறப்பாக செயல்பட்டு சாதனை படைத்துள்ள தமிழ்நாட்டிற்கு பெரும் வருவாய் இழப்பை ஏற்படுத்தக் கூடியதாகும். அதே வேளையில் கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக சமூகப் பாதுகாப்பை உறுதி செய்ய இயலாமல் பொறுப்பற்று செயல்பட்டிருக்கின்ற வட மாநிலங்களுக்கு கூடுதல் வருவாயை மடை மாற்றும் நடவடிக்கையாகும். 15ஆவது நிதிக் குழுவின் இந்த அறிவிப்பு இந்திய கூட்டாட்சித் தத்துவத்தையே கேள்விக்குள்ளாக்குகிறது.

1971ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக் கெடுப்பின் அடிப்படையில் தான் முந்தைய காலங்களில் இந்தக் குழு மாநில அரசுகளுக்கான நிதியைப் பகிர்ந்தளித்து வந்தது. ஆனால் 14ஆவது நிதிக் குழு 2011ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, 10 புள்ளி அளவீட்டுடன் மாநில அரசுகளுக்கான வரியைப் பகிர்ந்தளித்தது. 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் படி 10 புள்ளி அடிப்படையில் பகிர்ந்தளித்த போதே தமிழ்நாட்டுக்கு 2016-17ஆம் நிதியாண்டில் ரூ.6,000 கோடி வருவாய் இழப்பு ஏற்பட்டிருந்தது. ஆனால் வட மாநிலங் களோ இதற்கு மாறாகக் கூடுதல் வருவாய் பெற்றன. 13ஆவது நிதிக் குழுவின் மூலம் தமிழகத்திற்கு கிடைத்த நிதியை விட 14ஆவது நிதிக் குழுவின் மூலம் 19.4 விழுக்காடு குறை வாகவே நிதி கிடைத்துள்ளது. இது எவ்வாறு நிகழ்ந்துள்ளது என்பதைப் பார்ப்போம்.

2011ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி இந்தியாவின் மக்கள் தொகை 121 கோடியாகும். 1971ஆம் ஆண்டில் இந்தியாவின் மக்கள் தொகை வெறும் 56.6 கோடியாகத் தான் இருந்திருக்கிறது. 1971ஆம் ஆண்டில் 4.11 கோடியாக இருந்த தமிழ்நாட்டின் மக்கள் தொகை 40 ஆண்டுகளுக்குப் பின்னர் 2011ஆம் ஆண்டில் 7.21 கோடியாக மட்டுமே அதிகரித்தது. தமிழ்நாட்டின் மக்கள் தொகை கடந்த நாற்பது ஆண்டுகளில் 75.1 விழுக்காடு மட்டுமே அதிகரித்தது. கேரளாவிலும் இந்த நாற்பது ஆண்டுகளில் 56.4 விழுக்காடு மட்டுமே மக்கள் தொகை அதிகரித்தது. கேரளாவில் 1971ஆம் ஆண்டு 2.13 கோடியாக மக்கள் தொகை 2011ஆம் ஆண்டில் 3.34 கோடியாக அதிகரித்தது. ஆனால் மற்ற இந்திய மாநிலங்களில் மக்கள் தொகை பெருமளவு உயர்ந்துள்ளது. அதிகபட்சமாக காஷ்மீரில் 171.82 விழுக்காடு அதிகரித்துள்ளது. கோவாவில் 83.13 விழுக்காடும், மத்தியப் பிரதேசத்தில் 141.85 விழுக்காடும், மகாராஷ்டிராவில் 122.91 விழுக்காடும்,

ஜார்க்கண்டில் 131.71 விழுக்காடும், பஞ்சாப்பில் 104.44 விழுக்காடும், மணிப்பூரில் 153.54 விழுக்காடும் மக்கள் தொகை அதிகரித்துள்ளது. பெரும்பாலான மாநிலங்கள் இந்த நாற்பது ஆண்டுகளில் 100 விழுக்காட்டிற்கும் அதிகமாக மக்கள் தொகை வளர்ச்சியைக் கண்டுள்ளன. மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற நடுவண் அரசின் வேண்டுகோளின்படி தமிழ்நாடு, கேரளா ஆகிய இரு மாநிலங்களும் பல்வேறு சமூக மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தியுள்ளன.

குறிப்பாக மக்கள் தொகையைக் கட்டுப் படுத்த பெண் கல்வியை அதிகரிப்பதையே தமிழ்நாடும், கேரளாவும் முக்கிய இலக்காகக் கொண்டு செயல்பட்டுள்ளன. இந்த இரு மாநிலங்களிலும் கல்வி கற்ற பெண்களின் எண்ணிக்கை அகில இந்திய சராசரியை விட மிக அதிகமாகும். 2015-16ஆம் நிதியாண்டில் வெளியான தேசிய குடும்பநல சுகாதார ஆய்வறிக்கையின் படி 15 வயது முதல் 45 வயதுக்குட்பட்ட எழுத்தறிவு பெற்ற இந்தியப் பெண்களின் விகிதம் 68.4 விழுக்காடாகும். 15 வயது முதல் 24 வயதுக்குட்பட்ட பெண்களைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் 97.07 விழுக்காட்டினரும், கேரளாவில் 99.91 விழுக்காட்டினரும் எழுத்தறிவுப் பெற்றுள்ளனர். ஆனால் வட இந்திய மாநிலங்களான மத்தியப் பிரதேசத்தில் 15 வயது முதல் 24 வயதுக்குட்பட்ட பெண்களில் இன்னமும் 22.39 விழுக்காட் டினரும், ஜம்மு காஷ்மீரில் 23.75 விழுக்காட் டினரும், உத்தரப் பிரதேசத்தில் 24.22 விழுக்காட் டினரும், ஜார்க்கண்டில் 28.64 விழுக்காட் டினரும், ராஜஸ்தானில் 28.7 விழுக்காட்டினரும், பீகாரில் 36.3 விழுக்காட்டினரும் எழுத்தறிவு அற்றவர்களாக உள்ளனர்.

சர்வேதேச அளவில் எங்கெல்லாம் பெண்களின் படிப்பறிவு அதிகமாக இருக் கிறதோ அங்கெல்லாம் பெண்கள் கருவுறுதல் விகிதாச்சாரமும் குறைவாக இருக்கின்றன என்று ஆய்வுகள் கூறுகின்றன. அந்த வகையில் இந்தியாவிற்கே முன்னுதாரணமான முறையில் தமிழ்நாட்டிலும், கேரளாவிலும் பெண்களின் படிப்பறிவு மிக அதிகமாக உள்ளது. இதனால் கடந்த முப்பது ஆண்டுகளில் தமிழகம் மற்றும் கேரளாவின் மக்கள் தொகை உயர்வு வெகுவாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பெரும்பாலான வட இந்திய மாநிலங்கள் பெண் கல்விக்கு உரிய முக்கியத்துவம் அளிக்காததால் அந்த மாநிலங் களின் மக்கள் தொகை கட்டுக்கடங்காமல் அதிகரித்துள்ளது. பெண் கல்வியை அதிகரிக்க தமிழ்நாடு கடந்த முப்பது வருடங்களில் பல சமூக சீர்திருத்த நடவடிக்கைகளையும் தொடர்ச்சியாக மேற்கொண்டுள்ளது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் தமிழக அரசின் மதிய உணவுத் திட்டம் பள்ளி செல்லும் குழந்தைகள் இடை நிற்றலைக் வெகுவாகக் கட்டுப்படுத்தியுள்ளது.


அதேபோல பெண் கல்வியை அதிகரிப்பதில் இருக்கும் மற்றொரு முக்கியக் காரணி, பெண்களின் மாதவிடாய் கால சுகாதார வசதிகளாகும். 2015-16 தேசிய குடும்பநல சுகாதார ஆய்வு, இந்தியாவில் 15-24 வயதுக்குட்பட்ட பெண்களுக்கு சராசரியாக 50 விழுக்காட்டிற்கு மேல் மாதவிடாய் கால சுகாதார வசதிகள் கிடைப்பதில்லை என்று கூறுகிறது. ஆனால் தமிழ்நாட்டிலும், கேரளாவிலும் பல உலக நாடுகளுக்கு இணையான மாதவிடாய் கால சுகாதார வசதிகளை 15 வயது முதல் 24 வயதுக்குட்பட்ட பெண்கள் பெற்றுள்ளனர். இந்த வயதுக்குட்பட்ட பெண்களில் தமிழ் நாட்டில் 91.4 விழுக்காட்டினரும், கேரளாவில் 90 விழுக்காட்டினரும் மாதவிடாய் கால சுகாதார வசதிகளைப் பெற்றுள்ளனர். மேற்கு வங்கம், ஜார்க்கண்ட், ஒடிசா, சத்தீசுகர், உத்தரப் பிரதேசம், அசாம், மத்தியப் பிரதேசம், பீகார் ஆகிய மாநிலங்களில் 15 வயது முதல் 24 வயதுக்குட்பட்ட பெண்களுக்கு 50 விழுக்காடு கூட மாதவிடாய் கால சுகாதார வசதிகள் கூட கிடைக்கவில்லை என்ற அவலநிலை தான் நிலவுகிறது. மோடி ஆண்ட குஜராத்தில் 60.3 விழுக்காட்டினருக்கும், ராஜஸ்தானில் 55.2 விழுக்காட்டினருக்கும், மகாராஷ்டிராவில் 66.1 விழுக்காட்டினருக்கும் மட்டுமே மேற்கண்ட வயதுப் பெண்களுக்கான மாதவிடாய் கால சுகாதார வசதிகள் கிடைத்துள்ளது. பள்ளி, கல்லூரிகளில் பெண்களுக்கான கழிப்பிட வசதிகள் தரமானதாக இருப்பதும் இதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. பள்ளிகளில் தரமான கழிப்பிட வசதிகள் இல்லாததும் பல்வேறு வட மாநிலங்களில் பெண் குழந்தைகளின் இடை நிற்றலுக்கு முக்கியக் காரணமாக உள்ளது.

இவ்வாறாக வட மாநிலங்களான மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், பீகார் மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களின் சமூக மேம்பாட்டு வளர்ச்சி என்பது லிபியா, மொராக்கோ, சூடான், சோமாலியா மற்றும் துனுசியா போன்ற சகாரா பாலைவன நாடுகளில் நிலவும் சூழ்நிலைகளைப் போல மிகவும் மோசமான வளர்ச்சியையே பதிவு செய்துள்ளன. ஆனால் தென் மாநிலங்களான கேரளாவும், தமிழ்நாடும் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் சமூக மேம்பாட்டு அமைப்பில் (ஓ.இ.சி.டி.) உள்ள நாடுகளுக்கு இணையான வளர்ச்சியைப் பெற்றுள்ளன. இந்த அமைப்பில் அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, ஜெர்மனி, கொரியா சுவீடன் உள்ளிட்ட வளர்ந்த மற்றும் வளரும் நாடுகள் என 35 நாடுகள் இடம் பெற்றுள்ளன. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 1968ஆம் ஆண்டு முதல் திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய இருபெரும் திராவிட கட்சிகள் மட்டுமே ஆட்சி அதிகாரத்தில் இருந்து வருகின்றன. சமூக மேம்பாடு மற்றும் அடிப்படைக் கட்டமைப்பு போன்றவற்றில் இந்த இரண்டு கட்சிகளும் மாறி மாறி ஆட்சியில் இருந்தபோது செயல்படுத்திய திட்டங்களை ஒட்டுமொத்த இந்திய ஆட்சி அதிகாரத்தையும் மாறி மாறி கையில் வைத்திருந்த காங்கிரஸ் மற்றும் பாஜக கட்சிகளால் கூட அளிக்க இயவில்லை என்பது தான் எதார்த்தமான உண்மை. வட மாநிலங்களைப் பொறுத்தவரையில் பல்வேறு மாநிலங்களில் இந்த இரண்டு தேசிய கட்சிகளும் தொடர்ந்து ஆட்சியில் இருந்து வருகின்றன. ஆனால் ஒரு மாநிலத்தில் கூட தமிழ்நாட்டிலும், கேரளாவிலும் காணப்படும் சமூக மேம்பாடு வளர்ச்சியை இவர்களால் அளிக்க இயலவில்லை.

வட மாநிலங்கள் காணாத வளர்ச்சியை தமிழ்நாடு கண்டிருப்பதற்காக தமிழ்நாட்டை தண்டிப்பதைப் போல வரி வருவாய் பங்கீட்டைக் குறைத்து வருகிறது நடுவண் அரசு. மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற ஒன்றிய அரசின் கோரிக்கையை நிறைவேற்றியதற்காக தமிழ்நாட்டிற்கு கிடைத்த தண்டனையாகத் தான் இருக்கிறது இந்த வருவாய் இழப்பு. 2011 மக்கள் தொகை அடிப்படையில் வரி வருவாயை நிதிக் குழு நிர்ணயித்து வழங்குவதால், உரிய சமூக மேம்பாட்டுத் திட்டங்களை மேம்படுத்த இயலாத வட மாநிலங்களுக்கு வருவாய் உயர்ந்துள்ளது. சிறப்பாகச் செயல்பட்ட தமிழ்நாட்டிற்குக் குறைந்துள்ளது. குறிப்பாகக் கோவா மாநிலம் 13ஆவது நிதிக் குழு நிர்ணயித்த வரி வருவாயை விட 2016-17ஆம் நிதியாண்டில் 42.11 விழுக்காடு கூடுதலாகப் பெற்றுள்ளது. மத்தியப் பிரதேசம் 6.01 விழுக்காடும், மகாராஷ்டிரா 6.19 விழுக்காடும், ஜார்க்கண்ட் 12.03 விழுக்காடும், சத்தீசுகர் 24.7 விழுக்காடும் கூடுதலாகப் பெற்றுள்ளன. தமிழ்நாடு 19.04 விழுக்காடு குறைவாகப் பெற்றுள்ளது. 10 புள்ளி அடிப்படையில் ஒதுக்கப்பட்ட போதே 19.04 விழுக்காடு (ரூ.6,000 கோடி) இழப்பு ஏற்பட்டுள்ளது என்றால், 15ஆவது நிதிக் குழு 27.5 புள்ளி எடையுடன் 2011 மக்கள் தொகையைக் கணக்கில் கொள்வதாக (1971 மக்கள் தொகையை முற்றிலும் நிராகரித்து) அறிவித்துள்ளதால் தமிழ்நாட்டிற்கு மேலும் பலமடங்கு வருவாய் இழப்பு ஏற்படும் பேரபாயம் ஏற்பட்டுள்ளது. 15ஆவது நிதிக் குழுவின் அறிவிப்பின்படி தமிழ்நாட்டுக்கு தோராயமாக 13ஆவது நிதிக் குழுவின் ஒதுக்கீட்டிலிருந்து சுமார் 70 விழுக்காடு வரை வரி வருவாய் இழப்பு ஏற்படும் என்று கணிக்கப் பட்டுள்ளது. இது தமிழ்நாட்டிற்கு இந்திய ஒன்றியம் இழைக்கும் மிகப்பெரிய அநீதியாகும்.


அண்மையில் தனக்குத் தானே பொது வாக்கெடுப்பு நடத்தித் தனி நாடக அறிவித்துக் கொண்ட கேட்டலோனியா, தனி நாடு முடிவிற்கு சென்றதற்கு அவர்கள் முன்வைத்த முக்கியக் காரணங்களில் ஒன்று வரி மேலாண்மையாகும். இப்போது இந்திய ஒன்றியத்திலும், தமிழ்நாடு இதுபோன்ற ஒரு மோசமான புறக்கணிப்பை எதிர்கொண் டுள்ளது. ஜிஎஸ்டி, கல்வி உரிமைச் சட்டங்கள் என மாநில உரிமைகளைக் குறைத்து, ஒன்றிய அரசு தன் அதிகாரத்தை அதிகரித்துக் கொண்டும், மாநில அரசுகளின் அதிகாரத்தைக் குறைத்துக்கொண்டும் இருக்கிறது. மாநில சுயாட்சிக்கான குரல்கள் அதிகரித்து வரும் இக்காலகட்டத்தில், தமிழ்நாட்டிற்கு இழப்பை ஏற்படுத்துகின்ற இம்முடிவுகள் தமிழ்நாடு இந்திய ஒன்றியத்துடன் இணைந்திருப்பதற்கான அர்த்தத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டிய தேவைக்கு வித்திடுகிறது.

கட்டுரையாளர் : பத்திரிகையாளர்



# டார்வினின் பரிணாம கோட்பாடு தவறா?





## மத்திய அமைச்சருக்கு அறிவியல்பூர்வ மறுப்பு

“டார்வினின் பரிணாம வளர்ச்சிக் கோட்பாடு விஞ்ஞான ரீதியாக தவறானது. அதனை பள்ளி, கல்லூரிப் பாடப் புத்தகங்களிலிருந்து நீக்க வேண்டும். மனிதன் இந்த பூமியில் எந்தக் காலத்திலும் மனிதனாகவே இருந்துள்ளான். குரங்கு மனிதனாக மாறியதாக நம் முன்னோர்கள் எங்கும் கூறவில்லை” என்று மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை இணை அமைச்சர் சத்யபால் சிங் அதிரடியாகப் பேசியுள்ளார். ஜனவரி 19 அன்று ஔரங்காபாத்தில் அனைத்திந்திய வைதிக சம்மேளன நிகழ்ச்சியில் பேசும்போது இவ்வாறு உரையாற்றியுள்ளார்.அத்துடன் நில்லாமல் “நான் அடிப்படை ஏதும் இல்லாமல் இதைக் கூறவில்லை. டார்வினுடைய கொள்கைக்கு உலகம்முழுவதும் எதிர்ப்பு இருக்கிறது. நான் கலைப்பிரிவு பின்னணியிலிருந்து வந்தவன் அல்ல. தில்லி பல்கலைக் கழகத்தில் வேதியியல் பிஎச்.டி. பட்டம் வாங்கியவன். நானும் அறிவியல் மனிதன்தான்” என்று கூறி தனது கருத்துக்கு வலுவூட்ட முயன்றிருக்கிறார் சத்யபால் சிங். நமக்கோ ‘நானும் ரவுடிதான்’ என்று வடிவேலு ஒரு படத்தில் அலப்பறை செய்ததுதான் நினைவுக்கு வருகிறது!

கிராஃபிக்சில் காண்பிப்பது மாதிரி நமது முன்னோர்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே குரங்கு மனிதனாக மாறியதுஎன்று விஞ்ஞானிகள் சொல்வதாக அவர் புரிந்து வைத்திருக்கிறாரா என்று தெரியவில்லை. பரிணாம மாற்றம் நிகழ லட்சக் கணக்கான ஆண்டுகள் ஆகும் என்பதை அவருக்கு யாராவது எடுத்துச் சொன்னால் நல்லது. இப்படிப்பட்டவர் மனித வள மேம்பாட்டுத் துறையில் அமைச்சராக இருக்கிறார் என்பது தற்போதைய ஆட்சி என்ற ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்று விவரமறிந்தவர்கள் புரிந்து கொள்வார்கள்.சத்யபால் சிங்கின் கூற்றினை விஞ்ஞானிகள் ஏற்கவில்லை. “உயிரினங்களின் பரிணாமம் என்பது அனைத்து உயிரின

செயல்முறைகளுக்கும் ஆதாரமானது. அடிப்படையானது. அது எடுத்துக் கொள்ளும் கால அளவு என்பது மனித மனத்தினால் புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு இருக்கிறது" என்கிறார் பெங்களூரு ஐஐடியின் மூலக்கூறு மறுஉற்பத்தி, வளர்ச்சி மற்றும் மரபியல் துறையின் தலைவர் சந்தியா எஸ். விஸ்வேஸ்வரையா. 1800 விஞ்ஞானிகள் கையெழுத்திட்டு கீழ்க்கண்டகடிதத்தை சிங்கிற்கு அனுப்பியுள்ளனர். சமூகவலைத் தளங்களிலும் அதை வெளியிட்டுள்ளனர்.

"விஞ்ஞானிகளும், அறிவியல் பரப்புரை செய்வோரும், பொதுமக்களில் அறிவியல் சார்ந்து சிந்திப்போருமான நாங்கள் உங்கள் கூற்றைக் கண்டு ஆழ்ந்த வருத்தம் அடைந்துள்ளோம். பரிணாமக் கொள்கை அறிவியல் சமூகத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ளதாகக் கூறுவது தவறானது. மாறாக, ஒவ்வொரு புதிய அறிவியல் கண்டுபிடிப்பும் சார்லஸ் டார்வினுடைய கூர்ந்த மதிக்கு வலுவூட்டவே செய்கிறது" என்று செல்கிறது கடிதம்."இது கல்வித் துறைக்கு தர்மசங்கடம் மட்டுமல்ல அத்துறையின் உயர்ந்த பதவிக்கே அவமானம்" என்கிறார் பயோகான் நிறுவனத்தின் தலைவரும் நிர்வாக இயக்குநருமான கிரன் மஜூம்தார்.இந்திய தேசிய அறிவியல் அகாடமி (INSA), அறிவியல்பிரிவுகளின் தேசிய அகாடமி (NAS), அறிவியலின் இந்தியஅகாடமி (IAS) ஆகிய மூன்று அறிவியல் நிறுவனங்களைச் சேர்ந்த விஞ்ஞானிகள் சத்யபால் சிங்கின் கூற்றைக்கண்டித்து அறிக்கை வெளியிட்டுள்ளனர். ஆட்சியாளர்களிடமிருந்து எழும் அறிவியலுக்கு புறம்பானதொரு கருத்தினைக் கண்டிக்க அவர்கள் முதன்முறையாக முன் வந்துள்ளனர்."அமைச்சருடைய கருத்துகளுக்கு எந்த அறிவியல் அடிப்படையும் இல்லை. டார்வின் மிக முக்கிய பங்களிப்பைச் செய்த பரிணாமக் கோட்பாடு நன்கு நிரூபிக்கப்பட்ட கோட்பாடு. பரிணாம வளர்ச்சியின் அடிப்படை உண்மைகளில் எந்த அறிவியல் சர்ச்சையும் கிடையாது. பரிணாமக் கோட்பாடு எடுத்து வைத்த பல கருதுகோள்கள் பரிசோதனைகளாலும் கூர்ந்து நோக்கிச் சேகரித்த தகவல்களாலும் மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்டவை. இந்த பூமிக் கிரகத்தில் மனிதர்கள், பிற மனிதக் குரங்குகள் உட்பட உள்ள அனைத்து உயிரினங்களும் ஒன்றுஅல்லது ஒரு சில ஆதி மூதாதையரிடமிருந்து பரிணாமவளர்ச்சி அடைந்தவை என்பது பரிணாமக் கொள்கையிலிருந்து நமக்குக் கிடைத்த முக்கியமான நுண்ணறிவு. பள்ளி, கல்லூரிப் பாடப் புத்தகங்களிலிருந்து பரிணாமக் கொள்கையை நீக்குவதோ, அறிவியலுக்குப் புறம்பான கட்டுக்கதைகளைக் கூறி அதை நீர்த்துப் போகச் செய்வதோ பிற்போக்கானதொரு நடவடிக்கையாகவே இருக்கும். டார்வின் முன்மொழிந்த பரிணாமக் கொள்கையின்படி நடைபெற்ற இயற்கையின் தேர்வு பின்னர் விஞ்ஞானிகளால் நன்கு செழுமைப்படுத்தப்பட்டு, நவீன உயிரியல், மருத்துவம் மட்டுமல்ல அனைத்து நவீன அறிவியல் துறைகளிலும் மிகப் பெரிய செல்வாக்கைச் செலுத்தி வருகிறது. உலகம் முழுவதிலும் அது பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கோட்பாடு" என்கிறது அந்த அறிக்கை.

நாட்டில் பரவலாக உள்ள அறிவியல் நிறுவனங்களின் விஞ்ஞானிகளும் மாணவர்களும் அமைச்சர் தனது அறிவிப்பை திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கோரி அவருக்கு கடிதம் எழுதியுள்ளனர். அமைச்சருடைய கருத்து அறிவியல் சம்பந்தப்பட்டது மட்டுமல்ல, அதில் ஆள்வோரின் அரசியலும் இருக்கிறது. என்னது. அறிவியலில் அரசியலா என்று கேட்காதீர்கள். அரசியல் இல்லாத இடம் ஏதாவது இருக்கிறதா? கலீலியோவை சிறையில் வைத்தது அன்றைய மதவாத அரசியல்.இன்று உண்மையான அறிவியலை போலி அறிவியல் கொண்டு தாக்குவது இன்றைய இந்திய ஆட்சியாளர்களின் மதவாத அரசியல்.

டார்வினின் பரிணாமக் கோட்பாடு தவறானது என்பது சத்யபால் சிங்கின் கருத்து மட்டுமல்ல. அவரது கருத்தை உடனே ஆதரித்து அறிக்கை வெளியிட்ட பாஜகவின் பொதுச் செயலாளர் ராம் மாதவ் தங்களது கருத்துக்கு ஆதரவாக, படைப்புக் கொள்கைதான் சரி என்று வாதிடும் வலதுசாரி கிறித்தவர்களைத் துணைக்கு அழைத்துக் கொண்டுள்ளார். பரிணாமக் கொள்கைக்குப் பதிலாக அவர்கள் அறிவார்ந்த வடிவமைப்பு (Intelligent design))

என்ற பெயரில் ஒரு மாற்றுக் கோட்பாட்டை முன்வைக்கின்றனர். பாஜக தலைவர்களும் தத்துவவியலாளர்களும் வரலாற்றை அறிவியல் அடிப்படையில் ஆய்வு செய்வதற்குப் பதில் புராணக் கதைகளையும் இதர கட்டுக் கதை களையும் நமது வரலாறாக முன்வைக்கின்றனர். இந்திய வரலாற்று ஆய்வுக் குழுத் தலைவர் எஸ்.ஆர்.ராவ் புராணக் கதைகளை "வாய்மொழி வரலாறு" என்று குறிப்பிட்டு நியாயப்படுத்தினார். வழக்கமாக மேடைகளில் சண்டமாருதம் செய்யும் நமது பிரதமர் மோடி இதையெல்லாம் பற்றிப் பேசாமல் மௌனமாக இருக்கிறாரே என்று கேட்பதில் பொருள் இல்லை. மௌனம் அவரது சம்மதத்திற்கு அறிகுறி என்பதை நாம்தான் புரிந்து கொள்ள வேண்டும். அறிவியலுக்குப் புறம்பான கட்டுக்கதைகளின் அடிப்படையில் "நவீன இந்தியா"வை நிர்மாணிப்பதே பாஜகவின் நோக்கமாக இருக்கிறது. பரிணாமக் கொள்கைக்கு எதிரான அமைச்சரின் கருத்தை வெளிப்படையாக மறுத்து அறிவியல் நிறுவனங்களைச் சேர்ந்த விஞ்ஞானிகள் அறிக்கை வெளியிட்டிருப்பது நல்லதொரு திருப்புமுனை. கடந்த காலத்தில் அவர்கள் இப்படி கிளர்ந்தெழாததைக் கண்டித்த மறைந்த விஞ்ஞானி புஷ்பா பார்கவா அறிவியல் நிறுவனங்களுடன் இருந்த தொடர்பை துண்டித்துக் கொண்டார். அவர் இன்று இருந்திருந்தால் அறிவியல் மீதான தாக்குதலுக்கு எதிராக விஞ்ஞானிகள் குரல் எழுப்பியது கண்டு அகமகிழ்ந்திருப்பார்.

"சத்யபால் சிங் மற்றும் பாஜக/ஆர்.எஸ்.எஸ்.சின் திட்டம் அறிவியல் சார்ந்ததல்ல. அது அவர்களின் அரசியல். அறிவியலையும் விஞ்ஞானிகளையும் அவர்கள் அரசியல்ரீதியாக இரு முகாம்களாகப் பிரிக்க முயல்கின்றனர். நாட்டை எதிர்நோக்கியுள்ள இந்த உண்மையான ஆபத்திற்கு எதிராக நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்" என்கிறார் இந்திய தேசிய அறிவியல் அகாடமியின் முன்னாள் தலைவரும் சர்வதேச அங்கீகாரம் உள்ள உயிரியல் விஞ்ஞானியுமான ராகவேந்திர கடக்கர்.

"பல நேரங்களில் இந்த யுகம் அறிவியல் யுகம் என்று மக்கள் கூறுகிறார்கள். எனவே, அறிவியல் யுகத்திற்கு ஏற்றபடி மதக் கருத்துகளில் சில மாற்றங்களைக் கொணர வேண்டும் என்கிறார்கள். நான் கூறுவது இதற்கு எதிரானது. அறிவியலின் ஒவ்வொரு ஆராய்ச்சி முடிவின் அடிப்படையில் நாம் மதக் கருத்துகளை மாற்றிக் கொண்டே போக முடியாது" என்றார் ஆர்.எஸ்.எஸ்ஸின் குரு கோல்வால்கர். இந்த விஷயத்தில் கோல்வால்கர் பயன்படுத்தும் மொழி இஸ்லாமியப் பழமைவாதிகள் பயன்படுத்தும் மொழியைப் போன்றதே. அவர்கள் நவீன யுகத்தை இஸ்மிலாமியப்படுத்த விரும்புகின்றனர். ஆர்எஸ்எஸ் நவீன யுகத்தை காவிமயப்படுத்த முயல்கிறது.

> **குரங்கிலிருந்து மனிதன் வந்துவிட்டான். அந்தக் குரங்கு ஏன் இன்னொன்றாக பரிணமிக்கவில்லை என்பதும் சிறுபிள்ளைத்தனமான கேள்வியே!**

பேரண்டத்தையும் மனிதர்கள் உட்பட உள்ள அனைத்து உயிரினங்களையும் படைக்க கடவுள் ஆறு நாட்களை எடுத்துக் கொண்டார் என்கிறது கிறித்தவ மதம். பைபிளில் உள்ள படைப்புக் கொள்கையை அடிப்படையாக வைத்தே அமெரிக்காவில் சிலர் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பரிணாமக் கொள்கையோடு படைப்புக் கொள்கையையும் சொல்லித் தர வேண்டும் என்கின்றனர்.இந்துத்துவாவாதிகள் சிறுபான்மையினர் மீது தாக்குதல் தொடுக்கின்றனர். ஒரு புறம் மதச்சார்பின்மை, நாடாளுமன்ற ஜனநாயகம் போன்ற மேற்குலக சிந்தனைகளை ஏற்போரை அவர்கள் கண்டிக்கின்றனர். மறுபுறம் அவர்களே மத அடிப்படைவாதம் என்று வரும்போது அங்குள்ள பழமைவாதிகளைப் பின்பற்றவே முனைகின்றனர். ஏன் இந்த இரட்டை நிலை?

கோல்வால்கர் பழைய இந்தியாவை அல்ல, நவீன இந்தியா இப்படித்தான் இருக்க வேண்டும் என்று வரையறை செய்கிறார். அவரைப் பொறுத்தவரை நமது பண்பாடு இந்து பண்பாடு.. நமது மொழி சமஸ்கிருதம்.. நமது இனம் ஆரிய

இனம். நவீன இந்தியாவின் அடையாளங்களாக இம்மூன்றுமே இருக்க வேண்டும் என்கிறார். மத அடிப்படைவாதத்தை மட்டுமல்ல, பாசிசத்தையும் இந்துத்வாவாதிகள் மேற்குலகிலிருந்தே பெறுகிறார்கள். அறிவியலுக்கும் மேலானதாக அவர்கள் மதத்தை வைக்கக் காரணம், கேள்வி கேட்கும் பகுத்தறிவு சிந்தனைகளைக் கண்டு அவர்கள் அஞ்சுகின்றனர். வெறுப்பு, பயம் அடிப்படையில் அமைந்த இந்தியாவையே அவர்கள் கட்டமைக்க விரும்புகின்றனர்.

குரங்கிலிருந்து மனிதன் வந்ததை யாரும் பார்க்கவில்லை. அதனால் குரங்கிலிருந்து மனிதன் வந்தானென்பது அறிவியல்பூர்வவமாக தவறானது என்று மனிதவள மேம்பாட்டுத் துறை இணை அமைச்சர் சத்யநாத் சிங் கூறியிருக்கிறார். மற்றெந்த விஞ்ஞானிகளைவிடவும் கருத்து ரீதியாக பலரால் தாக்குதலுக்குள்ளானவர்.

முதலில் குரங்கிலிருந்து மனிதன் வந்தான் என்று எங்காவது குறிப்பிட் டிருக்கிறாரா டார்வின்- இல்லவே யில்லை. டார்வின் மனிதக் குரங்குகளும், மனிதர்களும் ஏற்கனவே வாழ்ந்து மறைந்த மனிதக் குரங்குகளிலிருந்து பரிணமித்திருக்கலாம். மிகவும் சரியாகச் சொன்னால் அவர் வார்த்தைகளிலேயே “We may infer that some ancient member of the anthromorphous sub group gave birth to man” இந்த வாக்கியத்தில் எங்கேயாவது குரங்கிலிருந்து மனிதன் வந்தான் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதா? பரிணாம விதியை பழிப்பவர்கள் கூறும் வார்த்தையது. அறிவியல் மகத்தான வளர்ச்சியைக் கண்டு விட்டது.

**1800 விஞ்ஞானிகள் கையெழுத்திட்டு மத்திய அமைச்சருக்கு மறுப்பு**

உடற்செயலியல் ரீதியாக, கரு வளர்ச்சியின் போது, உருவ அமைப்பில், ஏன் மரபணுக்களின் செயல்பாட்டில் விலங்குகளுக்கான ஒற்றுமை அமைப்பை வெகுவாக விளக்கிவிட்டார்கள். குரங்கிலிருந்து மனிதன் வந்துவிட்டான். அந்தக் குரங்கு ஏன் இன்னொன்றாக பரிணமிக்கவில்லை என்பதும் சிறுபிள்ளைத்தனமான கேள்வியே! இயற்கைத் தேர்வு நடந்துகொண்டேதான் இருக்கிறது. ஒரு வாதத்திற்கே வைத்துக் கொண்டாலும்கூட டார்வின் குறிப்பிடும் ancient anthromorphous sub group வாழ்ந்த காலம் சமார் 60 இலட்சம் வருடங்களுக்காவது முந்தையது. ஆதித்தாய் என்று கருதப்படும், மனிதனுமல்லாத, மனிதக் குரங்குமல்லாத நிமிர்ந்த நடை பழகிய அர்திபித்திகஸ் ரேமிடஸ் வாழ்ந்த காலம் குறைந்தது 43 இலட்சம் வருடங்கள். அமைச்சர் சத்யநாத் அத்தனை வருடங்கள் வாழ்ந்து விடுவாரா என்ன அதையெல்லாம் பார்ப்பதற்கு? மனித ஆயுளை வைத்து பரிணாமத்தையெல்லாம் கணித்துவிட முடியாது. சிம்பன்சியின் மரபணுக்களுக்கும், மனிதர்களின் மரபணுக்களுக்குமான ஒற்றுமை 90 சதவிதத்துக்கும் கூடுதல்! எந்த மதக் கண்ணோட்டங்களின் மூலமாகவும் நீங்கள் பரிணாம விதிகளை புரிந்து கொள்ள முடியாது என்பதை குறைந்த பட்சமாவது நினைவில் நிறுத்துங்கள்!

பரிணாமம் நிகழ்வதை, நிகழ்ந்து கொண்டிருப்பதை குறைந்த ஆயுள் கொண்ட பாக்டீரியாக்களை வைத்து, சிறு பூச்சிகளை வைத்து நிறுவ முடியும். ஈக்கள், டி.டி. பூச்சிகள், பாக்டிரி யாக்கள், நோய் எதிர்ப்பு மருந்துகளை எதிர் கொண்டு வாழும் அளவுக்கு மரபணு மாற்றங்களைப் பெற்று வருவதே - பரிணாம வளர்ச்சி நடந்து வருவதற்கு சான்று. மாற்றங்கள் மரபணுக்களில் நிகழ வேண்டும். அந்த மாற்றங்களை இயற்கை தெரிவு செய்ய வேண்டும். இயற்கைத் தெரிவு என்பது எந்த இலக்கையும் முன் வைத்து செயல்படாது. இந்த பண்பு இந்த விலங்கிற்கு நல்லது என்று திட்டமிட்டெல்லாம் செயல்படாது. அது சீரற்ற முறையில் தான் செயல்படும். அப்படிப் பெறப்பட்ட பண்புகள் தனது தாய், தந்தையரின் பண்புகளைவிட அதன் உயிர்த்திருத்தலுக்கு பேருதவியாக இருக்கும். அப்பண்புகளைக் கொண்ட சந்ததி வெற்றிகரமாக பரவ இயற்கைத் தெரிவு அனுமதிக்க வேண்டும். அவை தனித்தியங்கும். அதிலிருந்துதான் ஒரு புதிய சந்ததி உருவாகும். இதுதான் பரிணாமத்தின் பொது விதி. பொதுவாக விதிகளை சோதனைகள் கொண்டு அத்தனை துல்லியமாகச் சொல்லிவிட முடியாது.

ஓரளவிற்கு கணிக்கத்தான் முடியும். இந்த நவீன உலகில் அதற்கான வாய்ப்புகள் கூடிக் கொண்டே தான் வருகின்றன.

தவிரவும் டார்வின் இறைமறுப்பாளரும் அல்ல. எங்காவது அப்படிக் குறிப்பிட் டிருக்கிறாரா? பொதுவான ஒரு உயிரியிலிருந்து காலங்காலமாக அதன் மரபணுக்களில் ஏற்பட்ட மாற்றங்கள் பல உயிரிகளாக பரிணமித்திருக்க வேண்டும் என்பதே அவரது கணிப்பு. அந்த கணிப்பு பெரும் அளவில் வெற்றியும் கண்டிருக்கிறது. இக்கால அறிவியல் சூழல் போலவே 'தகுதியுள்ளவை தங்கி நிற்கும்' (Survival of the fittest) என்பதும் டார்வினால் வரையறுக்கப்பட்டதல்ல.

டார்வின் சமகாலத்தவரான ஆப்ஃபிரட் ரஸ்ஸல் வாலங் மலாய் தீவுக் கூட்டங்களில் ஆய்வு நடத்தி இந்தக் கோட்பாட்டினை உருவாக்கினார். 'இயற்கைத் தேர்வு' தம் சூழலுடன் மிகச் சிறப்பாக, ஒத்திசைந்துபோகும் உயிர்களே பிழைத்திருக்கும். அவை அடுத்து வரும் தலைமுறைகளுக்கு மரபணு சார்ந்த பண்பியல்புகளை அதிக அளவில் வழங்கும். சரிவர ஒத்திசைந்து போகாதவை வெளி யேற்றப்படும் என்பதே இந்த ஆய்வு. இந்த ஆய்வைவ டார்வின் ஏற்றுக் கொண்டார். அதேபோல இயற்கைத் தேர்விற்கு பாரபட்சம் கிடையாது.

அதுமட்டுமல்ல, அனுகூலமான பண்புகளைக் கொண்ட விலங்குகள் வெற்றிகரமாக வாழ்ந்துவிடும் என்பதும் தவறு. ஓர் எளிய உதாரணம் பெண் விலங்குகளைக் கவர அல்லது தங்களது இணைகளைக் கவர ஆண் விலங்குகள் அலங்காரமான புற அமைப்பு களைக் கொண்டிருக்கும். மயிலுக்குத் தோகை, மான்களுக்குக் கொம்பு, சிங்கத்தின் பிடரி மயிர் என உதாரணங்களை அடுக்கலாம். அழகு என்றறியப்பட்ட மான்களின் கொம்புகளே அவற்றைக் கொன்றும் விடலாம். இணைக்கான போட்டியில் இரு ஆண் மான்கள் சண்டை யிடலாம். சண்டையில் கொம்புகள் சிக்கி பிரிய முடியாததால் உணவெடுக்க முடியாமல் மரணித் தும் விடலாம் அல்லவா? சங்பரிவாரங்கள் பேசுவதைப்போல், குறுகிய அறிவை வைத்து பரிணாமத்தை விளக்கிவிட முடியாது. கடவுள்தான் எல்லாம் என்ற கடிவாளத்தை மாட்டிக் கொண்டால் எங்கு சுற்றியும் கடவுள் படைத்தார் என்ற மையப்புள்ளிக்கு வந்துவிடுவார்கள். அறிவியலை அப்படி கணித்து விடக் கூடாது என்பதை இந்த அமைச்சர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

- அறிவியல் கதிர் மற்றும் விஞ்ஞானச் சிறகு

**வாசகர் கடிதம்**

'நிமிர்வோம்' மாத இதழை தொடர்ந்து வாசித்து வருகிறேன். வரலாற்றுச் செய்திகளையும் தற்கால அரசியல் பொருளியல் பிரச்சினைகளையும் பெரியார் பார்வையில் பதிவு செய்து வருகிறது. குறிப்பாக நவம்பர் மாத இதழில் வந்த கட்டுரைகள். காந்தி ஜாதியை ஆதரித்தாரா? எதிர்த்தாரா? என்ற கட்டுரை காந்தி பற்றிய புதிய புரிதலைத் தந்தது. காஞ்சா அய்லய்யா பேட்டியில் 'சமூகக் கடத்தல்' குறித்து விரிவாக விளக்கியிருந்தார். அந்த சொற்றொடரே சிந்தனையைக் கிளறிவிட்டது. குழந்தை பெற்றுக்கொள்ளாவிட்டால் ஆண் ஆண்மையற்றவன், பெண் மலடியானவள் சொத்துக்கு வாரிசு இல்லாமல் போய்விடும் வயதானால் பார்த்துக்கொள்ள ஆள் இருக்கமாட்டார்கள் என்பதையெல்லாம் அடித்து நொறுக்கி குழந்தை வேண்டாம் என்று முடிவெடுத்து வாழும் தம்பதிகள் குறித்து வெளிவந்த கட்டுரை மிகவும் சிறப்பு. 1957 நவம்பர் 26 சாதியை ஒழிக்க சட்டத்தை எரித்து சிறை சென்ற கருஞ்சட்டைத் தோழர்களின் தியாகத்தை வாசிக்கும் போது உணர்ச்சிப்பூர்வமாக இருந்தது. களப்பணிகளில் ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும் என்ற உந்துதலைக் கொடுத்தது. ஜனவரி மாத இதழ் கார்ப்பரேட் சாமியார்கள் முகத்திரையையும் ஆன்மிக அரசியல் பேசும் ரஜினி முகத்திரையையும் சேர்த்தே கிழித்துவிட்டது. 'சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்' பொம்மலாட்ட விமர்சனத்தில் அண்ணாவின் கருத்தைப் படித்தபோது அந்தக் கருத்துகள் முழுமையாக வெளியிடப்பட வேண்டும் என்ற உணர்வே எழுந்தது.

முழுவதையும் போட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது. நிமிர்வோம் சிறப்பாகவும் தொடர்ச்சியாகவும் வெளிவர என் வாழ்த்துகள்.

பெரியார் யுவராஜ், மயிலாப்பூர், சென்னை.

# அரசு கட்டுப்பாட்டிலிருந்து கோயில்களை விடுவிக்கலாமா?

**விடுதலை அரசு**

கோயில்களை அரசுப் பிடியிலிருந்து மீட்க வேண்டும் என்று இந்துத்துவாதிகள் பார்ப்பனர்கள் கூறுவதில் நியாயமிருக்கிறதா?

இத்தனை பெரிய கோயில்களை கட்டியது யார்? மன்னர்கள்- அரசுகள்.

யாருடைய பணம்? மக்களை கசக்கி பிழிந்து வசூலித்த வரிப் பணம்.

எவருடைய உழைப்பு? மக்களின் உழைப்பு.

திருவரங்கம் கோவிலை கட்டிமுடித்த உழைப்பாளிகள் கூலிகேட்டு குழந்தை குட்டி களோடு ஒட்டிய வயிற்றுடன் நின்றபோது "இந்த உலகத்தில்தான் பசிக்கும், பசி தீர்க்க காசு வேண்டும்! ஆனால் வைகுந்தத்தில் பசிக்காது... காசும் தேவைப்படாது! உங்களை நித்யமான வைகுந்தம் அனுப்புகிறேன்" என்றுகூறி அவர்கள் அனைவரையும் ஓடத்தில் ஏற்றி கரைபுரண்டு ஓடிய கொள்ளிடம் ஆற்றின் நடுவில் ஓடத்தை கவிழ்த்துக் கொன்றான் திருமங்கை ஆழ்வான்.

திருவானைக்கா கோயிலில் ஒரு மதில் சுற்றின் பெயர்: விபூதி பிரகாரம்! ஏனிந்த பெயர்?

ஊரையே வளைத்து மைல் கணக்கில் கட்டப்பட்ட நீண்ட கருங்கல் மதில்சுவற்றை கல்சுமந்து கட்டிய நமது முன்னோர்களுக்கு வழங்கப்பட்ட கூலி விபூதி! மட்டும்தான்!

எதற்கு? பசியால் கண்கள் இருளும்போது வாயிலும்,வயிற்றிலும் பட்டையடித்து கொள்ள!

இப்படி ஒருவேளை கஞ்சிக்கும், பல நேரங்களில் அதற்கும் வழியற்றும், வீட்டுக்கு ஒருவர் கட்டாயமாக வேலைசெய்து, கசையடி, பிரம்படி வாங்கி அரசனின் புகழ் நிலைத்திருக்க அரசின் கட்டளையை ஏற்று கல்லும், மண்ணும் சுமந்து கட்டப்பட்டதுதான் கோவில்கள்.

இவர்களின் முன்னோர்கள் அன்றைக்கே அரசனிடம் சென்று, அரசின் கடமை மக்களை கசக்கிப் பிழிந்து கோவில் கட்டுவதல்ல... மக்களை பாதுகாப்பது.

அரசின் கடமை யாகசாலைகள் அமைப்பதல்ல... பிள்ளைகள் படிக்க பாட சாலைகள் கட்டுவது!

எனவே, அரசே! கோவில் கட்டாதே, கோவில் நிர்வாகத்தில் தலையிடாதே என்று குரல் எழுப்பியிருந்தால் அது நியாயம்!

அதைவிடுத்து, முடியரசு காலத்தில் ஆட்சியாளர்கள் மக்களின் செல்வத்தை தங்கமாக, வெள்ளியாக, வைர, வைடூரியமாக, நிலமாக கொட்டிக் கொடுக்கும்போது பல்லிளித்து வாங்கிக் கொண்டு பத்திரப் படுத்தியவர்களின் வாரிசுகள் இன்று குடியரசு காலத்தில் கொடுத்ததற்கு கணக்கு கேட்டால்... அரசே ஆலயத்தை விட்டு வெளியேறு என்பது என்ன நியாயம்?

இந்த வகையில் மக்களைச் சுரண்டி கட்டப்பட்ட மசூதியோ, தேவாலயமோ இங்கிருந்தால் அதையும் அரசே ஏற்கவேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

ஏன் வெளியேற வேண்டும்?

கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள கோவில் சொத்துக்கள் தனியார் ஆக்ரமிப்பில் உள்ளது. முறையாக வாடகை, குத்தகை செலுத்துவதில்லை. எனவே கோவில் நிர்வாகத்தை இந்து துறவிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்கிறார்கள்.

சரி, நீங்கள் சொல்கிற மடாதிபதிகள், ஜீயர்கள், ஆதீனங்கள் அறநிலையத் துறைக்கு கட்டுப் படாமல் தன்னாட்சி நடத்து கிறார்களே...இந்த துறவிகளின் நிர்வாகத்தில் மக்களும்,மன்னர்களும் கொடுத்த சொத்துக்கள் ஒழுங்காக பராமரிக்கப் படுகிறதா? எதற்காக எழுதி வைத்தார்களோ அதற்காகவே அந்த சொத்துக்கள் பயன்படுத்தப்படுகிறதா?

குத்தகை, வாடகை அனைத்தும் முறையாக வசூலாகிறதா?

இதில் எவ்வளவு பொதுமக்கள் நலனுக்கு, பொது காரியத்திற்குப் பயன்படுகிறது?

இதெல்லாம் கிடக்கட்டும்.

கோயில் சொத்துக்களை வாடகை, குத்தகை செலுத்தாமல் அனுபவிப்பவர்கள் ஆத்திகர்களா? நாத்திகர்களா?

திராவிடக் கட்சிகளின் ஆட்சியில் நாத்திகர்கள் கோவில்களில் அறங்காவலராக வந்துவிட்டார்கள் என்று கூக்குரலிடுகிறார்கள்.

எந்த கோவிலில் நாத்திகர்கள் அறங் காவலராக நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள்? பட்டியல் இருக்கிறதா இவர்களிடம்?

இந்து அறநிலையத் துறையைப் பார்ப்பனர்களின் கடும் எதிர்ப்புகளுக்கிடையில் உருவாக்கியவர் பக்தியில் ஊறித் திளைத்த, சமற்கிருதம் படித்த, வேத-புராண, இதிகாசங்களைக் கற்றறிந்த நீதிக்கட்சியின் பனகல் அரசர்.

நீதிக்கட்சியின் முக்கியத் தலைவர்களில் ஒருவரான பி.டி.ராசன் அவர்களது பக்தி உலகபிரசித்தம்.

அறநிலையத்துறை மசோதா கொண்டு வரப்படும் போது காங்கிரசின் சத்தியமூர்த்தி அய்யர் எதிர்க்கிறார். பெரியார் காங்கிரசில் இருந்து கொண்டே ஆதரிக்கிறார்.

பிற்காலத்தில் காங்கிரசு ஆட்சியில் அறநிலையத்துறை சட்டம் செழுமையாக்கப் படுகிறது. இதில் கவனிக்கப்பட வேண்டிய செய்தி நீதிக் கட்சியும், காங்கிரசும் நாத்திகத்தை கொள்கையாகக் கொண்ட கட்சிகள் இல்லை.

திமுகவில் சற்று கூடுதலாகவும், அதிமுகவில் ஒன்றிரண்டு பேரும் நாத்திகர்களாக இருக்கிறார்களேத் தவிர இவர்கள் அறங் காவலர்களாக நியமிக்கப் படுவதில்லை.

கோவில் அறங்காவலர் என்பது திமுக, அதிமுக வில் பட்டையடித்துக் கொண்டும் , நாமம் போட்டுக்கொண்டும், ஆஷாடபூதிகளாக வலம் வருகிற, பார்ப்பனர்களுக்கு நல்ல பிள்ளை யாக பல்லிளிக்கிறவர்களுக்குக் கிடைக்கிற நியமனப்பதவி. இதற்கு நாத்திகர்கள் ஆசைப்படு வதுமில்லை. அதற்காக பக்தி வேடம் போடுவதுமில்லை.

அதேவேளை, நாத்திகர்களை அறங் காவலர்களாக நியமிப்பதும் தவறானதில்லை. ஏனெனில் நாத்திகர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை செம்மையாக நிறைவேற்றுபவர்கள். பொதுப் பணத்திற்கு ஆசைப்படாதவர்கள்.

காங்கிரசை பெரியார் ஆதரித்தபோது பல தொகுதிகளில் காங்கிரசு வேட்பாளர்களின் தேர்தல் செலவுக் கணக்கை கவனித்துக் கொண்டவர்கள் நாத்திகர்களான பெரியார் தொண்டர்கள்தான். காரணம் நயாபைசா சுத்தமாக கணக்கை ஒப்படைத்து, காமராசரையே வியப்படையச் செய்தது நாத்திகர்களின் நேர்மை.

தான் பொறுப்பேற்றுக் கொண்ட ஈரோடு தேவஸ்தான கமிட்டியை திறமையாக நிர்வாகம் செய்து நட்டத்திலிருந்த கோவில் வருவாயை மிச்சப்படும் அளவிற்கு இருப்பு வைத்து பொறுப்பைத் துறந்தவர் பெரியார் பட்டம் பெறுவதற்கு முந்தைய ஈ.வெ.ரா!

நாத்திகரான நாவலர் நெடுஞ்செழியன் அறநிலையத்துறை அமைச்சராக இருக்கும் போது நெய்யில் குளித்த திருவரங்கம் அரங்கநாதன் “பக்தி பெருத்த பக்தவச்சலனார்” காலத்தில் தீயில் குளித்தார் என்பது குறிப்பிடத் தகுந்தது.

இதுவரை எந்த நாத்திகர் மீதும் கோவில் இடிப்பு, கோவில் நகைத் திருட்டு, சிலைத் திருட்டு, கோவில் நில அபகரிப்பு, கோவிலுக்குள் கொலை செய்தல் போன்ற குற்றாசாட்டுகள் பதியப்பட்டதே இல்லை!

“நீங்க பேசறதெல்லாம் நாத்திகமா? ஸ்ரீராமன் அரசவையிலே அமைச்சரா இருந்த ஜாபலியைத் தெரியுமா? அவர் எப்பேற்பட்ட நாத்திகர் தெரியுமா?” என்று ராமாயணக் கதையை உச்சிமுகர்ந்து மெச்சுகிற அதே அம்பிகள்தான், அறங்காவலர்களாக அனைத்து சாதியினரும் தங்களை கேள்வி கேட்பதை பொறுக்க இயலாமல் கோவில் நிர்வாகத்தில் நாத்திகர்கள் நுழைந்து விட்டார்கள் என்று கூசாமல் ஒப்பாரி வைக்கின்றனர்.

இந்திய தத்துவஞான மரபிலிருந்து நாத்திகத்தை புறந்தள்ளி விடமுடியாது என்ற சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் அவர்களின் கூற்றை இவர்கள் முதலில் தெரிந்துகொள்ள வேண்டும்.

(கட்டுரையாளர் - பெரியாரிஸ்ட்)

# திருமூலரை எதிர்க்காத பார்ப்பனர்கள் வள்ளலாரை எதிர்ப்பது ஏன்?

கரு. ஆறுமுகத்தமிழன்

வேதத்தை அடிப்படையாகக் கொண்ட வைதீக மதத்திற்கு எதிராக ஆகமத்தை அடிப் படையாகக் கொண்ட சைவ மதம் உருவானது. சாதி, வருண வித்தி யாசத்தை மறுத்த புத்த, சமண மதங்களை வீழ்த்தவேண்டும் என்று வந்தபோது வைதீகத்தோடு சைவம் சமரசம் செய்து கொண் டது. வேதத்தை ஒப்புக்கொண்ட சைவம், வைதீகத்திற்குள் கரைந்து விட்டது. ராஜராஜ சோழன் காலத் தில் சமஸ்கிருதம் கோவிலுக்குள் நுழைந்து அனைத்தும் சமஸ்கிருத மயமானது.

தமிழகத்திற்குள் கிறிஸ்துவம் பரவியது. சாதியை மறுத்து அனைவருக்கும் கல்வி கொடுத்தது. இதற்கெதிராக பல இயக்கங்கள் உருவாகின. தமிழை வளர்க்க ஆறுமுக நாவலர் சைவவித்யா சாலைகளை நிறுவினார். வைதீக வயப்பட்ட சைவத்தை கற்பித்தார். இதிலிருந்து வள்ளலார் மாறு பட்டு மணிவாசகர், திருமூலர், தாயுமானவரைப் பின்பற்றி ‘சமரச சன்மார்க்க’ நெறியை உருவாக் கினார்.

முரண்பட்ட வைதீக மரபையும் தமிழ் மரபையும் ஒன்றென இணைத்த திருமூலர், வைதீகத்தை யும், பிராமணர்களையும் கடுமையாகக் கேலி செய்தார். கோவில், சமயமரபுகளை உருவாக்கிய அவரே, கோவிலுக்குச் செல்வதைக் கண்டித்தார். உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம், கள்ளப்புலனைந்தும் காடாமணி விளக்கு என்று புறக்கோயில்களை விடுத்து அகக்கோயிலைப் போற்றினார். அமைப்பு முறைப்பட்ட சைவ சமய மரபை உருவாக்கிய திருமூலர்தான், தனிமனித சுதந்திரத்தை பறிக்கும் சமய மரபிற்கு உட்பட முடியாது என்கிற சித்தர் மரபையும் உருவாக்கினார்.

கோவில் உண்டியலில் பணம் போடுவதைவிட, நடமாடும் கோவிலான பசித்தவன் வயிற்றுக்கு சோறுபோடு என்பதை,“படமாடும் கோயில் பரமர்க்கு ஒன்றீயின் நடமாடும் கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா; நடமாடும் கோயில் நம்பர்க்கு ஒன்றீயின் படமாடும் கோயில் பரமர்க்கு அங்கதாமே” என்று பாடினார். கடவுள் வேதங்களில் இல்லை மனிதனுக்குள் இருக்கிறான். பிராமணர்களின் பூணூல், குடுமியை அறுத்தெறி. சாமியார் வேடமிட்டு நெறி தவறுகிறவர்களை அரசன் தண்டிக்க வேண்டும் என்றார். வைதீகத்திற்கு எதிராக ‘ஒன்றே குலம் ஒருவனே தேவன்’ என்று முழங்கினார். உண்ணும் உணவில் ஒரு கைப்பிடி அரிசியை எடுத்து இல்லாதவனுக்கு கொடு என்றார் திருமூலர். இதனைப் பற்றிக் கொண்டார் வள்ளலார்.வேதாந்த, சித்தாந்த சமரசத்தை உருவாக்கியவர் தாயுமானவர். தாயுமானவரின் மறுபிறவி வள்ளலார் என்பார்கள்.

வேதாந்தம், சித்தாந்தம், நாதாந்தம், போதாந்தம், யோகாந்தம், கலாந்தம் என ஆறு அந்தங்களை சமரசப் படுத்தினார் வள்ளலார். இவ்வாறாக மணிவாசகர், திருமூலர், தாயுமானவர் போன்றோரின் மரபிலிருந்து வாழையடி வாழையாக வள்ளலார் வருகிறார். இந்த சைவ மரபுதான் வள்ளலாருக்குள் கலக விதைகளைத் தூவியது. சென்னையி லிருந்தவரை வள்ளலார் சைவ மரபில் அதீதப் பற்று கொண்டிருந்தார். கருங்குழி சென்ற வள்ளலார் சிதம்பரம் நடராசர் கோவிலுக்கு தினசரி சென்று வந்தார். அங்கு நடைபெற்ற நிகழ்வுகளால் பிடிமானம் இழந்து வடலூரில் ‘உத்தரஞான சிதம்பரம்’ என்ற சத்தியஞான சபையை உருவாக்கினார். ஜீவகாருண்யத்தை கடைப்பிடிக்கிறார்.

சைவம், வைணவத்தை நம்பாதீர்கள். அது உண்மையை சொல்லாது. ஒருகாலத்தில் நானும் சைவத்தை நம்பினேன். எனக்கிருந்த நம்பிக்கைக்கு அளவு சொல்ல முடியாது. ஏன் நம்பியிருந்தேன் என்றால் அப்போது எனக்கு அறிவு கொஞ்சம் தான் இருந்தது என்றார்.வைதீக மரபின் முதன்மையான (பிரஸ்தான) மூன்று உபநிஷதம், பிரம்மசூத்திரம், பகவத்கீதை. இவை அனைத்துமே கொல்வதைத் தர்மமாக கூறியது; சூது சொல்லித் தந்தது. இதற்கு மாறாக, வள்ளலார் கொல்லாதே. உணவு ஊட்டுவதும், உயிர்காப்பதும்தான் கடமைஎன்கிறார்.

வைதீகத்தை ஏந்தி வரும் சமஸ்கிருதம் போன்ற அனைத்து வாகனங்களின் கடையாணிகளையும் பிடுங்கி எறிந்தார். பகவத்கீதைக்கு மாற்றாக திருவருட்பா, ஜீவகாருண்ய ஒழுக்கத்தை முன்வைத்தார்.

பெரியார் காலத்துக்கு முன்பாகவே நேரடியாக திட்டி, பூணூலை அறுங்கள் என்று பேசிய திருமூலரை பார்ப்பனர்கள் ஆதரித் தார்கள். உயிரும், உள்ளமும் நோகும் வகையில் ஒற்றை கடுஞ்சொல் கூட பயன்படுத்தாத வள்ளலாரை ஒரு பார்ப்பபனர் கூட ஆதரிக்க வில்லை. ஏன்? மத அமைப்பு, நிறுவன முறையை திருமூலர் ஆதரித்தார். வள்ளலார் பார்ப்பனர் களைத் திட்டாமல் அதன் அமைப்பு முறையை மறுதலித்தார். வைதீகத்தின் கருதுகோள் களைப் பிடுங்கிப் போட்டார். பார்ப்பனர்கள் நிறுவிய கருதுகோள்கள் அனைத்தையும் மறுதலித்தார்.

வள்ளலார் மறுதலித்த அனைத்தையும் பார்ப்பனர் அல்லாதார் இயக்கமும் மறுதலித்தது. ஆக திராவிடர்களின் பார்ப்பனர் அல்லாதார் இயக்கம், சுயமரியாதைஇயக்கம் என்பது வள்ளலார் காலத்திலிருந்து தொடங்கு கிறது. இது நெடிய பாரம்பரியத்தி லிருந்து வந்தது. இன்றைக்கு கேட்கத்தக்க பகுத்தறிவு கேள்விகளை அன்றே எழுப்பியவர் வள்ளலார். காது, மூக்கில் எதற்கு பொத்தல் போட்டு அணி கலன் அணிய வேண்டும்? பொத்தல் போடுவது அவசியம் என்றால் 9 ஓட்டைகளை வைத்த கடவுள் காதிலொன்றும், மூக்கிலொன்றும் போட்டிருக்கமாட்டானா? தலையில், கன்னத் தில் முளைக்கும் முடி ஏன் நெற்றியில் முளைப்ப தில்லை? என்று மக்களிடம் கேட்டவர் வள்ள லார். “கேட்டறியாத கேள்விகளை கேட்கும்படி ஆண்டவர் செய்ததுஇத்தருணமே” என்றார்.

ஆனால், வைதீகம் கேள்வி கேட்காதே நம்பிக்கைகொள் என்கிறது. வைதீக மரபிற்கு நேர் எதிராக வள்ளலார் இருந்தார். வைதீகத்திற்கு எதிராக தோன்றிய தமிழ் சமயம் (எ) சைவ சமயம், ஆகம மரபு மக்களுக்கு என்ன செய்தது? வேதத்திற்கு பதிலாக ஆகமத்தை படிக்கச் சொன்னது. அது மட்டமானது எனது சமயம் உயர்வானது என்று வெறிபிடித்து பேசுகிறது. எனவே, வேதமும், ஆகமும் வேண்டாம். நிறுவனப்பட்ட சமயம் எதுவும் தேவையில்லை. பொதுநெறிக்கு வா என்றார் வள்ளலார். உலகில் எல்லோரும் சமம். உலகை பொதுவில் நடத்துகிற நிலை வர வேண்டும் என்றார்.மேல்வருணம், தோல்வருணம் கண்டாரில்லை. நான் பேசுவது அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை. அறிவு, உயிர் ஒளியாக கருதப்படுகிறது. இறைவனும் ஒளிதான். இறைவன் ஜோதி வடிவில் உள்ளான்.

இறைவனுக்கு ஆண், பெண் வேறுபாடு கிடையாது. தங்கம், பித்தளை, வெள்ளி தவிர்த்து தகர விளக்கு தீபம் போதும் என்றார் வள்ளலார். சாதி, சமய,சாஸ்திர குப்பைகளை எருவாக்கிப் போடு என்கிறார் அவர்.சர்வ சமய சமரச சுத்த சன்மார்க்கம் என்ற அமைப்பை உருவாக்கு கிறார். அதில் உறுப்பினராக சேர ஜீவ ஒழுக்கம், ஆன்ம ஒழுக்கம் கடைப் பிடிக்க கூறுகிறார். ஜீவ ஒழுக்கம் என்றால் ஆண், பெண், சாதி, மத, சமய, ஆசிரம, சூத்திர, கோத்திர, குல, சாஸ்திர, சம்பந்த,தேச, மார்க்க வேறுபாடு கூடாது. ஆன்ம ஒழுக்கம் என்பது எல்லோருக்கும் தலைவன் ஆண்டவன் அருட்பெரும்ஜோதி. ஜீவன் களுக்குள் வேற்றுமை பார்க்கக் கூடாது. இவை இரண்டையும் கடைப்பிடித்தால் சங்க உறுப்பினராகலாம் என்றார். இப்படியாக சங்கம், சாலை (சோறு போடும் இடம்), சபை (கூடுகிற இடம்) என்றஅமைப்புகளை உருவாக்கினார். வள்ளலாரின் சாராம்சம் என்ன? கடவுள் ஒன்று. அவர் ஜோதி வடிவில் உள்ளார்.

சிறுதெய்வ வழிபாடு, உயிர்ப் பலி, புலால் உண்ணல், சாதி, சமய வேறுபாடு கூடாது. எல்லா உயிர்களையும் தன்னுயிர் எனும் ஆன்மநேய ஒருமைப்பாட்டை கொள்ள வேண்டும், ஜீவ காருண்யம் வேண்டும், சாத்திரம், புராணங்கள் கூடாது, இறந்தவர்களை புதைக்க வேண்டும், காது மூக்கு குத்தி அணிகலன் அணியக்கூடாது, கணவன் இறந்தால் மனைவி தாலி அறுக்க கூடாது. மனைவி இறந்தால் கணவன் மறுமணம் செய்து கொள்ளக்கூடாது. மரணமில்லா பெருவாழ்வுக்கான வித்தையை கைப்பற்று வோம் என்றார்.

வேதம் என்பது நிலையாமை பேசுவது அதற்கெதிராக சாகாமல் இருக்கலாம் என்று மறுதலித்து பேசி வைதீகத்தை சில்லுசில்லாக உடைத்தெறிந்தவர் வள்ளலார்.

(கட்டுரையாளர் பேராசிரியர்)

# சிறுபான்மை ஜாதிகளை விலக்கி வைக்கும் 'ஜனநாயகம்'

*எண்ணிக்கை பலம் குறைந்த ஜாதிகளை ஜனநாயக அமைப்பு விலக்கி வைப்பதை ஏன் கட்சிகள் விவாதிக்க முன்வருவதில்லை?*

பெயரோடு சாதிப் பட்டத்தை வழக்கமாகவே சேர்த்துக்கொண்ட காலத்தில்கூட இப்போதைய சாதி உணர்வு இருந்ததில்லை. போவதாகப் போக்குக்காட்டி, அந்த உணர்வு புது வேகத்தில் தலையெடுத்திருக்கிறது. ஒரு தேர்தல் உத்தியாகச் சாதிகளை உள்ளே இழுத்து, அவற்றைச் சீரணித்துக்கொள்ளலாம் என்று கட்சிகள் நம்புகின்றன. விளைவு என்னவென்றால், கட்சிகள் பெரும்பான்மைச் சாதிகளின் கூட்டமைப்புகளாக மாறிவிடுவதுதான். இந்த நிலையில் சிறிய சாதிகளை ஜனநாயக அரசியல் என்ன செய்கிறது என்பதை விவாதிக்க வேண்டும்.

ஊருக்கு ஒரு ஆச்சாரி. கொல்லர் ஒருவர். பத்தர், குயவர், மேளக்காரர், வாணியரும் ஒவ்வொருவர். இப்படியே வண்ணார், மருத்துவர் என்று ஊருக்கு ஒன்றிரண்டாக இறைந்து எண்ணிக்கை வலுவிழந்தவை இருநூறுக்கு மேலான சிறிய சாதிகள். கிராமங்கள் தன்னிறைவு பெற்ற குடியரசுகள் என்ற பெருமையைப் பெற்றது இந்தச் சாதிகளின் கைவினைப் பங்களிப்பால். ஆனால், அரசியல் கணக்குக்குள் இவை எப்போதுமே வராதவை. ஒரு பெரும்பான்மைக் கோட்பாடு என்ற அளவில் ஜனநாயகம் யாரையும் அரசியலிலிருந்து விலக்குவதில்லை.

ஆட்சியில் சிறுபான்மை பங்கேற்காது. அரசியலில் பெரும்பான்மை, சிறுபான்மை இரண்டுமே பங்கேற்கும். தமிழக நிலவரமோ வேறு. சிறிய சாதியினர் தேர்தலில் வாக்களிப்பதற்கு மட்டுமே அடுத்த மேல் நிலைக்குச் சென்று அரசியலில் பங்கேற்க முடியாது.

கி.ராஜநாராயணனின் கரிசல் கதைத் தொகுப்பில் 'ஒத்தை வீட்டுக்காரர்' என்று ஓர் ஆச்சாரி பற்றிய கதை. பொ.அழகுகிருஷ்ணன் எழுதியது. ஊராரோடு வந்த பிரச்சினையால் மனம் பொறாமல், நிலத்தை விற்றுவிட்டு, வீட்டையும் விற்றுவிடும்படி இன்னொரு ஒத்தைவீட்டுக்காரச் செட்டியாரிடம் சொல்லிவிட்டு, ஆச்சாரி ஊரை விட்டுச் செல்கிறார். மாமா, அத்தை, மாப்பிள்ளை என்று முறை சொல்லிக் கூப்பிடுவார்கள். பிரச்சினை என்று வந்துவிட்டாலோ 'ஆச்சாரி, அவன் இவன்னு சண்டைக்கு வருவார்கள்' என்று ஒத்தை வீட்டுக்காரர்களோடு ஊர் கொண்டாடும் உறவின் பொய்மையைச் சொல்லி குமுறிக் கொண்டே செல்வார். அரசியல் பரப்பில் இந்த உறவுப் பொய்மைதான் பெரும்பான்மை என்ற எண்ணிக்கை நியாயமாகிறது.

இன்னின்ன சாதிகளுக்கு அமைச்சரவையில் இடம் கிடைத்தது, இன்னின்னவற்றுக்குக் கிடைக்க வில்லை என்று பேசாத அரசியல் விமர்சனம் உண்டா? அரசியல் நியாயத்தை இப்படியுமா அடையாளம் காண்பார்கள் என்பதல்ல நமது கவலை. இடம் கிடக்காதவை எனும் பட்டியலில் இடம்பெறும் தகுதியைக்கூட நூற்றுக்கணக்கான சாதிகள் பெறுவதில்லையே என்பதுதான் கவலை. அவற்றின் இருப்பை அரசியல் கணக்கு மறந்து விடுவது அரசியல் விமர்சகர்களின் குறையல்ல. நமது அரசியல் உரையாடல் பயன்படுத்தும் மொழியின் குறை, அந்த மொழியின் கட்டமைப்புக் குறை.

சமீபத்தில் தேர்தல் முறை பற்றி தேசியக் கட்சிகளின் பழகிப் பழசாகிப்போன ஒரு விவாதம். மாநிலத்தில் பதிவான மொத்த வாக்குகளில் 40% பெற்ற கட்சி நாடாளுமன்றத்தில் 50 உறுப்பினர் களைப் பெறுகிறது. 30% பெற்ற கட்சி இரண்டு உறுப்பினர்களை மட்டுமே பெறுகிறது. 10% பெற்ற இன்னொரு கட்சி ஒருவரைக்கூடப் பெறுவ தில்லை. மக்களில் இத்தனை பேர் பிரதிநிதிகளைப் பெறாமலே போகும் கேலிக்கூத்துக்கு என்ன முடிவு என்பது விவாதத்தின் கேள்வி. தொகுதியில் வென்றது யார் என்ற அடிப்படையில் அல்லாமல்,

கட்சியின் மொத்த வாக்கு சதவீத அடிப்படையில் அதன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை அமைய வேண்டும் என்பது விவாதம் சொல்லும் தீர்வு.

கட்சிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைக் கானது மட்டுமே இந்த விகிதாச்சாரப் பிரதிநிதித்துவத் தீர்வு. மற்றொரு பிரச்சினை அரசியலுக்குப் புறத்தே நிற்கும் சாதிகளையும் அரசியலுக்குள் வரவிடுவது எப்படி என்பது. அரசியல் உரையாடலின் கட்டமைப்பு இந்தப் பிரச்சினையும் விவாதத்துக்குள் வருமாறு விரிவாக வேண்டும். ஒன்று, இரண்டு, மூன்று என்று தனி நபர்களை எண்ணி வருவதுதான் பெரும்பான்மை என்பது இன்றைய உரையாடலின் அனுமானம். தனி நபர்கள் சேர்ந்து உருவாகும் தொகுப்புதான் தேர்தலில் வரும் பெரும்பான்மை என்பது அதன் நம்பிக்கை. உண்மையில், அது எப்போதுமே இருக்கும் ஒரு தொகுதியின் சாதிப் பெரும் பான்மை. தேர்தலுக்கு முன்பும் அதுவேதான் பெரும்பான்மை. அந்த நிரந்தரப் பெரும் பான்மைக்கு தேர்தல் ஒரு சட்டரீதியிலான அங்கீகாரம். தேர்தல் தொகுதி என்ற ஜனநாயக ஏற்பாடு சாதியத்தை ஊட்டி வளர்க்கிறது. நிரந்தரப் பெரும்பான்மை என்பது எதேச்சாதிகாரத்தின் மறு வடிவம்தானே!

அரசியல் உரையாடலில் உயர் சாதிகள், தாழ்த்தப்பட்டவை, இடைநிலைச் சாதிகள் என்று ஒரு சமுதாய வகைப்பாடு. மற்றொரு வகைப் பாட்டையும் சோதிக்க வேண்டும். அரசியலை ஒரு களம், அரங்கம், வெளி என்று வைத்துக் கொண்டால் அந்த அரசியல் வெளிக்கு உள்ளே இருக்கும் பெரும்பான்மைச் சாதிகள் ஒரு வகை; அரசியலுக்குள் வர இயலாமல் வெளியே நிற்கும், எண்ணிக்கை முக்கியத்துவம் இல்லாத புறவெளிச் சாதிகள் மற்றொரு வகை. இந்த வகைப்பாட்டின் மாற்றுத் தளத்திலும் அரசியல் உரையாடல் கட்டமைய வேண்டும். உள்வெளிச் சாதிகள் என்ற ஒரு புது சத்திரிய வர்ணம் உருவாவதையும், புறவெளிச் சாதிகள் ஜனநாயகத்தில் ஒப்புக்குச் சப்பாணியாவதையும் கவனிக்க வேண்டும். ஜனநாயகம் என்னவென்றால், ஒரு சாதி என்ற அளவில் எதுவுமே அரசியலின் புறவெளிக்குச் சென்றுவிடக் கூடாது என்பதுதான். நாடு எடுக்கும் முடிவுகளில் எல்லோரும் பங்கேற்கவும் முடியும் பங்களிக்கவும் முடியும் என்பதுதானே குடியாட்சி!


தன் ஊரின், நாட்டின் பொது விவகாரங் களில் ஒருவர் பங்கேற்க இயலாதபோது, அவர் முழுமை அடைவதில்லை. இது பிரச்சினையின் ஒரு பக்கம். எண்ணிக்கை வலு இல்லை என்பதற்காகவே நூற்றுக்கணக்கான சாதிகளின் பங்களிப்புக்கு வாய்ப்பு தராத முறை நமது அரசியலுக்கு இழப்பு என்பது அதன் மறு பக்கம். மற்றவரின் உடைமை என்றிருந்தவர்களையும், சொத்து இல்லாதவர் களையும், பெண்களையும் அரசியலிலிருந்து நீக்கிவைத்திருந்த பழைய நிலைமைக்கும் இதற்கும் என்ன வேறுபாடு? ஒற்றை என்ற ஏகத்தைத் தடுத்து பன்முகத்தன்மை என்ற அநேகத்தின் வளத்தை விரும்பும் நாம் கவலைப்பட வேண்டிய பிரச்சினை இது.

தொகுதிகளின் நிரந்தரப் பெரும் பான்மையை எது உடைக்கிறது? வர்க்கச் சிந்தனையால் அதை உடைக்க இயலும். இங்கே கவர்ச்சி அரசியல் அதை உடைத்திருக்கிறது. விடுதலைப் போர், மொழிப் போராட்டம் போன்ற பெரும் நிகழ்வுகளும், அவ்வப்போது வரும் உணர்வுப் பேரலைகளும் உடைத்தன. மற்ற நேரங்களில் ஜனநாயகத்தால் சாதிவழிப் பெரும்பான்மையை உடைக்க இயலவில்லை.

ஒரு சாதியின் எண்ணிக்கை வலுவுக்குத் தகுந்தபடி அதற்கு அரசியல் பலம் இருப்பதுதான் ஜனநாயகத்தில் முறை என்று நாம் நினைக்கலாம். எண்ணிக்கை வலு இல்லாத சாதிகளுக்கு அரசியல் பலம் இல்லாமல் இருப்பதும் இயற்கைதானே என்றும் நம்பலாம். இந்தத் தடத்திலேயே தர்க்கத்தைத் தொடர்ந்தால் அது எந்த இடத்தில் நிற்கும்? சாதி அடிப்படையில் அரசியல் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்வது முறை. அந்தப் பகிர்மானத்தில் பத்துப் பதினைந்து தவிர மற்ற சாதிகள் விலக்கப்படுவதும் முறை என்ற இடத்தில் வந்து நிற்போம். இந்த அளவுக்குத்தான் ஜன நாயகத்தின் பெரும்பான்மைக் கோட்பாட்டைப் புரிந்து கொண்டிருக்கிறோம். நல்லது, கெட்டது அடிப்படையில் அவ்வப்போது பெரும் பான்மையை உருவாக்கிக்கொள்வதுதான் ஜன நாயகம்.

நமது ஜனநாயகமோ நிரந்தரமாக இருக்கும் சாதிப் பெரும்பான்மையை உறுதிப் படுத்துவது. இதுதான் பிரச்சினையின் வடிவம் என்றாலும் இந்த வடிவத்தில் அதை நாம் விவாதிப்பதில்லை. பெருக்கிப், பெருக்கிப் படுக்கும் பாய்க்குக் கீழே தள்ளிவைக்கும் குப்பையைப் போல் இது நாம் பேசக் கூசும் பிரச்சினை.

– தங்க.ஜெயராமன்,
'தமிழ் இந்து'வில் எழுதிய கட்டுரை



# சுயமரியாதைத் திருமணம் பற்றி அண்ணா

'அறிஞர் அண்ணாவின்
பகுத்தறிவு களஞ்சியம்'
நூலிலிருந்து

"அண்மையில் எங்கோ ஓர் இடத்தில் பாரத பிரசங்கம் நடந்ததாம். அதன் கடைசி நாளன்று பீமன் வேடம் போடுபவன் துரியோதனனைக் கொல்வதற்காகப் படுகளம் நடந்தது. அன்று ஆறு அடி நீளமுள்ள துரியோதனன் உருவம் மண்ணினால் செய்யப் பட்டிருந்தது. இதனை பீமவேடதாரி வெட்டி வீழ்த்தினான். இதனைச் சுதேசமித்திரன் பத்திரிகை படம் பிடித்து பெரிதாகப் போட்டுக் காட்டியிருக்கிறது.

இப்படிப்பட்ட கேவலமான பழக்கங் களையும், அர்த்தமற்ற திருவிழாக்களையும், பொருத்தமற்ற சடங்குகளையும் விட்டொழித்தால்தான் நாம் உண்மையிலேயே முன்னேற முடியும். ஆகவேதான் சீர்திருத்தத் திருமணங்கள் நடப்பதன் மூலம் அறிவுப் பணி நன்கு வேரூன்றி நிலைத்துப் பரவ வழியிருக்கிற தென்று குறிப்பிடுகிறோம்.

சுயமரியாதைத் திருமணங்கள் ஒவ்வொரு குடும்பத்திலும் நடக்கத் தொடங்கிவிட்டால், நாட்டிலே பரவிக் கிடக்கும் மூடக் கொள்கைகள் தாமாகவே சீந்துவாரற்றுப் போய்விடுமே! ஆகவேதான் இப்படிப்பட்ட மணம் செய்து கொள்ளும் இந்த மணமக்களை நாம் பெரிதும் பாராட்டுகிறேன். மனதார வாழ்த்துகிறேன்.

இந்தத் திருமணத்தில் தேவாரம் ஒன்று பாடுவார்களா? ஒரு திருவாசகமாவது பாடக் கூடாதா? என்று சிலர் கேட்டதாக நண்பர்கள் குறிப்பிட்டார்கள். இப்படிப்பட்ட திருமணங் களிலே அப்படிப்பட்ட பாடல்களைப் பாடத்தான் மாட்டோம், பாடவும் கூடாது என்பதை நண்பர்களுக்குத் தெரிவித்து விடுகிறேன்.

அந்தக் காலத்தில் ஊசிமுனையில் நின்றும், ஒற்றைக் காலில் நின்றும் பற்பல விதமாக அகோரதவம் செய்த முனிவர்கள் அனைவரும் ஆண்டவனைப் பார்த்து எதைக் கேட்டார்கள்? மற்ற ஆழ்வார்களும் சரி, நாயன்மார்களும் சரி கடவுளிடம் எதைக் கோரினார்கள்.

மக்கள் வாழ வேண்டும். உலகம் உருப்பட வேண்டும். வறுமை ஒழிய வேண்டும். உலகத்தில்

*உண்மை தழைக்க வேண்டும் என எந்த முனிவராவது, எந்தப் பக்தனாவது நாயன்மாராவது கேட்டிருக்கிறார்களா? இல்லையே! பொது நன்மைக்காகக் கடவுளிடம் வரம்கேட்ட பக்தர்களை யாராவது காட்ட முடியுமா? ஒருவரும் கிடைக்க மாட்டார்கள்.*

*எல்லோரும் தங்கள் சுயநலத்தைத் தானே பெரிதாகக் கருதியிருக்கிறார்கள். எனக்கு இந்திர பதவியைக் கொடு என்றொரு முனிவர் கேட்பார். எனக்குக் காமதேனு வேண்டும், கற்பக விருட்சம் தேவை என்று மற்றொரு தவசி கேட்டிருக்கிறார். மேனகை, இரம்பை, திலோர்த்தமை, ஊர்வசி போன்ற தேவலோகத்து நடனமாதர்களின் சுகத்தை அனுபவிக்க சொர்க்க வாசம் தேவை என்று ஒரு நாயன்மார் கேட்பார்.*

*வைகுந்த பதவியும், சிவலோக வாசத்தையும் தங்களுக்காகக் கேட்ட அந்த முனிவர்களையும், அவர்கள் பாடிய பாடல்களையும் இந்தத் திருமணத்தில் அழைப்பதும், பாடுவதும் பொருத்தமற்றதுதானே. இங்கே வந்தாலும் அவர்கள் தங்களுக்கத்தான் எதையாவது கேட்பார்களே தவிர நமக்காக ஒன்றும் பேச மாட்டார்கள், கேட்க மாட்டார்களே! ஆகவேதான் இங்கே எந்தப் பக்தரையும் சரி, அய்யரையும் சரி நாங்கள் அழைக்கவில்லை; அழைப்பதும் இல்லை. அதைப்போலவே நமக்காக எழுதப்படாத பாடப்படாத எந்தப் பாடலையும் பாடுவதில்லை; பாடவும் விடுவதில்லை.*

*நம்மைப் பற்றியும், நமது வாழ்க்கையைப் பற்றியும் கவலைப்படும், அக்கறைக் காட்டும் நண்பர்களைத்தான் நாம் அழைக்கிறோம். அப்படிப்பட்டவர்களால் தானே நாம் முன்னேற வழிவகைகளைக் காட்ட முடியும், கூற முடியும்!*

*ஆகவே தேவாரம் பாடவில்லை, திருவாசகம் படிக்கவில்லை, அய்யரைக் கூப்பிட்டு மந்திரம் ஓதவில்லை என்பதற்காக எவரும் கவலைப்படத் தேவையில்லை என்பதை மறுமுறையும் வலியுறுத்திக் கூறுகிறேன்.*

*கடைசியாக சில பெரியவர்கள் இங்கே அம்மி மிதித்து அருந்ததி காட்டவில்லை. அக்கினி வளர்க்கவில்லை. ஆண்டவனைப் போற்றவில்லை என்று குறைபடுவதற்கும் அர்த்தம் இல்லையென்று சொல்லி விடுகிறேன்.*

*திருமணத்தில் அக்கினி வளர்ப்பது எதற்காக? திருமணத்திற்கு அக்கினிதேவன் சாட்சியாக இருக்கிறான் என்பதற்குத்தானே? அந்த அக்கினி பகவான் யோக்கியதை என்ன? அருந்ததி என்று ஒரு சினிமாக்கூட வந்ததே, அதைப் பார்த்தவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும், நான் கூறப் போவது.*

*ஒரு காலத்தில் சப்தரிசிகள் ஒரு யாகம் செய்தனராம். அந்த யாகத்திற்குச் சென்று அவிர்பாகம் வாங்கிச் சென்ற அக்னிபகவான் அந்த ஏழு இரிஷிபத்தினிகளின் மீதும் காமமுற்றானாம். இதனை வெட்கத்தை விட்டு தன் மனைவியிடமே கூறினார். இந்தக் காலத்தில் எப்படிப்பட்ட கேடுகெட்ட மனிதனும்கூட கட்டிய மனைவியிடம், தான் பிற பெண்ணின் மீது ஆசை வைத்திருப்பதாகக் கூற மாட்டான்.*

*ஆனால், ஆண்டவனான அக்னி தன் மனைவியிடம், தான் இரிஷிபத்தினியிடம் காமுற்று இருப்பதைக் கூறிய உடன் தன் மனைவியையே அதற்கான ஏற்பாடுகளையும் செய்யும்படி கேட்டானாம். அவன் மனைவியும் சப்த இரிஷிகளில் ஆறு பேர்களின் மனைவியரைப் போலவே உருவெடுத்து தன் கணவனின் காமத்தைத் தடுத்தாளம். ஆனால், ஏழாவது முனிவரின் மனைவியான அருந்ததியைப்போல மட்டும் உருவம் எடுக்க முடியவில்லை என்றும், அதற்குக் காரணம் அருந்ததி ஆதி திராவிடப் பெண்மணி என்றும் புராணம் கூறுகிறது.*

*பிறர் மனைவியை காமுறும் தீயகுணம் படைத்த அக்னியையா நம்முடைய திருமணக் காலங்களிலே சாட்சிக்கு அழைப்பது? கூடாது கூடவே கூடாது.*



# “இரணியன் வேடமிட்டு நடிக்க நான் ஆசைப்படுகிறேன்”

# புரட்சிக் கவிஞர் நாடகம் குறித்து பெரியார்

*9.9.1934 அன்று ‘சீர்திருத்த நாடக சங்கத்தாரால், சென்னையிலுள்ள விக்டோரியா பப்ளிக் ஹாலில் மாலை 5.30 மணிக்குப் பெரியார் தலைமையில் நிகழ்ந்த, புதுவை பாரதிதாஸன் (பாவேந்தர்) இயற்றிய ‘இரணியன்’ (பிற்பாடு தான் அது, ‘இரணியன் அல்லது இணையற்ற வீரன்’ என்றாகி இருக்கிறது) நாடகம்தான், ஆரிய-திராவிடர் இனப்பிரச்சனையை முன்வைத்து, பழைய புராணத்தைப் புரட்டிப் போட்டு, திராவிட இயக்கச் சிந்தனைகளை முன்வைத்து நிகழ்ந்த மிகப்பெரும் நாடகமாகத் தெரிகிறது. பெரியார் தன் தலைமையுரையில்,*

*இங்கு சங்கீத வித்வான்களே நாடக மேடையைக் கைப்பற்றிக் கொண்டதானது, நாடகக்கலையைச் சங்கீதம் அழித்துவிட்டது என்றும், மக்களது நாடகாபிமானமும் சங்கீதத்தில் திருப்பப்பட்டு விட்டது என்றும் தான் கருத வேண்டும். நாடகம் நடிக்கப்படும் கதைகள் விஷயமும், தற்கால உணர்ச்சிக்கும் தேவைக்கும் சீர்திருத்த முறைக்கும் ஏற்றதாயில்லாமல் பழைமையைப் பிரச்சாரம் செய்யவும், மூடநம்பிக்கை, வர்ணாச்சிரமம், ஜாதிவித்தியாச உயர்வு தாழ்வு, பெண்ணடிமை, பணக்காரத்தன்மை முதலிய விஷயங்களைப் பலப்படுத்தவும் அவைகளைப் பாதுகாக்கவும் தான் நடிக்கப்படுகின்றதே ஒழிய வேறில்லை... இப்படிப்பட்ட கதைகள் ஒழிக்கப்பட வேண்டும். சுயமரியாதையும் சீர்திருத்த வேட்கையுமுள்ளவர்கள் அதை நடிக்கக்கூடாது.*

*இரணியன் கதையில்வீர ரசம், சூட்சித்*

திறம், சுயமரியாதை ஆகியவைகள் விளங்கின தோடு பகுத்தறிவுக்கு நல்ல உணவாகவும் இருந்தது. ஆனால்சில விஷயங்களில் தலை கீழ் மாறுதலாகவும் கடின வார்த்தையாகவும் காணலாம். சீர்திருத்த நாடகம் என்றாலே மாறுதல் இருந்துதான் தீரும். மாறுதலுக்கு அவசியமானதும் பதிலுக்குப் பதிலானதுமான வார்த்தைகள் இருந்தால்தான் பழமை மாற சந்தர்ப்பம் ஏற்படும். அப்படி இல்லாமல் இருந்தால் தகுந்த மாறுதல் ஏற்பட இடமிருக்காது. இச்சரித்திரம் உண்டாக்கிய தோழர் புதுவை பாரதிதாசனை நாம் போற்றிப் பாராட்ட வேண்டும். அவர் உணர்ச்சியுடன் உண்டாக்கி இருக்கிறார். இன்னமும் இதுபோல் பல நாடகங்கள் உற்பத்தி செய்ய வேண்டும். பாத்திரர்களுக்குக் கற்பித்த (இயக்கிய) தஞ்சைத் தோழர் டி.என்.நடராஜன் அவர்களின் ஆசிரியத் தன்மை மிகவும் போற்றத்தக்கது. அவர் 20 வருஷமாய்ப் பொதுநலச் சேவையில் இருந்து வருகிறவர். ஜெயிலுக்கும் சென்றவர்.

அவர்கள் இருவருக்கும் இந்த இரண்டு பதக்கங்களைச் ‘சீர்திருத்த நாடக சங்க’த்தார் சார்பாய்ச் சூட்டுகிறேன். ... நாடகத்துக்கு இவ்வளவு தோழர்கள் விஜயம் செய்து கௌரவு வித்ததற்கும் நாடகப் பாத்திரர்களுக்கும் சபையாருக்கும் ஊக்கமளித்ததற்கும் நான் நன்றி செலுத்துகிறேன்’ (பகுத்தறிவு வார இதழ், 16-9-1934) என்று பழைமைக்கு எதிரான கலகக் குரலை, நாடக அரங்கேற்றத்தில் முன்வைக்கிறார். இதுதான் திராவிட இயக்க நாடக நிகழ்த்தல் பற்றி, ஒரு நாடக அரங்கேற்றத்தின்போது வழங்கப்பட்ட முதல் விமர்சனப் பதிவாய் இருக்கிறது.அதன்பின், இந்நாடகத்தின் இரண்டாவது நிகழ்வு ஆறு மாதங்கள் கழித்து, ‘ஜெ.என்.ராமநாதன் ஞாபகார்த்த நிதிக்காக, கனம் மந்திரி பி.டி.ராஜன் அவர்கள் ஆதரவிலும் முன்னிலையிலும் சென்னை சீர்திருத்த நாடக சங்கத்தார் 20-3-1935 புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு சென்னை ராயல் தியேட்டரில் நடித்திருக்கிறார்கள்.

‘இரணியன்’ நாடகத்தின் மூன்றாவது நிகழ்வு, இரண்டாவது நிகழ்விற்குப் பின் 1 1/4 ஆண்டுகள் கழித்து, 1936, ஜூலை 4 இல் வாணியம்பாடிக்கு அடுத்த அம்பலூரில் அம்பலூர் நடன விலாசத்தில் பாரதி சபை யாரால் தோழர் ஈ.வெ.ராமசாமி அவர்கள் தலைமையில் ‘இரணியன் அல்லது இணையற்ற வீரன்’ என்னும் சரித்திரத்தை தோழர் எஸ்.எ.அர்ஜூனன் அவர்கள் உபாத்திமையின் கீழ் நடத்திக் காட்டியுள்ளார்கள். அம்பலூரில் நடந்த இந்நாடக முடிவில் பெரியார் பேசும் போது, ‘இன்று நாடகம் நடத்திய தோழர் அர்ஜூனன் வெகு வீரமுடன் நடந்து கொண்டதைக் காணஎனக்கும் இரணியனாக வேஷம் போடலாமா என்ற ஆசை என்னை அறியாமல் ஏற்படுகிறது. ஆனால் தாடி இருக்கிறதே என்று யோசனையைக் கைவிட்டேன். நாடகங்கள் எல்லாம் குறைந்தது 2 மணி நேரத்தில் முடிவுபெற வேண்டும்.

மத்தியில் பாட்டுக்களைக் கொண்டு வந்து நுழைப்பதால் கதையின் ஸ்வாரஸ்யம் குறைந்து போகிறது; உணர்ச்சி மத்தியில் தடைப்படுகிறது. நாடகங்களில் இரண்டு விதமுண்டு. ஒன்று பாட்டாக நடத்திக் காண்பிப்பது; மற்றொன்று வசனரூபமாய் நடத்திக் காண்பிப்பது. வசனரூபமாய்க் காண்பதைத் தான் மக்கள் விரும்புகிறார்கள். பல உபந்யாசங்கள் செய்வதை விட இத்தகைய நாடகம் ஒன்று நடத்தினாலும் மக்களுக்கு உணர்ச்சியையும் வீரத்தையும் மனமாற்றத்தையும் ஏற்படுத்தி ஓர் கவர்ச்சியை உண்டாக்குகிறது. நம் எதிரில் நடந்த மாதிரிதான் ஆதியில் இரணியன் நாடகம் இருந்திருக்க வேண்டும். ஆனால்அதைப் பார்ப்பனர்கள் தமக்குச் சாதகமாகத் திருத்தி உபயோகப் படுத்திக் கொண்டார்கள். பழைய நாடகங்களை நாம் சீர்திருத்திப் புதிய முறையில் நடத்திக் காண்பிக்க வேண்டும். நாடகங்களில் பல சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டும்.

இந்தப் பழைய நாடகங்கள் மக்களை மூடர்களாகவும், அர்த்தமற்ற கொள்கை உடையவர்களாகவும் செய்து இருக்கின்றன. நாடகத்தின் மூலம் அறிவு வளர இடமிருக் கின்றது. ஆகையால் நாடகங்களைப் புதிய முறையிலே திருத்தி மக்களுக்குப் பயன்படும் படிச் செய்ய நாடகாசிரியர்கள் முன்வர வேண்டும். வெறும் சங்கீதமும் பாட்டும் வேண்டியதில்லை. கருத்துஇருந்தால் போதும். இந்த நாடகம் சென்னையில் இரண்டு முறை

## நாடகங்களையும்
## தயவு செய்து
## பாடல்களாக ஆக்கிவிடாதீர்கள்.

காண்பிக்கப்பட்டது. இந்த மாகாணத்தில் இதுவே மூன்றாவது முறை. இனி இம்மாதிரி நாடகங்களை நாடெங்கும் நடத்தினால், மக்கள் உணர்ச்சி பெற்று மூடநம்பிக்கைகளையும் அர்த்தமற்ற கொள்கைகளையும் உடைத் தெறிவார்கள். தோழர் அர்ஜூனன் தலைமையில் நடந்த இந்த நாடகத்தை தான் பாராட்டுகிறேன்' என்று பேசியிருக்கிறார்.

(குடிஅரசு - 19.07.1936)

சீர்திருத்த நாடகங்களின் தேவையை வலியுறுத்தி 'குடிஅரசு' கட்டுரைகளை வெளியிட்டது.

25-8-1935 நாளிட்ட 'குடிஅரசு' இதழில் பக்.15இல் திரு அ.இரத்தினசபாபதி எழுதி யிருக்கிற 'நாடக மேடைகள் நமக்குப் பயன்பட வேண்டுமானால்..?' எனும் கட்டுரை மிக முக்கிய ஒன்று. கொள்கையைப் பிரச்சாரம் செய்வதற்கு அமைப்பின் ஒரு பகுதியாக நாடகங்கள் அமைய வேண்டியதன் தேவையை ஒரு வேலைத் திட்டமாகவே அக்கட்டுரையானது கூறிச் சென்றிருக்கிறது. எந்தக் கொள்கையைப் பொது மக்களிடையில் பரப்ப வேண்டுமானாலும், அதற்குப் பிரச்சாரம் அவசியம் என்பதை எவரும் மறுக்க முடியாது. அம்மாதிரி பிரச்சாரம் செய்வதற்கான வசதிகள் அல்லது மார்க்கங்கள், பொதுக்கூட்டங்களில் பிரசங்கங்கள் செய்தல்; துண்டுப் பிரசுரங்கள்பல வழங்குதல், பத்திரிகைகள் வெளியிடுதல்; நாடகங்கள், சினிமாக்கள் முதலியவைகளில் கொள்கை களைப் புகுத்துதல் முதலியனவேயாம். இவற்றுள் எல்லாவற்றையும் விட நாடகங்கள், சினிமாக்கள் முதலியவற்றின் மூலமாய், கொள்கைகளை மக்களிடையே பரப்புவது பெரிதும் சுலபமானதும், கோரும் நோக்கத்தை விரைவில் திருப்திகரமான முறையில் கிடைக்கச் செய்யும் சாதனமாகு மென்பதை நம்மவர் ஓரளவிற்கு உணர்ந்திருக்கிறார்களென்றாலும் கூட, நடைமுறையில் கொண்டுவருவதில் போதிய அளவு சிரத்தை எடுத்துக்கொள்ளவில்லை என்பதுதான் எனது அபிப்ராயம். நாம் தமிழ் நாடகமேடையைக் கைப்பற்ற வேண்டு மென்னும் கருத்தை நான் பலமுறைப் பொது பத்திரிக்கைகளிலும் எழுதி யிருக்கிறேன்.

சென்னை, தங்கவயல் போன்ற இரண்டோரிடங்களில் சீர்திருத்த ஸ்தாபனங்கள் அமைத்து ஓரளவிற்குத் தொண்டாற்றி வருவது சற்று ஆறுதலளிக்கிறது. இப்பொழுது நாகப்பட்டினத்திலும் திருச்சியிலும் நம் தோழர்கள் சீர்திருத்தநாடக சபைகள் அமைத்துத் தொண்டாற்ற வேண்டுமென்று தீர்மானித்திருப்பது, இன்னும் சற்று உற்சாக மூட்டுவதாக இருக்கிறது. நாகை, திருச்சி நண்பர்களைப் பின்பற்றி மற்ற இடங்களிலும் வசதிகள் வாய்க்கப் பெற்றுள்ள நண்பர்கள் சீர்திருத்த நாடகங்கள் பல நடத்த முற்படுமாறு அன்புடன் வேண்டுகிறேன். நாம் இவ்வாறு நாடகமேடைகளைக் கைப்பற்றுவோமானால், நாம் இரண்டு காரியங்களை ஏக காலத்தில் வெற்றிகரமாகச் செய்யக் கூடும் என்பதைத் தோழர்கள் கவனிக்க வேண்டும்.

முதலாவது; சீர்திருத்த நாடகங்களை நாம் நடத்த முற்படுவதோடு, தற்காலம் நடைபெறும் நாடகக் கதைகளிலும் அறிவிற்குப் பொருந்தாத வற்றை அவ்வப்போது நாம் கண்டிப்பதால், அக்கதைகளுக்கு ஒரு பலத்த எதிரிடையான அபிப்ராயத்தைப் பொது மக்களிடையில், சிறப்பாகப் படித்தவர்களிடையில் உண்டு பண்ணக்கூடும். இரண்டாவது; நம் கொள்கைகள் கொண்ட நாடகங்களை நடத்து வதால் வெகு எளிதாகப் பாமர மக்களுக்கும் கொள்கைகளை விளங்க வைக்கலாம்; நடிப்புக்கலையும் சீர்படும். நமது கொள்கைகள் கொண்ட நாடகங்களுக்கு நாட்டில் ஆதரவு கிடைக்காதென்று யாரும் பயப்பட வேண்டிய தில்லை. இது சீர்திருத்தக் காலம். நாம் நாடகங்களை நடத்தினாலும் நடத்தா விட்டாலும் தற்கால உலகம் என்னவோ சீர்திருத்தத்தையும் நாகரீகத்தையும் நோக்கித் தான் போய்க் கொண்டிருக்கும்.

இனி வருங்கால உலகமும் இம்முறையில் இன்னும் வேகமாகச் செல்லுமே தவிர, இராமராஜ்ய காலத்திற்குத் திரும்பிச் செல்லு

மென்று எண்ணுவது பைத்தியக்காரத்தனமாகும். எனவே இன்றைக்கு நம் நாடகங்களுக்கு வரவேற்பில்லாததுபோல் தோன்றினாலும் எதிர்காலத்தில் நமக்கு நல்ல ஆதரவு கிடைப்பது திண்ணம். இதனை மனதில் வைத்துக் கொண்டு நாம் வேலை செய்வோம். இவ்வழியாகவே நாம் சென்று கொண்டிருப்போமானால், சினிமா உலகமும் நம்மிடம் வந்தே தீரும். இப்பொழுதே சந்து பொந்துகளிலுள்ள புராணக் கதைகளை யெல்லாம் கட்டிப் பிடித்திழுத்து வந்து பேசும்படிக் காட்சிகளைக் குட்டிச் சுவராக்கித் தீர்த்து விட்டார்கள். பாவம்! குசேல முனிவர் கூட இனி பேசும்படத் திரையில் வந்து, தனது உடம்பிலுள்ள எலும்புகளையெல்லாம் 'எண்ணிக் கொள்ளுங்கள்' என்று காட்டிக் கொண்டு நிற்கப் போகிறார்.

இனி படக்காட்சிகளுக்குப் புதிய நாவல்களைத்தான் தேட வேண்டும் என்னும் அவசியம் வெளிப்பட்டு, அவ்வாறே நாவல்களும் பேசும் படக்காட்சிகளாக மாறி வருகின்றன. ஆதலின் இதனையே நாம் ஏற்ற சமயமாகப் பயன்படுத்திக் கொண்டு சீர்திருத்த நாடகங்கள் ஒன்று பலவாகப் பெருக்கி நடத்த முற்படுவோம். இந்த நாடகங்களையும் தயவு செய்து பாடல்களாக ஆக்கிவிடாதீர்கள். மூச்சு விடக்கூட இடமில்லாமல் பாட்டுகள் பாடினால் அதற்கும் பெயர்தான் நாடகம் என்று எண்ணம் இருக்கிறதே; அது தொழில் நடிகர்களிடம் மட்டுமல்லாமல், அமெச்சூர் நடிகர்களிடமும் தொத்திக் கொண்டிருக்கிறது.

அத்தொத்துநோய்க்கு நாமும் இடந்தர வேண்டாம். நம்முடைய முயற்சியில் 'உலக நிகழ்ச்சிகளைக் காட்டும் கண்ணாடியாக நாடகமேடையை அமைப்போம்'.முடிவாக, தோழர்களுக்கு விஷயத்தைக் கூறி இதனை முடிக்கிறேன். நாட்டின் பற்பல இடங்களிலும் தனித்தனியாக நாடக ஸ்தாபனங்களை நாம் அமைத்துக் கொண்டாலும் கூட நமக்கென்று 'ஒரு பொது சீர்திருத்த நாடக ஸ்தாபனம்' வேண்டும். அது நல்ல முறையில் ஆரம்பிக்கப்படல் வேண்டும். அதன்மூலம் நல்ல கவர்ச்சிகரமான சீர்திருத்த நாடகங்களை எழுதி வெளியிட வேண்டும். அந்நாடகங்களுக்கு இன்றியமையாத உடைகளையும், சீன்களையும்

> "இனி எதிர்காலம் இராமஇராஜ்யத்துக்கு திரும்பாது."

இன்னோரன்ன பிறவற்றையும் தயார் செய்ய வேண்டும். இம்முயற்சியில் வெற்றி பெறும் நாடகங்கள் பின்னர் பேசும் படக்காட்சிகளாக மாறி உலவ ஏதுவுண்டாகும்.

இதற்கான ஓர் மத்திய ஸ்தாபனத்தைக் கூட்டுறவு முறையில் (லிமிடெட் கம்பெனியாக) அமைத்து நடத்தலாமென்று எண்ணுகிறேன். பத்து ரூபாய்கள் கொண்ட பங்குகளாக 1000 பங்குகள் சேர்த்து அதனை மூலதனமாக வைத்துக் தக்க முறையில் நடத்துவோமானால் நமக்கு நல்ல பயன் ஏற்படுமென்பது நிச்சயம். இதனைத் தமிழர் நாட்டிலுள்ள நம் பொறுப்புள்ள தோழர்கள் கவனிக்க வேண்டு கிறேன்' - 'இரணியன்' நாடகத் தலைமை யுரையில் பெரியார் பேசியதன் விரிவாக்கமாயும் வேலைத் திட்டமாயும் இது அமைந்திருப்பது கவனத்தில் கொள்ள வேண்டியதாகும்.

**தகவல்கள்: குடிஅரசு**

## 'நிமிர்வோம்' வாசகர் வட்டம் பரவுகிறது!

தோழர்கள் ஆங்காங்கே 'நிமிர்வோம்' வாசகர் வட்டங்களை உருவாக்கி இதழில் வெளிவரும் கட்டுரைகளை விவாதித்து வருகிறார்கள்.

சென்னை, திருப்பூர், கொளத்தூர், நாமக்கல் உள்ளிட்ட நகரங்களில் நிகழ்வுகள் விவாதங்களாக தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

வாசகர் வட்டம் விரிவடையட்டும்.

- ஆசிரியர் குழு



# எது பிரிவினை மனப்பான்மை?

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

*பிண்ணாக் குநிறம் பிளவிலாக் குளம்புகள்*
*வெண்முகம் நீள்காது மிகமிக அழகு*
*தெருவில் புகுந்து தெருவிலென் வீட்டின்*
*அருகில் வந்ததும் அருமை! அருமை!*
*வீட்டினுள் புகுந்து காட்டுத் தழையென்று*
*சுவடிகள் துணிகளை மென்று தின்றதும்*
*சொல்லொணாப் புதுமை! சொல்லொணாப் புதுமை!*
*வாய்தி றந்து வண்ணம் பாடித்*
*தூய்மையைத் துடைத்ததும் மெச்சத் தக்கது.*
*துணிவாய் அடுக்களைச் சோற்றுப் பானையை*
*உருட்டி முழுதும் இனிதாய் உண்டதைப்*
*பாாக்கப் பார்க்கப் பார்ப்போர் கண்கள்*
*மகிழ்ச்சி மத்தாப் பாக விளங்கின.*
*தன்னுளம் தாங்காது வீட்டின் தலைவன்*
*வாய்பெ ருத்த வடக்குக் கழுதையே!*
*வெளியே போநீ என்று விளம்பினேன்*
*இதுபி ரிவினை மனப்பான்மை என்று*
*கத்துகின் றதே கழுதை! கத்துகின் றதே கழுதை!*

Printed by K.RAJENDRAN. Published and Owned by K.RAJENDRAN and Printed at
BEAUTIFUL PRINTER, 27/65, Devaraj Street, Royapettah,Chennai-600014 and Published at Old No.29,
New No.16, Ist Street, Journalists Colony, Srinivasapuram, Thiruvanmiyur, Chennai-600041. Editor:K.RAJENDRAN